# வசந்தத்தை தேடும் பூக்கள்

## ஆர்.மணிமாலா

### அத்தியாயம்- 1

அன்று முகூர்த்த நாள் என்பதால் வடபழனி கோவிலில் கூட்டம் அதிகமிருந்தது. மணக்கோலத்துடன் ஏராளமான ஆண்களும், பெண்களும் தவிப்புடன் தங்கள் குடும்பத்தாருடன் அமர்ந்திருந்தனர்.

தலை கவிழ்ந்து அமர்ந்திருந்த நிர்மலாவின் கண்கள் எந்நேரமும் கசிந்து விட தயாராக இருந்தது. பக்கத்தில் அமர்ந்திருந்த மணவாளனை பலவித உணர்வலைகள் புரட்டி போட்டுக் கொண்டிருந்தன.

புரோகிதர் கேட்டப் பொருட்களை ஒவ்வொன்றாய் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள் ஜெயலட்சுமி. மணவாளனின் தாய். புரோகிதர் சொல்லிக் கொண்டிருந்த மந்திரங்களை ஒருவித கிண்டலுடன் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர் பேரக்குழந்தைகள் நரேஷும், ஜோதியும். முறையே ஐந்து, மூன்று வயது.

"என் பாட்டி... சாதத்துல பிசைஞ்சு சாப்பிடற நெய்யை இந்த குடுமி தாத்தா நெருப்புல ஊத்தறார். நீயும் பார்த்துட்டு சும்மாவே இருக்கே?"

"ஷ்... சும்மாயிரு... அப்படியெல்லாம் பேசக்கூடாது" மெல்ல அதட்டினாள் நரேஷை.

"சித்தப்பா... இந்த தாத்தா உளர்றதெல்லாம் உனக்குப் புரியுதா? எனக்கு ஒண்ணுமே புரியலே?" மணவாளனின் காதருகே கிசுகிசுத்து குறும்பாய் சிரித்தான்.

"ஷ்... அமைதியாயிரு. ஐயர் மந்திரம் சொல்றப்ப குறுக்கே பேசினா சரியா படிப்பு வராதாம். எல்லாம் டைம்ல படிச்சதெல்லாம் மறந்துப் போகுமாம்." நரேஷுக்கு மட்டுமே கேட்கும் விதத்தில் கூறினான்.

"ஐய்யோ... நான் பேசமாட்டேன்ப்பா" கப்சிப்பென்று கையை கட்டிக் கொண்டு அடக்கமாய் உட்கார்ந்து விட்டான்.


சிறு புன்னகையுடன் நிர்மலாவின் பக்கம் திரும்பினான்.

அதே சமயம் அவளும் இவனைப் பார்க்க சட்டென தயக்கத்துடன் விழிகளை தாழ்த்திக் கொண்டாள் நிர்மலா.

ஜெயலட்சுமி நிர்மலாவின் முகத்தை கவனிக்கத் தவறவில்லை.

அவள் கையைப் பற்றி அழுத்திக் கொடுத்தாள்.

அதில் ஆயிரம் அர்த்தம் பொதிந்திருந்தது. மாமியாரை ஏறிட்டு வறண்ட



சிரிப்பொன்றை உதிர்த்தாள்.

ஜோதி அவளையே வைத்த கண் எடுக்காது பார்த்துக் கொண்டிருந்தது.

''நேரம் நெருங்கிடுச்சு... தாலியைக் கட்டுங்கோ'' மாங்கல்ய சுவிரை எடுத்து மணவாளனிடம் நீட்டினார் புரோகிதர்.

விரல் நடுங்க வாங்கிக் கொண்டவன் சிறிய தயக்கத்திற்கு பின் நிர்மலாவின் கழுத்தில் கட்டினான்.

நிர்மலா கண்களை மூடிக் கொண்டாள். பொங்கிய கண்ணீரை அடக்க வெகு சிரமப்பட்டாள்.

'இவர் பார்த்து விடுவாரோ? தவறாக எடுத்துக் கொள்வாரோ?' கண்ணில் விழுந்த அட்சதையை எடுப்பதுப் போல் கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

மணவாளன் அதை கவனிக்கத் தவறவில்லை.

'பாவம்' என்று பரிதாபப்பட்டான்.

''அக்னியை வலம் வரணும். ரெண்டு பேரும் கையை பிடிச்சுக்குங்க.''

எழுந்துக் கொண்டனர்.

நிர்மலாவின் கையைப் பற்றிக் கொண்டான். அத்தனை நரம்புகளும் நடுங்கிக் கொண்டிருப்பது துல்லியமாய் தெரிய... இறுக, ஆறுதலாக பற்றிக் கொண்டான் மணவாளன்.

சுற்றி முடித்தபின் ஜெயலட்சுமியின் காலில் விழுந்து வணங்கினர்.

மனநிறைவுடன் வாழ்த்தினாள்.

''எல்லா சந்தோஷங்களையும் குறைவில்லாமப் பெற்று நீடுழி வாழணும்''

நிர்மலா மாமியாரையே சில கணங்கள் பார்த்து விட்டு, தாங்க மாட்டாமல் அவள் தோளில் சாய்ந்து விசும்பினாள்.

குழந்தைகள் மிரட்சியுடன் அவளையே பார்த்தன. ஜோதிக்கும் அவள் அழுவதைப் பார்த்து உதடுகள் மடங்கி, அழுவதற்கு தயாரானாள்.

மணவாளன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''என்னடா? ஏன் அழறே? ஒண்ணுமில்லே... அழக்கூடாது என்ன.''

''சரி'' என்று தலையாட்டியது.

ஜெயலட்சுமி மருமகளின் முதுகை அன்பாய் வருடிக் கொடுத்தாள்.

''சேச்சே... என்னம்மா இது? எல்லோரும் நம்மையே பார்க்கிறாங்க பாரு. கண்ணைத் துடை! கசப்புகளை மறந்திடு. இனி வர்ற ஒவ்வொரு நாளும் உனக்கு இனிமையான நாள் தான். நீ அழறதைப் பார்த்து ஜோதி அழறாப் பாரு. மணவாளனும் வருத்தப்படுவான். அவனுக்காகவாவது நீ அழறதை நிறுத்த மாட்டியா நிர்மலா?'' என்று அவள் கன்னத்தில் முத்தமிட்டாள் அன்பாக.

அவ்வளவு தான்! சட்டென விலகி கண்களை துடைத்துக் கொண்டாள்.

''மன்னிச்சுக்குங்கம்மா!'' என்றவள் மணவாளனையும் மன்னிப்பு கேட்கும் பாவனையுடன் பார்த்தாள்.

அதற்காகவே காத்திருந்தாற்போல் புன்னகைத்தான் மணவாளன்.

ஜோதியை நோக்கி கையை நீட்டினான். அவளிடமிருந்து விடுபட்டு இவனிடம் வந்து ஒட்டிக் கொண்டது.

அவளை தூக்கி வைத்துக் கொண்டான்.

புரோகிதருக்கு பணம் கொடுத்து விட்டு, அங்கிருந்த பொருட்களை சேகரித்து ஒரு வயர் கூடையில் அடுக்கிக் கொண்டனர்.

எந்த ஆரவாரமும் இல்லாமல், யாரையும் அழைக்காமல் எளிமையாய் அந்த திருமணம் நடந்து முடிந்து விட்டது.

ஒரு டாக்சியில் ஏறி வீடு நோக்கி சென்றனர். புடவை வாசமும், பூக்களின் வாசமும் ஜோதிக்கு பிடித்துப் போக அவள் மடியிலேயே அமர்ந்து மார்பில் தலை சாய்த்துக் கொண்டாள். அவள் தலையின் மேல் தன் முகத்தை வைத்து அழுத்திக் கொண்டாள் நிர்மலா.

''சித்தப்பா ஏன் உனக்கு மாலைப் போட்டாரு?''

முதல் கேள்வியை ஆரம்பித்தாள் ஜோதி.

சங்கடத்துடன் மணவாளனைப் பார்த்தாள்.

''ஜோதி... இப்படி வா! ரெண்டு மாடி பஸ் காட்டறேன்'' முன்புறம் அமர்ந்திருந்த ஜெயலட்சுமி அழைத்தாள்.

''ஹை... ரெட்டைமாடி பஸ்ஸா? எங்கே எங்கே?'' அவளிடமிருந்து தாவி முன்பக்கம் சென்றாள் ஜோதி.

''பாட்டி... நானும் அங்கே வந்திடறேன் பாட்டி!'' என்றான் நரேஷ்.

''மணா... அவனை இந்தப்பக்கம் தூக்கி விடுப்பா!''

மணவாளன் நரேஷை லாவகமாக தூக்கி முன்பக்கம் இறக்கி விட்டான்.

அரைமணி நேர பயணத்திற்கு பின் டாக்சி அந்த வீட்டின் முன் நின்றது.

இறங்கினர்.



அக்கம் பக்கத்து வீடுகளின் வாசல்களிலும், ஜன்னல்களிலும் தலைகள் தெரிந்தன.

நிர்மலா கூனிக்குறுகிப் போனாள்.

''ஒரு நிமிஷம் இருங்க. ஆரத்தி எடுக்க பக்கத்து வீட்டுக்காரம்மாவை அழைச்சிட்டு வர்றேன்!''

விரைவாக சென்ற அம்மாவை தடுத்தான் மணவாளன்.

''வேண்டாம்மா... நீயே எடு!''

''நானா? நான் எப்படி?''

''சுமங்கலி அமங்கலிங்கற வித்தியாசம் எனக்குப் பிடிக்காதும்மா! எங்க வாழ்க்கை நல்லாயிருக்கணும்னு உன்னைத் தவிர வேறு யாரு வேண்டிக்கப் போறாங்க. நீயே ஆரத்தி எடு!'' அழுத்தமாய் ஒலித்தது குரல்.

நெகிழ்ந்துப் போன ஜெயலட்சுமி ஆரத்தியை கரைத்து, கற்பூரம் ஏற்றி அவர்களை வரவேற்றாள்.

''என்னமோ, இப்பதான் முதல் கல்யாணம் மாதிரி அலம்பலை பாரு!'' அடுத்த வீட்டு அவலை மெல்லும் நாக்குகளில் ஒன்று வார்த்தையை கத்தியாய் வீச...

அதை அசட்டை செய்து, நிர்மலாவின் கையை இறுகப் பற்றி உள்ளே அழைத்துச் சென்றான் மணவாளன்.

## 2

பூஜையறைக்கு அவர்களை அழைத்துச் சென்றாள் ஜெயலட்சுமி.

சாமி படங்களுக்கு பூச்சரம் போடப்பட்டு விளக்கேற்றப்பட்டு இருந்தது.

ஜெயலட்சுமி நிர்மலாவிடம் தீப்பெட்டியை கொடுத்தாள்.

''சத்யமூர்த்தி படத்துக்கு விளக்கேற்று நிர்மலா!''

நிர்மலா அந்தப் படத்தின் முன் வந்து நின்றாள்.

களையான முகத்துடன், கவர்ந்திழுக்கும் சிரிப்புடன் பெரிய சைஸ் போட்டோவினுள், ரோஜா மாலையினூடே இவர்களையே தீர்க்கமாய் பார்த்துக் கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி.

கண்மூடி கைகூப்பி வணங்கிய மணவாளன் சத்தியமூர்த்தியின் சாயலை பெரும்பாலும் பெற்றிருந்தான்.

நிர்மலா போட்டோவையே இமைக்காமல் பார்த்தாள்.

'உங்களுக்கு இந்த கல்யாணத்துல விருப்பமா, இல்லையான்னு தெரியாது. ஆனா, குழந்தைகளுக்காக, அவர்களோட எதிர்காலத்துக்காக, என்னோட பாதுகாப்புக்காக, உங்கம்மாவோட வற்புறுத்தலுக்காக... உங்களுக்கு சொந்தமான என் கழுத்தில் உங்க தம்பியை தாலிக்கட்ட அனுமதிச்சேன். இதுவரை நீங்க தான் என்னை வழி நடத்தி வர்றீங்கன்றதை நம்பறேன். இனி வரும் நாட்களை எந்த பிரச்சினையும் இல்லாம எதிர்நோக்க... தெய்வமாய் நின்று என்னை வழி நடத்தணும்!'

மனப்பூர்வமாய் வேண்டிக் கொண்டு விளக்கேற்றி வணங்கினாள். கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் கன்னத்தில் கோடு போட்டது.

அவளை ஏறிட்ட மணவாளன் நீண்டதொரு பெருமூச்சை வெளியிட்டபடி, அந்த அறையை விட்டு வெளியேறினான்.

''என்னம்மா இது? எப்பப் பார்த்தாலும் அழுதுக்கிட்டிருக்கலாமா? உன் மனசுல உள்ள வேதனையும், சுமையும் எனக்குத் தெரியும். அதே சமயம் மணவாளனையும் கொஞ்சம் நினைச்சுப்பார். நிழல் தர்ற மரமானாலும் அவனுக்கும் மனசுக்கு நிறைவு வேணுமில்லையா? இதுவரை அழுததெல்லாம் போதும். இனி, நீ சிரிச்சுக்கிட்டே இருக்கணும். சரியா?''

''ம்...'' என்றாள் கண்ணீரை துடைத்துக் கொண்டே!

''பால் தர்றேன்.. மணாக்கிட்டே கொண்டு போய் கொடு!''

''சரி..'' என்றவள் அவள் பின்னேயே கிச்சனிற்குள் நுழைந்தாள்.

''நீ.. எங்கே வர்றே?''

''நான் பால் காய்ச்சறேன்.''

''அதெல்லாம் ஒண்ணும் தேவையில்லை. கல்யாணப் பொண்ணா, லட்சணமா, ஒரு ஓரமா போய் உட்காரு!'' யதார்த்தமாய் சிரித்தபடி சொன்னாள்.

ஆனால், கண்ணில் ஊசியை குத்தியது போல் வலித்தது நிர்மலாவிற்கு.

''நானென்ன புதுமணப் பெண்ணாம்மா! உங்களுடைய அதே பழைய மருமகள் தானே?''

ஜெயலட்சுமி மருமகளை துளைத்து விடுபவளைப் போல் பார்த்தாள்.

''இப்பவும், எப்பவும் நீ என் மருமகள் தான். ஆனா, மணவாளன் புதுமாப்பிள்ளை இல்லையா? அவனுக்காகவாவது நீ இப்படி பேசறதை நிறுத்தணும் நிர்மலா!''

''.....''

''போம்மா.. போய் உட்காரு!''

சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

சிறிய வீடு தான் அது.

மூன்று மாதத்திற்கு முன்பு தான் சேலத்திலிருந்து இங்கே குடிப்பெயர்ந்தார்கள்.

விசாலமான ஹால், ஒரு படுக்கையறை, குளியலறை, கிச்சன் அவ்வளவு தான்.

திருமணமான ஐந்தே வருடத்தில் மஞ்சள் காமாலைக்கு கணவனை பறிகொடுத்திருந்த ஜெயலட்சுமிக்கு தன்னம்பிக்கை அதிகம். பெண்களுக்கு நியாயமான உரிமைகள் கட்டுப்பாடின்றி கிடைக்க வேண்டும் என்பதில் தீவிரமாய் இருப்பவள். அதிகம் படிக்காத ஜெயலட்சுமி, அந்த காலத்திலேயே, கணவனை இழந்திருந்தாலும், குங்குமத்தையும், பூவையும் எடுக்க மறுத்தாள்.

பெற்றவர்களும், உறவினர்களும் கண்டித்தும், புறம்பேசியும், எதற்கும் அசைந்துக் கொடாதவள்.

தன் இரு பிள்ளைகளையும் ஒழுக்கத்துடன் வளர்த்து ஆளாக்கினாள். பிள்ளைகளின் நியாயமான எந்த விருப்பத்திற்கும் அவள் தடை சொன்னதில்லை. அதே சமயம் தேவையில்லை என்று உணரத் தலைப்பட்டால் தயவு தாட்சண்யமின்றி மறுத்து விடுவாள்.

சத்தியமூர்த்தி- நிர்மலா திருமணத்தை நடத்தி வைத்தவளும் அவள் தான்.

இப்போது...

மணவாளன்- நிர்மலா திருமணத்தை நடத்தி வைத்ததும் அவள் தான்.

இளம் விதவையாய் இருந்து இரண்டு பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கும் வரை படக்கூடிய துன்பங்கள், துயரங்களை அவளைத் தவிர வேறு யாரால் உணர முடியும்?

அதுவும் மருமகள் நிர்மலாவை அவள் என்றுமே மருமகளாய் பார்த்ததில்லை? மகளாகத் தானே பாசமழைப் பொழிந்தாள்.

கசகசத்த பட்டுப்புடவையை கழற்றி காட்டன் புடவையை சுற்றிக் கொள்ள வேண்டும் போல் தோன்றிய எண்ணத்தை உடனடியாக களைந்தாள் நிர்மலா.

'வேண்டாம். இந்த சூழ்நிலையில் நான் யதார்த்தமாய் செய்கின்ற விஷயங்கள் கூட இவர்கள் மனதை காயப்படுத்த வாய்ப்பிருக்கிறது. நடக்கக் கூடாததெல்லாம் என் வாழ்க்கையில் நடந்து விட்டாலும், கடவுள் நல்ல மனிதர்களை என்னுடன் அனுப்பி வைத்திருக்கிறான். இவர்கள் மனதை புண்படுத்தாமல் கவனமாய் நடந்துக் கொள்வது மிகமிக அவசியம்.'

சற்று நேரத்தில் பால் தம்ளருடன் வந்த ஜெயலட்சுமி அவளிடம் கொடுத்தாள்.

''கொண்டு போய் கொடு!''

வாங்கிக் கொண்டு மணவாளன் இருந்த அறையை நோக்கிச் சென்றாள்.

பின்னேயே நரேஷும், ஜோதியும் ஓட முற்பட இருவரையும் பிடித்திழுத்து அமர

## காதல் பரிசு

**இ**ங்கிலாந்து நாட்டு கடற்படை தளபதியாக இருந்த லார்டு நெல்சன் 1802-ம் ஆண்டு தனது காதலி எம்மாவுக்கு ஒரு பரிசு கொடுத்தார். அது என்ன தெரியுமா? ஆடையில் தைத்துக் கொள்வதற்கான புருச் அதாவது கல்பதித்த ஊசி.

இங்கிலாந்தில் ஒரு குடும்பத்தில் பத்திரமாக இருந்த அந்த காதல் பரிசு சமீபத்தில் விற்பனைக்கு வந்தது. ரூ. 60 லட்சத்துக்கு மேல் ஏலம் போன அந்த ஊசி காதல் சின்னம் என்றுமே விலைமதிப்பு இல்லாதது என்பதை உணர்த்தியது.

வைத்துக் கொண்டாள்.

''விடு பாட்டி... நான் அம்மாகிட்டே போகணும்!'' திமிறினான் நரேஷ்.

''ஒழுங்கா.. நல்லப் பிள்ளையா நான் சொல்றதை கேட்கறதாயிருந்தா உங்க ரெண்டு பேருக்கும் அதிரசமும், லட்டும் தருவேன்.''

''கேட்கறோம் பாட்டி. அம்மா பின்னாடி ஓடக்கூடாது. அவ்வளவு தானே? போக மாட்டோம். ஜோதி இப்படி அண்ணன் பக்கத்துல வந்து உட்காரு.'' பெரிய மனிதனைப் போல் பேசியவனை கன்னத்தில் செல்லமாய் தட்டிவிட்டு கிச்சனை நோக்கிச் சென்றாள்.

ஜோதியும் சமர்த்தாய் அண்ணனின் பக்கத்தில் அமர்ந்துக் கொண்டது.

தட்டில் இனிப்பு வகைகளுடன் அவர்களருகே அமர்ந்து கொண்டாள் ஜெயலட்சுமி.

ஆவலுடன் ஆளுக்கொன்றை எடுத்து சாப்பிட்டனர்.

''பாட்டி... சித்தப்பா எதுக்காக எங்கம்மா கழுத்திலே மாலைப் போட்டாங்க?'' மறுபடி ஆரம்பித்தான் நரேஷ்.

சிறு குழந்தைகள் தங்கள் கேள்விக்கு விடை தெரியும் வரை நச்சரித்துக் கொண்டுதான் இருப்பார்கள்.

சமாளிக்க முடியாது.

''அம்மாவுக்கும், சித்தப்பாவுக்கும் கல்யாணமாயிடுச்சு நரேஷ்.''

''அதெப்படி பாட்டி? அதான் எங்கப்பாவுக்கும், எங்கம்மாவுக்கும் கல்யாணம் ஆயிடுச்சே? அதோ... போட்டோ கூட இருக்கே?''

மாலையும் கழுத்துமாய் திருமண கோலத்தில் சத்தியமூர்த்தியும், நிர்மலாவும் வீற்றிருந்த போட்டோவை சுட்டிக் காட்டினான்.

''பெரிய மனுஷங்க மாதிரி பேசக்கூடாது. பெரியவங்க சொல்றதை கேட்டு நடக்கணும். இனி சித்தப்பாவை சித்தப்பான்னு கூப்பிடக்கூடாது. அப்பான்னு தான் கூப்பிடணும். என்ன?''

''ஏன் பாட்டி? அவர் சித்தப்பா தானே?''

''இனி உங்களுக்கு எல்லாமே அவர்தான்டா. உனக்கு அவரை பிடிக்குமில்லையா?''

''ம்.. ரொம்ப பிடிக்குமே.''

''அப்ப அப்பான்னு கூப்பிடு.''

''சரி பாட்டி.''



## 3

**அ**து மணவாளனின் படுக்கையறை என்பதால் அதிகமாய் அங்கே சென்றதில்லை. எப்போதாவது அறையை சுத்தப்படுத்த செல்வதோடு சரி!

அறைக்குள் ஜன்னலோரம் மணவாளன் நின்றிருந்தான். இவள் வருவதை மெல்லிய கொலுசு சப்தத்தின் மூலம் அறிந்தவன் திரும்பினான்.

அவன் முகத்தில் படர்ந்திருந்த சங்கடமும், வேதனையும், அவளை கலங்கடித்தது.

'அவசரப்பட்டு விட்டோமோ? இந்த திருமணம் நடந்திருக்கக்கூடாதோ?'

தயக்கம் அவள் கால்களை கட்டிப் போட, அங்கேயே நின்றிருந்தாள்.

அவன் தன்னை நோக்கி வருவான், கட்டிலில் அமர்வான் என்று எதிர்பார்த்தவளுக்கு சற்றே ஏமாற்றம்.

அதற்கு மேல் அவளால் ஒரு அடிக்கூட எடுத்து வைக்க முடியவில்லை.

பால் தம்ளரை டீப்பாய் மீது வைத்தாள். அந்த செய்கையே தன்னை அவமானப் படுத்தியதுப் போல் உணர்ந்தாள்.

முகம் கருங்க ஜன்னல் பக்கம் தலையை திருப்பிக் கொண்டான்.

'கடவுளே... நான் என்ன செய்வேன்?, என்னை யாரும் புரிந்துக் கொள்ள மாட்டார்களா?' தவித்தாள்.

''பா..பால்!''

''வே... வேண்டாம்!'' அவளை மேலும் சங்கடப்படுத்த விரும்பாமல் அவளைத் தாண்டி அறையை விட்டு வெளியேறினான்.

ஜெயலட்சுமி மகனைப் பார்த்ததும் எழுந்து ஓடிவந்தாள்.

''என்ன... மணா... எங்கே போறே?''

''தலைய வலிக்கிறாப்பல இருக்கு! வெளியேப் போய்ட்டு வர்றேன்.''

''தலைய வலிக்குதா? நேத்தெல்லாம் தூங்காம கல்யாண வேலையா அலைஞ்சிகிட்டிருந்தேயில்லே? அதான். வெயில் அதிகமாயிருக்கு. இந்த நேரத்தில வெளியேப் போனா இன்னும் தலைவலிக்கும். கொஞ்சமிரு ஸ்ட்ராங்கா காபி போட்டுத்தர்றேன். மாத்திரைப்போட்டு குடிச்சிட்டு படுத்துக்க சரியாப்போய்டும்.''

"இல்லேம்மா... நான் வெளியேப் போறேன். பாவம் அண்ணியும் நேத்தெல்லாம் தூங்கலே. அவங்களும் டயர்டா இருப்பாங்க. அவங்க அங்கே தூங்கட்டும்."

"மணா..." என்றாள் அம்மா அதிர்ச்சியுடன். "என்னப்பா பேசறே? அண்ணி, இண்ணியின்று. இப்ப அவ உன் பொண்டாட்டி!"

"மாற்றங்கள் தேவைன்னு தான் இந்த கல்யாணம் நடந்தது. மாறும். ஆனா, அதெல்லாம் உடனே மாறணும்னு நினைச்சா அது செயற்கையாகத்தான் இருக்கும். பொறுமையா இரும்மா! நான் இலையுதிர் காலத்துக்காக காத்திருக்கிறேன். தேவையில்லாததெல்லாம் உதிர்ந்து, புதிதாய் துளிர்விடும் வசந்தகாலத்துக்காக காத்திருப்போம். அதுதான் எல்லோருக்கும் நல்லது. பாவம்... அவங்க மனசையும் நாம புரிஞ்சுக்கணும் இல்லையா? மந்திரத்தால மாங்காய் வரவைக்கிற மேஜிக் இல்லேம்மா வாழ்க்கை! இலைவிட்டு, பூ பூத்து, காய் காய்க்கட்டும். அதுக்கு காத்திருக்கணும். நான் வர்றேன்ம்மா! மதியம் சாப்பாட்டுக்கு என்னை எதிர்பார்க்காதே!" கூறிவிட்டு போய் விட்டான்.

அவன் ஆதங்கத்தோடு சொன்னானா? ஆத்திரத்தோடு சொன்னானா? யதார்த்தமாய் பேசினானா? என்று அவளுக்கேப் புரியவில்லை. ஆனால், அவன் கூற்றில் மறுக்க முடியாத உண்மை இருப்பதையும் ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

ஜெயலட்சுமி அறையிலிருந்த நிர்மலாவிடம் சென்றாள்.

"என்ன நிர்மலா? என்ன ஆச்சு? நீ அவன்கிட்டே வருத்தப்படற மாதிரி ஏதாவது பேசினியா?"

"பால் சாப்பிடுங்கன்னு சொன்னேன். அவர் வேண்டாம்னுட்டார்! நான் வேற ஒன்னும் சொல்லலே."

டீப்பாய் மீதிருந்த பால் தம்ளரை பார்த்தாள்.

"கையிலே கொடுக்கலையா?"

"இ...இல்லே..."

"பாரு நிர்மலா! உன் மனசு எனக்குப் புரியாம இல்லே. உன் நன்மைக்காதான் இதெல்லாம்னு புரிஞ்சுக்கிட்டா எதுவும் தப்பாத் தெரியாது. இங்கே பாலை வச்சிட்டு சாப்பிடுங்கன்னு சொன்னா... எந்த ஆம்பளைக்கு கோபம் வராது? நீ ஒரு கோடு போட்டுட்டு இங்கேயே நின்றிருந்தா... அதைத்தாண்டி வர அவனுக்கு எப்படி தைரியம் வரும்?"

"என்னால முடியலேம்மா... முடியலே..." கதறியபடி ஜெயலட்சுமியின் தோளில் சாய்ந்தாள்.

"அழாதே... அழாதே நிர்மலா. உனக்கு எப்படி சொல்லி புரிய வைக்கறதுன்னே தெரியலே. அந்தக் கடவுள்தான் இதுக்கொரு வழியை காட்டணும்... ஹூம்...!" பெருமூச்சு விட்டாள்.

**பை**க்கில் சிட்டியை வலம் வந்து ஓய்ந்துப் போனான் மணவாளன்.

கடைசியாய் வானில் நிலவு எட்டிப் பார்க்கும் வேளையில் கடற்கரை மணலில் வந்தமர்ந்தான். இந்தத் திருமணம் நடக்க பெரிதும் காரணமாக இருந்தவள் அம்மாதான். அவள் இந்தப் பேச்சை எடுத்தபோது எளிதில் சம்மதிக்கவில்லை என்றாலும் அதில் இருந்த நியாயத்தையும், மனிதாபிமானத்தையும் கருத்தில் கொண்டு தான், தன் விருப்பங்கள் அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு சம்மதித்தான்.

'அண்ணி, அண்ணி என்று வாய் நிறைய அழைத்து விட்டு, திடீரென்று 'நிர்மலா' என்று உரிமையாடு அழைக்கச் சொன்னால்?

எனக்கே இவ்வளவு சங்கடமாய் இருக்கிறதே! பாவம்... அவங்களுக்கு எப்படியிருக்கும்? அண்ணனுடன் ஐந்து வருடம் சந்தோஷமாய் வாழ்ந்து விட்டு, இரண்டு குழந்தைகளுக்குத் தாயான பிறகு, மறுமணம், அதுவும் கணவனின் தம்பியையே மணப்பதென்று அவஸ்தை தரக்கூடிய விஷயமல்லவா? பரிதாபப்பட்டுதான் நான் மணந்துக் கொண்டேன் என்றாலும், ஒரு கணவனாய் தரக் கூடிய அத்தனை சந்தோஷங்களையும் தர வேண்டும் என்று தாலிக்கட்டும் போதே முடிவுப் பண்ணிய விஷயமல்லவா? ஆனால், அவங்க மனசு உடன்படாத போது நானே வலிய எந்த முயற்சியையும் செய்து விட முடியாதல்லவா? என்ன பண்ணப் போகிறேன்? இனிவரும் நாட்களை எப்படி எதிர்கொள்ளப்போகிறேன்?'

யோசித்து, யோசித்து குழப்பம் தான் அதிகமானது.

வீட்டிற்கு போகவும் தைரியமின்றி வெகுநேரம் அங்கேயே அமர்ந்திருந்தான்.

**எ**ளிமையான அலங்காரத்திலும் அழகாய் ஜொலித்தாள் நிர்மலா.

ஜெயலட்சுமி தான் அவளை அலங்கரித்திருந்தாள்.

ஐந்து வருடம் முன்பு இதே ஜெயலட்சுமி தான் நிர்மலாவை முதலிரவிற்காக அலங்கரித்தாள். அப்போது நிர்மலாவின் மனசிற்குள் கும்மாளமிட்ட உற்சாகத்தை என்னவென்று கூறுவது? கனவுகளோடும், கற்பனைகளோடும், காதலித்து கரம்பிடித்த சத்தியமூர்த்தியின் மார்பில் படுத்துறங்கும் ஆர்வமுமாய்... அவள் ஒவ்வொரு கணத்தையும் எதிர்நோக்கிய ஆவலும்... மீண்டும் முடியுமா? வருமா?

வீணாகிப் போன என்னால், இன்னொரு ஜீவனின் வாழ்க்கையும் வீணாகப்போகிறதா?

இந்த திருமணத்தில் அவளுக்கு கொஞ்சமும் விருப்பமில்லை.

தாயை விட, தெய்வத்தை விட மேலான, ஜெயலட்சுமியின் பிடிவாதத்தின் முன் அவளால் போட்டியிட முடியவில்லை.

ஜெயலட்சுமி மகனின் வரவிற்காக வாசலிலேயே காத்திருந்தாள்.

'காலையில் வீட்டை விட்டுப் போன பிள்ளை இரவு பத்தாகியும் வரவில்லையே! எங்கே போயிருப்பான்? இதென்ன பொறுப்பில்லாத்தனம்? பாவம்... நிர்மலா என்ன நினைப்பாள்? தப்புப் பண்ணிவிட்டோமோ? இந்த திருமணம் நடந்திருக்கக் கூடாதோ? அவசரப்பட்டு விட்டேனோ?

இல்லை. நிர்மலாவிற்கு இதுதான் நல்ல தீர்வு. மணவாளன் சொன்னதுப்போல் மாற்றங்களெல்லாம் உடனே நிகழ்ந்து விட வேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. பொறுப்போம். சம்பிரதாய ரீதியாக அவர்களுக்கு பலமான முடிச்சை போட்டு விட்டோம். எல்லாம் நல்லதே நடக்கும்.'

அவளை மேலும் அரை மணி நேரம் அலைக்கழித்து விட்டு வந்து சேர்ந்தான் மணவாளன்.

"என்ன மணா இது? நீ பண்றது உனக்கே நல்லா இருக்கா? இப்ப மணி என்ன தெரியுமா?"

"பசிக்குதும்மா... சாப்பாடு போடு!" என்று அவளை கடந்து உள்ளேச் சென்றான் கேட்ட கேள்விக்கு பதில் தராமல்.

அதற்கு மேல் அதைப்பற்றி பேசுவது நாகரீகமல்ல என்பதை அறிவாள்.

மகனுக்கு சாப்பாடு பரிமாற... அமைதியாய் சாப்பிட்டு முடித்தான்.

## 4

"**போ**ம்மா" நிர்மலாவை அனுப்பி வைத்தாள்.

நெஞ்சு கனக்க அறைக்குள் நுழைந்தவள் கண்களை விரித்தாள்.

கட்டிலில் நன்றாக உறங்கி விட்டிருந்த மணவாளனிடமிருந்து லேசான குறட்டை சப்தம் வந்துக் கொண்டிருந்தது.

ஒரு பெரிய சங்கடத்திலிருந்து தப்பித்த நிம்மதியோடு மூச்சை வெளியிட்டாள் நிர்மலா.

அவன் உறக்கத்தை கலைக்காதவாறு கவனமாக கட்டிலிலிருந்த தலையணையை எடுத்து தரையில் போட்டு படுத்துக் கொண்டாள்.

மெல்ல தலையைத் திருப்பி அவளைப் பார்த்து விட்டு கண்களை மூடி உறங்க முற்பட்டான் மணவாளன்.

அந்த அறைக்குள் படுத்திருப்பது முள்ளின் மீது படுத்திருப்பது போன்று இருந்தது நிர்மலாவுக்கு.

"எங்கேயோ ஆரம்பித்த வாழ்க்கை... இதோ... இங்கே மணவாளனின் படுக்கையறை வரை வந்து விட்டிருக்கிறது. இது எங்கே கொண்டு போய் முடியும்?" அழுந்த மூடிய கண்களோரம் ஈரம் கசிந்தது நிர்மலாவுக்கு.

அவளுடைய நினைவலைகள் ஐந்து வருடம் பின்னோக்கி புரண்டது.

**க**ண்ணாடி முன் நின்றிருந்த நிர்மலா, தன்னை இப்படியும் அப்படியுமாக பார்த்துக் கொண்டாள்.

செப்பு சிலைப்போன்ற அவள் உடலை இளம் பிங்க் நிற சுடிதார் அழகாய் கவ்விக் கொண்டிருந்தது.

'யூ' வளையில் கத்தரிக்கப்பட்டு, அடர்ந்து, படர்ந்திருந்த கூந்தலை அப்படியே விரிய விட்டால் அழகாக தான் இருக்கிறது. ஆனால் இப்படி விரியவிட்டால் சத்யாவுக்கு பிடிக்காதே! பின்னலிட்டு தலையில் கொஞ்சமாவது பூ வைத்தாக வேண்டும்.

தளர பின்னலிட்டு ஒற்றை ரோஜாவை

காதோரம் செருகினாள்.

உயர்ரக தேக்கினால் இழைத்து வடிவமைக்கப்பட்டிருந்த டிரஸ்ஸிங் டேபிள் அது! விதவிதமான நிறங்களில் லிப்ஸ்டிக்கும், மேக்கப் உபகரணங்களும், செண்ட்டுமாய் நிறைந்திருந்தது. அத்தனையும் வெளிநாட்டு தயாரிப்புகள். அதையெல்லாம் நிர்மலா பல மாதங்களுக்கு முன்பு வரை உபயோகித்துக் கொண்டிருந்தாள். ஆனால் இப்போது அவைகளைத் தொடுவதேயில்லை. இதிலெல்லாம் சத்யாவுக்கு விருப்பமில்லை. அதனாலேயே இவளுக்கும் பிடிப்பதில்லை.

''அம்மா... அம்மா...'' இங்கிருந்தபடியே குரல் கொடுத்தாள்.

களையான முகத்துடன் கழுத்து நிறைய நகைகளுடன் புவனேஸ்வரி அறைக்குள் நுழைந்தாள்.



''என்ன நிம்மி?''

''என் பீரோவுக்குள்ளே பிளாக் கலர் ஷால் இருந்ததே எங்கே?''

''ஏன் கேக்கறே? இந்த சுடிதார்க்கு இதோ இந்த பிங்க் கலர் ஷால் தான் இருக்கே! அப்புறமென்ன?''

''இது வேண்டாம்மா. ரொம்ப காண்ட்ராஸ்ட்டா இருக்கு. பிளாக் ஷால் கொஞ்சம் திக்காயிருக்கும்''

புவனேஸ்வரி மகளை வியப்புடன் பார்த்தாள்.

''என்னம்மா அப்படிப் பார்க்கறே?''

''நீ ரொம்ப மாறிப் போய்ட்டே நிம்மி!''

''நானா?''

''ஆமாம்! முன்னேயெல்லாம் எப்படி விதவிதமா டிரஸ் பண்ணுவே? மிடியும், ஜீன்ஸூம் தான் உனக்கு ரொம்பப்பிடிக்கும். நான் வற்புறுத்தினாக் கூட ஒரு நல்ல நாள்ல சேலைக் கட்டிக்க மாட்டே! அப்படிப்பட்டவ, இப்ப என்னடான்னா, சேலையும் சுடிதாரையும் தவிர, எதையும் போடறதில்லை. மிடி போட்டா கால் தெரியுதுங்கறே! ஜீன்ஸ் போட்டா கவர்ச்சியா இருக்குங்கறே! நீ கேட்டியேங்கறதுக்காக உங்கப்பாவும், அண்ணனும் வாங்கி அனுப்பிய செண்ட், மேக்கப் செட் எதையும் இப்ப தொடறதில்லே. எந்நேரமும் தலைய விரிச்சுப் போட்டுட்டு நிர்ஞ்சிட்டிருந்தவ, இப்ப பின்னல் போட்டு வச்சுக்காம போறதில்லை. என்னடி ஆச்சு உனக்கு? ஏன் சாமியார் மாதிரி மாறிட்டே?''

வாய்விட்டு சிரித்தாள் நிர்மலா.

''ஏன்டி சிரிக்கிறே?''

''பின்னே சிரிக்காம? உடம்பை மூடி மறைக்க டிரஸ் போடறது தப்பா? இல்லே... லட்சணமா பின்னல் போட்டு பூ வச்சிட்டுப் போறது குற்றமா? நான் இப்படி மாறினது உனக்கு சந்தோஷமா இல்லையாம்மா?''

''ஏன் இல்லாம? பெத்தப் பொண்ணு கண்டவனும் பார்க்கிற அளவுக்கு அலங்கோலமா டிரஸ் பண்றதை எந்தத் தாயும் விரும்ப மாட்டாடி. நான் எத்தனையோ முறை சொல்லியும் கேட்காதவ, இப்ப திடீர்னு எப்படி மாறிட்டேன்னு தான் ஆச்சர்யமாயிருக்கு! நான் என்ன கிழவியா? பட்டிக்காடா, காலேஜுக்கு எல்லாம் சேலையை கட்டிட்டு போறதுக்குன்னு கேட்டவ... இப்ப இழுத்துப் போர்த்திக்கிட்டு அதே காலேஜுக்கு தானே போறே? இப்ப நீ என்ன கிழவியா, பட்டிக்காடா?''

''ஒண்ணுமில்லே. எல்லாம் ஒரு ஞானோதயம் தான். எல்லாத்தையும் மூடி வச்சா தான் அழகுன்னு புரிஞ்சுக்கிட்டேன். போதுமா? இந்த பதில் திருப்தியா?''

''என்னமோ போ! வா... டிபன் ரெடியாயிருக்கு வந்து சாப்பிடு!''

''வர்றேன்... நீ போ!''

புவனேஸ்வரி படியிறங்கிப் போனாள்.

பங்களாவின் முகப்பைப் பார்த்தாலே செல்வ செழிப்பான குடும்பம் என்பதை புரிந்து கொள்வார்கள். பணத்தை இழைத்து ஒவ்வொரு அடியையும் கட்டியிருந்தார்கள். உயர்ரக கிரானைட்டில் பளபளத்தது பங்களா.

புவனேஸ்வரியின் கணவர் கங்காதரனும், மகன் அவினாஷூம் மஸ்கட்டில் பணிபுரிகிறார்கள். பத்து வருடமாய் அங்கே தான் பணி. இரண்டு வருடத்திற்கு ஒருமுறை இரண்டு மாத விடுமுறையில் தாய்நாட்டிற்கு வந்து செல்வார்கள். நிர்மலா அவினாஷிற்கு அடுத்துப் பிறந்தவள். எல்லோருக்கும் ரொம்பச் செல்லம். அவளை தங்கத்தாலேயே இழைத்து புகுந்த வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்பது தான் அப்பாவிற்கும், அண்ணனுக்கும் உள்ள பெரிய ஆசை.

இந்த முறை அவர்கள் தாயகம் திரும்பியதும் நிர்மலாவின் திருமணத்தை முடித்து விட வேண்டும் என்ற முனைப்புடன் இருந்ததால்... இப்போதிருந்தே வரன் தேட தொடங்கி விட்டாள் புவனேஸ்வரி.

''சீக்கிரம் வா நிம்மி... ஆறிடப்போகுது!''

''இதோ வந்திட்டேன்!''

அழகிய மயிலொன்று படியிறங்கி வருவதுப் போல் வந்தாள் நிர்மலா.

மகளின் அழகில் லயித்தாள் புவனேஸ்வரி.

நேற்று தான் தொட்டிலில் போட்டு பெயர் சூட்டு விழா நடந்தது போலிருக்கிறது. அதற்குள் என்னமாய் வளர்ந்து நிற்கிறாள் என் தங்கம்!

''ஹலோ மேடம்!'' அம்மாவின் முகத்தின் நேரே சிட்டிகைப் போட்டாள்.

''அ...எ...என்ன?''

''என்னங்க மேடம். அடிக்கடி ஆஃப் ஆய்ட்டு எங்கேயோ பறந்திடறீங்க? என்ன... மிஸ்டர்கங்காதரனோட ஞாபகம் வந்திடுச்சா?'' என்றாள் கிண்டலாய்.

''அடி செருப்பால! அம்மாகிட்டே பேசற மாதிரியா பேசறே?''

''ஸாரி... ஸாரி... கோவிச்சுக்காதேம்மா. சும்மா விளையாட்டுக்கு சொன்னேன். ஆனாலும், உன் மனசுக்குள்ளே ஓடறதை கரெக்ட்டா சொல்லிட்டேன். இல்லே?''

''கிழிச்சே! ஒழுங்கா சாப்பிட்டு கிளம்பு!''

''சரி... சரி வை! இரண்டு இட்லிக்கு மேலே வைக்காதே!''

''இப்படி குழந்தை மாதிரி சாப்பிட்டா எப்படி உடம்புல ஒட்டும்? இப்பவே முருங்கைக்காய் மாதிரி தான் இருக்கிறே. இதே ரீதியிலே சாப்பிட்டேன்னு வச்சுக்க. கொத்தவரங்காய் மாதிரி ஆகிடுவே!''

''நேரமாச்சும்மா... அட்வைஸ் பண்ணாதே... கிளம்பறேன். பஸ்ஸை மிஸ் பண்ணிடப் போகிறேன்!'' பாதி சாப்பிட்டு விட்டு எழுந்துக் கொண்டாள்.

''நிம்மி என்ன இது? முழுசா ஒரு இட்லி கூட சாப்பிடலே''

''டைமாயிடுச்சுங்கறேனே! பசிச்சா காலேஜ் கேன்டீன்ல சாப்பிட்டுக்கறேன். வரட்டுமா?''

''பஸ்ஸை பிடிக்கணும்னு பாதிக்கூட சாப்பிடாம எழுந்து ஓடறே? உனக்கென்ன

# மெகபூபாவின் முதல்வர் ஆசை

**கா**ஷ்மீரின் கந்தக மேகங்களுக்கு இடையே பிறைநிலவாக பரிணமிப்பவர் மெகபூபா (வயது 38). மக்கள் ஜனநாயக கட்சித் தலைவர் முப்தி முகமது சையதுவின் மூத்த மகள். 'காஷ்மீரின் கலர்புல் குயின்' என்றழைக்கப்படும் மெகபூபா, இன்று பகல்காம் தொகுதி எம்.எல்.ஏ.

மலைப்பிரதேச மல்லிகை, மழையில் நனைந்த மாதிரி பளிச்சென காட்சியளிக்கும் இவரை 'காஷ்மீரின் பிரியங்கா' என்றே அங்குள்ளோர் விளிக்கின்றனர். தேசிய அரசியலில் முடங்கி கிடந்த முப்தியை காஷ்மீருக்கு கவர்ந்து வந்தவர் இவரே.

மெகபூபாவின் மெஸ்மரிச பேச்சு காரணமாக முப்தி கடந்த 1999-களில் தனி கட்சி தொடங்கினார். காஷ்மீரிகளிடம் முப்தி கட்சி பிரபலம் பெறுவதற்காக மெகபூபா அல்லும் பகலும் பாடுபட்டார். இவரின் அயராத உழைப்புக்கு இன்று கைமேல் பலன்.

காஷ்மீரின் முதல்வர் பதவிக்கு மெகபூபா பெயரும் அடிபட்டது. ஆனால் அங்கு ஏற்பட்ட இழுபறியில் அவருக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

-மு. தனிதோ.

தலையெழுதது? நமம வடபல தான கார இருக்கே! கார்லே போடின்னாலும் கேக்க மாட்டேங்கறே?''

''பஸ்லே போறதும் ஒரு எக்ஸர்சைஸ் மாதிரி தான். உனக்குப் புரியாது. நான் வர்றேம்மா... பை!''

இரண்டு புத்தகங்களை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டு புறப்பட்ட மகளை ஒருவித பயத்துடன் பார்த்தாள் புவனேஸ்வரி.

'நிம்மிக்கிட்டே... ஏதோ ஒரு தப்பிருக்கு! என்ன அது?'

## 5

**வீ**ட்டிற்கும், பஸ் ஸ்டாண்டிற்கும் பதினைந்து நிமிட நடை!

வந்து சேர்வதற்குள் நெற்றியிலும், கன்னக்கிதுரம் பொட்டுப் பொட்டாய் வியர்த்து விட்டிருந்தது.

கர்ச்சீப்பால் ஒற்றியெடுத்தவள், அக்கம் பக்கம் பார்வையை ஓட விட்டாள்.

தெரிந்த முகம் யாரும் தென்படவில்லை.

மெல்ல அங்கிருந்து நடந்தாள்.

இருபதடி தொலைவில் இருந்தது அந்தக் கடை!

'ஜெயலட்சுமி எலக்ட்ரிகல்ஸ்!'

இவள் வருகைக்காகவே காத்திருந்த சத்தியமூர்த்தி இவளைப் பார்த்ததும், ''இல்லே சார்! அந்த சைஸ் பாக்ஸ் சுவிங் தான் வரும்!'' என்று கூறி நின்றிருந்த கஸ்டமரை அவசரமாய் அனுப்பி வைத்தான்.

''வா.. நிம்மி!''

''எனக்காக கஸ்டமரையெல்லாம் விரட்டியடிக்கறீங்க?'' என்றாள் மென்மையான புன்னகையுடன்.

''என் நிம்மிக்குட்டி இங்கே இருக்கப் போறதென்னவோ, ரெண்டு நிமிஷமோ, மூணு நிமிஷமோ தான்! அதை கஸ்டமர்ங்கற பேர்ல அபகரிச்சிட்டுப் போக விட்ருவேனா? உன்னை விடவா எனக்கு கஸ்டமர் முக்கியம்?''

வெட்கத்துடன் தலைகவிழ்ந்தாள்.

''மகாலட்சுமி மாதிரி நீ என் கடைக்கு வந்திட்டுப் போனதும் வியாபாரம் பிச்சிக்கிட்டுப்போகுது தெரியுமா?''

''கிண்டல் பண்ணாதீங்க!''

''நிஜமாதான் சொல்றேன்!''

''மாடர்ன் கேர்ளா திரிஞ்சிட்டு இருந்தவளை இப்படி மாத்தினதே நீங்கதானே?''

''எனக்காக, எனக்கு பிடிக்கிற மாதிரி உன்னை நீ மாத்திக்கிட்டதை நினைக்கறப்ப, வானத்திலே பறக்கிற மாதிரி இருக்கு நிம்மி! இந்த தேவதை மனசிலே நான் இருக்கேன்றதே பெரிய அதிர்ஷ்டமா நினைக்கிறேன் நிம்மி. நான் சாதாரண மனுஷன். உன்னை கற்பனையால கூட நினைக்க முடியாத மிடில் க்ளாஸை சேர்ந்தவன். ஆனா நீ?'' என்றான் உணர்ச்சி வசப்பட்டு.

''போச்சுடா... இன்னைக்குமா? எங்க தினமும் இதே டயலாகை சொல்லி போரடிக்கணுமா? எனக்கு எந்த பாகுபாடும் தெரியலே. உங்க அன்பை மட்டும் தான் இந்த உலகிலேயே மிகப் பெருசா நினைக்கிறேன். குழந்தைக்கு தாயின் கருவறையைப் போல, வாலிபத்துக்கு ஆறுதலான நிழல் காதலைத் தவிர வேறென்ன இருக்கு சத்யா? என் அம்மா சொல்லியே மாறாத நான், நீங்க சொன்ன ஒரு வார்த்தைக்காக என் நடை, உடையையே மாத்திக்கிட்டேன்னா.. நீங்க என் மேல வச்சிருக்கிற அன்பாலதான். அன்புக்காக அடிப்பணியறதுல உள்ள சந்தோஷமே தனி தான் சத்யா. அதை நான் அனுபவப்பூர்வமா உணர்ந்திருக்கேனில்லையா?''

''அடேயப்பா.. எவ்வளவு அழகாப் பேசறே? எனக்காக இவ்வளவு விட்டுக் கொடுத்திருக்கிற உனக்காக எதையாவது செய்யணும்னு மனசு துடிக்குது நிம்மி! உனக்கு என்ன வேணும் சொல். உடனே வாங்கித் தர்றேன்!''

''வேறென்ன? தாலிதான்!''

''இந்த ஜென்மத்துல அதை என்னைத் தவிர வேற யாரும் உன் கழுத்துல கட்ட முடியாது நிம்மி. அது மட்டும் சத்தியம்!''

''படிப்பு அடுத்த வருஷம் முடியப்போகுது. அப்பாவும், அண்ணனும் இந்த வருஷக் கடைசியிலே இந்தியா வர்றாங்க. என் கல்யாணத்தை நடத்தி முடிச்சிட்டுதான் திரும்பவும் ஊருக்குப் போவாங்க. நீங்க எப்ப வந்து பேசப்போறீங்க?''

''எப்பக் கூப்பிட்டாலும் வரத் தயாராயிருக்கேன் நிம்மி! சந்தோஷமா வாழதானே இந்தப் பிறவியெடுத்தோம்? நீயில்லாம, எனக்குன்னு தனிப்பட்ட வாழ்க்கை



என்று எதுவுமில்லே. நீ எனக்கு மட்டும்தான். எனக்காக ஸ்பெஷலாக அனுப்பி வைக்கப்பட்ட தேவதை. என் உயிரேப் போனாலும் விட்டுக் கொடுக்க மாட்டேன். நிச்சயமா உங்க வீட்லே நம்ம கல்யாணத்துக்கு சம்மதிக்கப் போறதில்லே. ஆனாலும் சம்பிரதாயத்துக்காக பெண் கேட்பேன். மறுக்கிறபட்சத்துல அவங்க கண் எதிரேயே உன் கழுத்துல தாலிக்கட்டி என் வீட்டுக்கு அழைச்சிட்டு வர்ற தைரியமிருக்கு. இதையெல்லாம் சமாளிக்கிற தைரியம் உனக்கிருக்கா?''

''இந்த கழுத்து நீங்க கட்டற தாலிக்காக மட்டுமே வளைஞ்சு கொடுக்கும். இந்த உயிர் உங்களுக்கு மட்டுமே சொந்தமானது. உங்களை கேவலம். அந்தஸ்துக்காக விட்டுத்தர மாட்டேன். உங்களை விடவும் தைரியசாலிங்கறதை சந்தர்ப்பம் வரும்போது நிரூபிச்சுக்காட்டறேன். வரட்டுமா? ரொம்ப டயமாய்டுச்சு. அதோ வந்துடுச்சு. வர்றேன் சத்யா!'' ஒரே ஓட்டமாய் ஓடி, வந்து நின்ற பஸ்ஸில் ஏறிக் கொண்டாள் நிர்மலா.

சத்தியமூர்த்தி அவளை ஏக்கத்துடன் பார்த்தான். பஸ் கடையை கடந்த போது அவனைப் பார்த்து டாட்டா காட்டினாள்.

இவை அத்தனையும் இரண்டு கண்கள் துல்லியமாய் பார்த்துக் கொண்டிருந்தன.

**ப**டுக்கையை விட்டு எழும்போதே நிர்மலாவிற்கு சூழ்நிலையின் மாற்றங்கள் புரிபட ஆரம்பித்தது.

தோட்டத்தில் கலவையான பேச்சுக் குரல்கள். கூடவே அம்மாவின், ''அதை அங்கே வை! இங்கே வைக்காதப்பா... பூச்செடிகள் மேலே சுண்ணாம்பு பட்டுடுச்சுன்னா... செடிகள் செத்துப்போய்டாதா?'' என்று குரல்வேறு.

நிர்மலா தோட்டத்தை எட்டிப்பார்த்தாள்.

ஒரு பக்கம் ஆட்கள் சாரம் கட்டி சுவற்று டிஸ்டெம்பரை சுரண்டியெடுத்துக் கொண்டிருக்க, இன்னொரு பக்கம் வகை வகையாய் பெயிண்ட் டப்பாக்கள். ஏழெட்டு ஆட்கள் வேலை செய்துக் கொண்டிருக்க, அருகே புவனேஸ்வரி கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தாள்.

'என்ன திடீரென்று வீட்டிற்கு வொய்ட் வாஷ் செய்யறாங்க? பண்டிகை எதுவும் கூட சமீபத்தில் வருவதாய் இல்லையே! பிறகென்ன? அதுவும் வொய்ட் வாஷ் பண்ணி ஒரு வருடம் கூட முழுதாய் ஆகாத போது?'

அந்த யோசனையினூடே அவசர அவசரமாய் குளித்து முடித்து கீழே இறங்கி வந்தாள்.

''அட... குளிச்சிட்டியா? நீயே எடுத்துப்போட்டு சாப்பிட்டுக்கறியா? அம்மாவுக்கு வேற வேலையிருக்கு'' என்றாள் இவளைப் பார்த்ததும் புவனேஸ்வரி.

''ஒரு நிமிஷம்மா! என்ன வேலை நடக்குது இங்கே?''

''வொய்ட் வாஷ் பண்றாங்க?''

''ஏம்மா... இப்பதானே பண்ணினோம்? மறுபடியும் எதுக்காக?''

''காரணமிருக்கு. உங்கப்பாவும், அண்ணனும் அடுத்த வாரம் ஊருக்கு வராங்க!''

''ரியலி? இயர் எண்டுல வர்றதாயில்லே சொன்னாங்க?''

''ஏன் சீக்கிரம் வர்றதுல உனக்கு சந்தோஷமில்லையா?''

''ஏம்மா இப்படிப் பேசறே? அவங்களைப் பார்த்து எவ்வளவு நாளாச்சு?''

''சரி... சாப்பிட்டுட்டு வா! ஆச்சாரி வந்திருக்கார். கேட்லாக் கொண்டு வந்திருக்கார். உனக்கு பிடிச்ச நகை டிசைனை செலக்ட் பண்ணி சொல்லிடு.''

''ஆச்சாரியா? என்னம்மா சொல்றே நீ?''

நிஜமாகவே இப்போது அவளுள் பயம் எட்டிப் பார்த்தது.

''ப்ச்... இப்பவே எல்லாத்தையும் சொல்லிவிடணுமா நிம்மி? சாப்பிட்டு முடிச்சிட்டு வாயேன்!''

''இல்லே... எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும். எதுக்காக திடீர்னு நகையெல்லாம் செய்யறீங்க?''

''உனக்கு முன்னூறு பவுன் நகைப்போட்டு புகுந்த வீட்டுக்கு அனுப்பப் போகிறோம். எல்லாமே விதவிதமான டிசைன்ல. பார்க்கிறவங்க மூக்கிலே விரலை வைக்கிற மாதிரி செய்ய வேணாமா? எல்லாமே நீ செலக்ட் பண்ற டிசைன்ல தான்...''

''நகையா? அதுக்கு இப்ப என்ன அவசரம்?'' திடுக்கிட்டாள்.

''நல்லாக் கேட்டே போ! இன்னும் சரியா இருபத்தஞ்சு நாள் தான் இருக்கு கல்யாணத்துக்கு! அப்பாவும் அண்ணனும் அவசர அவசரமா எதுக்காக வர்றாங்களாம்? உன் கல்யாணத்துக்காக தானே?''

''க...கல்யாணமா? என்ன சொல்றே நீ?''

''ஆமாம் நிம்மி. மாப்பிள்ளை சவுதியிலே பெரிய கம்பெனியிலே மேனேஜரா இருக்காராம். மாச சம்பளமே ரெண்டு

லட்சம்னா பார்த்துக்க. உங்கப்ப அங்கேயே எல்லாத்தையும் பேசி முடிச்சிட்டார். கல்யாணம் முடிஞ்சதும் மூணு மாசத்துலே உன்னையும் சவுதிக்கு அழைச்சிட்டுப் போயிடுவாராம். மாப்பிள்ளை ரொம்ப அழகா இருக்காராம்.''

''நிறுத்தும்மா... யாரைக்கேட்டு எனக்கு மாப்பிள்ளையை முடிவுப் பண்ணினீங்க?''

''யாரைக் கேக்கணும்?'' என்றாள் நிதானமாக.

## 6

''என்னக் கேள்வியிது? என்னைக் கேக்கணும். எனக்குப் பிடிச்சிருக்கான்னு கேக்கணும்!'' கோபத்தில் படபடத்தாள்.

''உனக்கென்னடித் தெரியும்? உனக்கு எதை, எப்பப் பண்ணணும்னு எங்களுக்குத் தெரியும். இதுநாள் வரைக்கும் உனக்குத் தேவையானதை எல்லாம் உன்னைக் கேட்டு உன் சம்மதத்தோடவா செய்தோம்? அப்ப, சந்தோஷமா அதையெல்லாம் ஏத்துக்கலே? இப்ப மட்டும் என்ன?'' புவனேஸ்வரியும் கோபத்துடன் தான் கேட்டாள்.

''இதுக்கும், அதுக்கும் முடிச்சுப் போடாதேம்மா. கல்யாணம்ங்கறது சாதாரண விஷயமல்ல. கடைசிவரைக்கும் இருந்து வாழப் போகிறவ நான். புருஷன் சிரிச்சா நானும் சிரிச்சு, அழுதா நானும் அழுது, இன்ப துன்பங்கள்ல பங்கெடுத்து, அவருக்கு வாரிசைப் பெத்துக் குடுக்கப் போகிற உரிமை உள்ள நான், எனக்கு வரப்போகிற புருஷனை தேர்ந்தெடுக்கிற உரிமை இல்லையாம்மா? இதென்ன அநியாயமா இருக்கு?''

புவனேஸ்வரி மகளை ஆச்சர்யமாய் பார்த்து தலையாட்டினாள்.

''நல்லா பேச கத்துக்கிட்டே நிம்மி! உன்னை இன்னமும் சின்னக் குழந்தையாகவே நினைச்சிட்டிருந்தது என்னோட தப்பு தான். நீ நினைக்கிற மாதிரி யாரும் உன்னை பாழுங்கிணத்துல தள்ளி விட்டுடலே. நம்மை விடவும் வசதியான குடும்பத்துல, அழகான, நல்ல குணமுள்ள வாலுக்கு தான் உன்னை பண்ணிக் கொடுக்கிறோம்.''

''வாழ்க்கைக்கு வசதியும், அழகும் மட்டும் போதுமாமா? எனக்குப் பிடிக்க வேண்டாமா?''

''உனக்கும் பிடிக்கும். மாப்பிள்ளை ஊருக்கு வந்ததும் பார்க்கத்தானேப் போறே?''

''இல்லேம்மா.. எனக்கு இப்ப கல்யாணம் வேணாம். படிப்புக்கூட முடியலே. அப்படி என்ன அவசரம்? முதல்ல இந்த ஏற்பாட்டை நிறுத்துங்க.''

''படிச்சிட்டு வேலைக்கா போகப் போறே? படிச்ச வரைக்கும் போதும். முட்டாள்தனமா உளறிட்டிருக்காம ஆகவேண்டிய வேலையை கவனி.''

''சொன்னா கேளும்மா ப்ளீஸ்! எனக்கு இந்த கல்யாணத்திலே விருப்பமில்லே.''

''ஏன்?''

''அது.. அது..''

''மாப்பிள்ளையை பார்க்காமலேயே வேண்டாம்னு சொல்றேன்னா என்ன அர்த்தம்?''

''எனக்குப் பிடிக்கலே''

''அதான் ஏன்?''

''நா.. நான்.. ஒருத்தரை



விரும்பறேன்.''

''யாரை? பத்துப் பதினஞ்சு பொருளை வச்சுக்கிட்டு கடை நடத்தறானே.. அவனையா?''

''அ..அம்மா!..'' அதிர்ச்சியானாள்.

''என்னடி.. இதெல்லாம் எப்படித் தெரியும்னு பார்க்கறியா?''

''தெரிஞ்சுமா... இப்படி?''

''தெரிஞ்சதனால தான் அவசர அவசரமா இந்த ஏற்பாடு பண்ணியிருக்கோம். உங்கப்பா வர்றவரைக்கும் இதை தெரிஞ்சதாகவே காட்டிக்கக்கூடாதுன்னு நினைச்சேன். ஆனா, சொல்ல வச்சிட்டே.. இதோ பார்! நீ நினைக்கறது எதுவும் நடக்காது. மரியாதையா எல்லாத்தையும் மறந்துட்டு, நாங்க பார்த்திருக்கிற மாப்பிள்ளையை கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமாயிரு.''

''என்னால முடியாது. என் சத்யாவைத் தவிர, வேற யாரையும் என்னால கற்பனைக்கூட பண்ணிப் பார்க்க முடியாது.''

''அந்த பரதேசிப்பயலை நாங்களும் ஏத்துக்குவோம்னு கனவுகூடக் காணாதே! எங்களுக்கு கவுரவம் முக்கியம்.''

''எனக்கு என் சத்யாதான் முக்கியம்.'' என்றாள் அழுத்தமாக.

''வயசுக் கோளாறு. இப்படித்தான் உள்றச் சொல்லும். நீ தலைகீழா நின்னாலும் அவனை கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்க மாட்டோம். நாங்க பார்த்த மாப்பிள்ளைக்கும் உனக்கும் தான் கல்யாணம். இனி, நீ காலேஜுக்கு போக வேண்டாம்.''

''அ..ம்..மா..''

''இந்த வீட்டு வாசப்படிய தாண்டி போகக்கூடாது. மீறி போனால் விளைவுகள் விபரீதமாயிருக்கும்.''

''அம்மா நான் சொல்றதை..''

''கேட்கத் தயாராயில்லே.. உள்ளே போ... உள்ளே போன்னு சொல்றேனில்லே...'' அதட்டினாள்.

இது புவனேஸ்வரியின் புதிய முகம்.

அரண்டுதான் போனாள் நிர்மலா.

**ச**மையலறையை ஒழுங்குப்படுத்தி விட்டு வந்து தரையில் பாயை விரித்துப் போட்டாள் ஜெயலட்சுமி.

டி.வி.யின் முன் அமர்ந்திருந்தான் மணவாளன். ஜெயலட்சுமியின் இளைய மகன். சென்னையில் பணிபுரிபவன். வாரத்தில் இரண்டு நாட்கள் லீவு. உடனே புறப்பட்டு ஊருக்கு வந்து விட்டு அம்மா கையால் சாப்பிட்டு விட்டு ஞாயிறு இரவு சென்னைக்கு புறப்பட்டு விடுவான்.

உள்ளறையில் கட்டிலில் மல்லாந்து படுத்தபடி உத்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி.

ஜெயலட்சுமி மகனை கவலையாய் பார்த்தாள்.

''சத்யா..''

''....''

''சத்யா உன்னைத் தான்!''

''அ... எ.. என்னம்மா?'' யோசனையிலிருந்து விடுபட்டு திரும்பிப் பார்த்தான்.

''கொஞ்ச நாளாகவே உன் முகம் சரியில்லை. சாப்பாடும் சரியா சாப்பிடறதில்லே. ஏன்பா?''

''ஒ.. ஒண்ணுமில்லேம்மா.''

''எப்பவும் நீ இப்படி இருந்ததில்லையே சத்யா! எதுவா இருந்தாலும் மனசிலிருக்கறதை தயங்காம சொல்லு. வியாபாரத்திலே ஏதேனும் பிரச்சினையா?''

''இல்லேம்மா.. நீங்க நினைக்கற மாதிரி எதுவுமில்லே. பிஸினஸை இன்னும் எப்படியெல்லாம் டெவலப் பண்ணலாம்னு யோசிச்சிட்டிருக்கேன். வேற ஒண்ணுமில்லேம்மா.''

''என்னமோப்பா.. நீ அம்மாகிட்டே எதையோ மறைக்கிறேன்னு மட்டும் தெரியுது சொன்னாதானே எதையாவது செய்யலாம்.''

''அம்மா.. அதான் அண்ணன் ஒண்ணுமில்லேன்னு சொல்லிட்டாரே. நீ வேற எம்மா கஷ்டதையும் நினைச்சி குழப்பிக்கறே.'' என்றான் மணவாளன்.

தனக்குத்தானே எதையெதையோ பேசிக் கொண்டே சற்று நேரத்தில் உறங்கி விட்டாள் ஜெயலட்சுமி.

மணவாளன் டி.வி.யை அணைத்துவிட்டு அண்ணனிடம் சென்றான்.

''அண்ணா..''

''ம்..''

''என்னண்ணா பிரச்சினை?''

''சேச்சே.. அதெல்லாம் ஒண்ணுமில்லே''

''மறைக்கிறீங்க.. எனக்குத் தெரியும்.''

''என்னத் தெரியும்?'' கேஷுவலாக சிரித்துக் கொண்டுதான் கேட்டான் சத்தியமூர்த்தி.

ஆனால், அதற்கு அவன் சொன்ன பதில் அவனை கட்டிலிலிருந்து துள்ளியெழ வைத்தது.



''நிர்மலாவைத் தெரியும்.'' என்றான் மணவாளன்.

''ம..ணா...''

''ஏண்ணா பதறீங்க? நீங்களும், நிர்மலாவும் காதலிக்கிற விஷயம் எனக்கு முன்பே தெரியும்.''

''எ.. எப்படி?''

''காதலிக்கிற ரெண்டு பேரைத் தவிர ஊர், உலகத்துல உள்ள அத்தனை பேருக்கும் கண்கள் திறந்து தான் இருக்கும். உங்கள் காதல் விவகாரம் என் ஃபிரண்ட்ஸ் மூலமா தெரிஞ்சுகிட்டேன். நான் காதலுக்கு எதிரியில்லை. என்கிட்டே சொல்லுங்க. உங்க கவலைக்கு காரணம் நிர்மலா தானே?''

''ஆ...ஆமாம்.'' என்றான் தயக்கமாக.

''என்ன பிரச்சினை இப்ப?''

''பதினஞ்சு நாளாச்சு அவளைப் பார்த்து. காலேஜுக்கு வர்றதில்லே. விசாரிச்சப்ப, ஊர்லேர்ந்து அவளோட அப்பாவும், அண்ணனும் வந்துட்டாங்களாம். அவளுக்கு கல்யாண ஏற்பாடுகள் நடத்துக்கிட்டிருக்காம். அவளை நான் எப்படியாவது மீட்டாகணும். என்ன பண்றதுன்னு தான் புரியலே.''

''இப்படி பேசலாமா நீங்க? பார்த்து பதினஞ்சு நாளாச்சுங்கறீங்க. இத்தனை நாளும், அவங்களை பார்க்கறதுக்குக்கூட எந்த முயற்சியும் எடுக்காம இருந்திருக்கீங்க. பாவம், அவங்க எவ்வளவு தவிச்சுக்கிட்டிருப்பாங்களோ? அண்ணா.. என்ன ஆனாலும் சரி.. நாளைக்கு நீங்க அவங்க வீட்டுக்குப் போய் பொண்ணு கேக்கறீங்க. நிர்மலா.. நீங்க வருவீங்கன்ற நம்பிக்கையோட காத்துக்கிட்டிருப்பாங்கண்ணா. அவங்க நம்பிக்கையை சிதைச்சிடாதீங்க.''

சத்தியமூர்த்தியின் முகத்தில் இப்போது ஒரு தெளிவுப் பிறந்தது.

''சரி.. நாளைக்கே நான் நிர்மலா வீட்டுக்குப் போகிறேன்'' என்றான்.

அப்போது...

காலிங்பெல் அலறியது.

## 7

**வா**ரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தாள் ஜெயலட்சுமி.

''இந்நேரத்தில் யாரது பெல் அடிக்கறது?''

''நீ இரும்மா... நான் போய் கதவைத் திறக்கிறேன்'' என்று மணவாளன் கதவை நோக்கிச் செல்ல, அம்மாவும் அவன் பின்னேயேச் சென்றாள்.

அதற்குள் மறுபடியும் காலிங்பெல் கதற... கதவைத் திறந்தான் மணவாளன்.

அங்கு...

இளம் பெண்ணொருத்தி பதட்டத்துடன் நின்றிருந்தாள்.

''யார் நீங்க?''

''ச...சத்யமூர்த்தி... வீடு...''

''இதுதான்! யார் நீங்க?'' வியப்புடன் கேட்டான்.

குரல் கேட்டு சத்யாவும் எழுந்து வந்தான்.

''அவர் இல்லையா?''

''நடு ராத்திரியிலே வீடு தேடி வந்து என் பிள்ளையைப் பத்தி விசாரிக்கிறியே... நீ யாரு?'' நெஞ்சு படபடத்தது ஜெயலட்சுமிக்கு.

அதற்குள் அங்கு வந்துவிட்ட சத்தியமூர்த்தி வாசலில் நின்றிருந்தவளைப் பார்த்து திகைத்தான்.

''நி..ர்..ம..லா.... நீயா?''

''நிர்மலாவா? ஓ... அவங்க தான் இவங்களா?'' மணவாளனுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

''நிர்மலாவா? யாரிந்தப் பொண்ணு? உங்க ரெண்டு பேருக்கும் இவளை முன்னமேத் தெரியுமா?''

''இல்லேம்மா... வந்து.. விளக்கமா சொல்றேன்ம்மா... முதல்ல அவங்களை உள்ளே வரச்சொல்லு...'' என்றான் மணவாளன்.

இருவரையும் நெற்றி சுருங்க பார்த்து விட்டு ''உள்ளே வாம்மா'' என்றாள் நிர்மலாவிடம்.

தயக்கத்துடன் உள்ளே வந்த நிர்மலாவின் முகம் பயத்தில் வெளிறி வியர்த்திருந்தது.

''முதல்ல கதவை சார்த்துங்க!'' என்றாள் நடுக்கத்துடன் நிர்மலா.

''என்னடா சொல்றா இவ?''

''கொஞ்சம் பொறுமையா இரும்மா'' என்ற மணவாளன் கதவை தாழ்ப்போட்டு விட்டு அண்ணனை நெருங்கினான்.

''என்னன்னு விசாரியுங்கண்ணா!''

சத்தியமூர்த்தி அம்மாவை தயக்கத்துடன் பார்த்துவிட்டு நிர்மலாவிடம் வந்தான்.

''எப்படியிருக்கே நிர்மலா?''

அவன் கேட்டது தான் தாமதம். பொசுக்கென வெளிப்பட்டது கண்ணீர்.

''எங்க வீட்லே எனக்கு கல்யாண ஏற்பாடெல்லாம் நடத்திட்டிருக்கு சத்யா. நம்ம காதல் விவகாரம் வீட்லே தெரிஞ்சுப் போச்சு. அதனால தான் அவசர, அவசரமா மாப்பிள்ளைப் பார்த்து, பத்திரிகையெல்லாம் குடுக்க ஆரம்பிச்சிட்டாங்க. நான் எவ்வளவு கெஞ்சியும் என் பேச்சை கேட்கலே. காலேஜுக்குக்கூட போகக்கூடாதுன்னு ஹவுஸ் அரெஸ்ட் பண்ணிட்டாங்க. எனக்கு நீங்க வேணும். நீங்க இல்லாம எனக்கு வாழ்க்கையில்லே. யார் கண்ணிலேயும் படாம தப்பிச்சு ஓடி வந்துட்டேன். பணம், அந்தஸ்து எதுவும் வேணாம். எனக்கு நீங்க மட்டும் தான் வேணும். என்னை கைவிட்றாதீங்க... ப்ளீஸ்'' கதறியபடி அவன் காலில் விழுந்தாள் நிர்மலா.

பதறிவிட்டான் சத்தியமூர்த்தி.

''என்னம்மா இது? எந்திரி நிம்மி!'' அவளை தூக்கி கண்களைத் துடைத்துவிட்டான்.

ஜெயலட்சுமிக்கு இப்போது ஓரளவு புரிந்துவிட இன்னும் டென்ஷனாகிவிட்டாள்.

''என்னப்பா சத்யா? இந்தப் பொண்ணு என்னென்னவோ சொல்றாளே... எல்லாம் உண்மையா?''

''அ...ஆமாம்மா!'' என்றவன் தயங்கித் தயங்கி எல்லாவற்றையும் சொல்லி முடித்தான்.

பதில் பேசாமல் நின்றிருந்தாள் ஜெயலட்சுமி.

''அம்மா!'' என்றழைத்தாள் நிர்மலா.

''....''

''நான் இப்படி பெத்தவங்களை எதிர்த்து வீட்டை விட்டு ஓடிவந்துட்டதற்காக என் கேரக்டரை தப்பா நினைச்சிடாதீங்கம்மா! மனசால ஏத்துக்கிட்டவரையே மணக்கணும்ங்கறதுல வைராக்கியமா இருந்தேன். வேற வழி தெரியலேம்மா. அதனால தான்.. ஓடி வந்துட்டேன். இனி எனக்கு எல்லாமே நீங்கதாம்மா... தயவு செய்து என்னை வீட்டைவிட்டு அனுப்பிடாதீங்க.'' கை கூப்பி கண்ணீர் விட்டாள்.

ஜெயலட்சுமி சத்தியமூர்த்தியை எரித்து விடுபவனைப் போல் பார்த்தாள்.

''நீ எப்படி சத்யா என் வயித்துல வந்து பொறந்தே?''

''அ... அம்மா!''

''ஒரு பொண்ணு தன் மனசை ஒரு ஆண்கிட்டே பறிகொடுக்கும்போதே... சொந்தபந்தங்களை ரெண்டாம்பட்சமாக்கிடறா! அப்படிப்பட்டவளுக்கு ஆம்பளை எவ்வளவு நம்பிக்கையா, விசுவாசமா இருந்திருக்கணும்? பதினஞ்சு நாளா, இவளை வீட்டை விட்டு அனுப்பாம வச்சிருக்காங்கன்னு தெரிஞ்சிருந்தும், நீ எப்படி சும்மாவே இருந்தே? அவளுக்கு இருக்கிற தைரியத்துல உனக்கு கொஞ்சம் கூட இல்லைன்னு நினைக்கறப்ப... எனக்கு வெக்கமாயிருக்கு சத்யா!''

''அ...ம்...மா!''

''உன்னையே நம்பி, எல்லாத்தையும் உதறி எறிஞ்சிட்டு வந்திருக்கா. இவளை என்னப் பண்ணப் போறே?''

''அம்மா... என்னை தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க. இவளைப் பிரிஞ்சு நான் மட்டும் என்ன பண்ணப்போறேன்? 'பதினஞ்சு நாளா நீ சரியில்லே'ன்னு என்னை சொல்லிக்கிட்டிருந்தீங்களே... அதுக்கு நிர்மலா தான் காரணம். எப்படி சந்திச்சு மீட்டுக்கிட்டு வர்றதுன்னு குழம்பிட்டிருந்தேன். தவிர, உங்ககிட்டே சொல்லி எப்படி சம்மதம் வாங்கறதுன்னு பயந்தேன். ஆனா, நீங்க... நான் எதிர்பார்க்கலேம்மா...'' என்றான் நெகிழ்வுடன்.

''ஒரு பொண்ணோட மனசை இன்னொரு பொண்ணாலதான் புரிஞ்சுக்க முடியும். உங்கப்பாவுக்கும் எனக்கும் பெரியவங்களாப் பார்த்து தான் கல்யாணம் பண்ணி வச்சாங்க. பொண்ணுப் பார்த்து நிச்சயம் பண்ணி, கல்யாணத்துக்கு இடையிலே மூணுமாச இடைவெளி இருந்தப்ப, நாங்க ரெண்டு பேரும் மனதார நேசிச்சோம். கல்யாணத்துக்கு பத்து நாள் இருக்கிறப்ப, பெரியவங்களுக்குள்ளே கருத்து மோதல் ஏற்பட்டு, கல்யாணமே நடக்காதுங்கற சூழ்நிலை உருவாச்சு. அப்ப நான் துடிச்சதுடிப்பும், தவிப்பும்... மரண அவஸ்தை. அதுக்கப்புறம் கல்யாணம் ஆச்சு, அஞ்சு வருஷம் வாழ்ந்துட்டு அவரும் போய் சேர்ந்துட்டார். நேசிச்சவங்க பிரிஞ்சிட்டா, அதனால உண்டாகற வேதனையை நான் அனுபவிச்சிருக்கேன். இவளோட வேதனையை என்னால தான் புரிஞ்சுக்க முடியும். நம்பி வந்தவளை கைவிடக்கூடாது... உயிரை பணயம் வச்சாவது இவள் கழுத்திலே தாலியைக் கட்டி தைரியமா வாழ்ந்துக் காட்டணும். செய்வியா சத்யா?''

அனைவர் முகத்திலும் ஆச்சர்யம் கலந்த சந்தோஷம்.

''செய்வேன்ம்மா... கண்டிப்பா செய்வேன்!''


''நிர்மலா... நீ பணக்கார வீட்டுப் பொண்ணாயிருந்தாலும், அதையெல்லாம் தூக்கியெறிஞ்சிட்டு சத்யாவை நம்பி வந்திருக்கறே. ரொம்ப சந்தோஷம். ஆனா, இதுவரை உனக்குத் தெரிஞ்சதெல்லாம் சத்யா மட்டும் தான். இந்த வீட்டு நிலவரம் பத்தித் தெரிஞ்சிருக்காது. நாங்க நடுத்தர வர்க்கத்தை சேர்ந்தவங்க. நாங்க குடியிருக்கிற இந்த வீடு கூட வாடகை வீடு தான். ஆடம்பர வசதியை இங்கே எதிர்பார்க்க முடியாது. ஆனா, ஒரே ஒரு உத்தரவாதம் தரமுடியும்! ஊர்ல உலகத்திலே, எந்த புகுந்த வீட்டிலேயும் கிடைக்கிற பாசத்தைவிட பல மடங்கு அன்பை, உன் கணவனும், மாமியாரும், மச்சினனும் தருவாங்க.''

''அம்மா... நான் இதை மட்டும் தான் எதிர்பார்த்து இங்கே வந்தேன். அம்மாவைப் பிரிஞ்சு வர்றோமேன்னு வீட்டை விட்டு புறப்படறப்ப கொஞ்சம் வருத்தப்பட்டதென்னவோ நிஜம். ஆனா, இங்க வந்தப்பிறகு தான், எனக்கு இன்னொரு அம்மா இருக்காங்கன்னு தெரிஞ்சுக்கிட்டேன். சத்யா மூலமாகவே ஏற்கனவே இந்த வீட்டு நிலவரத்தை தெரிஞ்சுக்கிட்டேன். பணத்தால அன்பை விலைக்கு வாங்க முடியாது. ஆனா, அன்பால ஒரு நல்ல வாழ்க்கையை உருவாக்க முடியும். உங்களை ஒருத்தியா வாழதான் நான் ஆசைப்படறேன். அதனால தான் மாத்துத்துணிக்கூட எடுத்துக்காம, கட்டினப் புடவையோட வந்திருக்கேன். நீங்க சாப்பிடற சாப்பாடு எனக்கும் போடுங்க. நீங்க பயன்படுத்திய புடவைகள்ல ரெண்டு எனக்கும் கொடுங்க. ஆனா, அன்பை மட்டும் அள்ளிக்கொடுங்க. அது போதும் எனக்கு!'' என்றாள் உணர்ச்சிப்பூர்வமாய்.

மனம் நிறைந்துப் போனது ஜெயலட்சுமிக்கு.

''என் ராஜாத்தி!'' என்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

## சிற்பம் சொல்லும் செய்தி



**கௌதம புத்தர் உலகில் அவதரிக்கும் முன்பு அவரது தாயார் மாயாதேவிக்கு சில கனவுகள் தோன்றின.** இதன் பலனை புத்தரின் தந்தையான மன்னர் சுத்தோதனருக்கு மூன்று ஜோதிடர்கள் விளக்கி கூறினர். அதை எழுத்தர் ஒருவர் அருகில் அமர்ந்து எழுத்து வடிவில் எழுதினார்.

சரி இந்த கதை இப்ப எதற்கு என்கிறீர்களா? காரணம் இதுதான். அந்த காட்சியை அப்படியே சிற்பமாக வடிவமைத்து உள்ளனர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டை சேர்ந்த இந்த சிற்பம் நாகார்ஜுனா மலைச் சிற்பமாகும். இதன் சிறப்பு, எழுத்துக் கலையை முதன் முதலில் சிற்பமாக வடிவமைக்கப்பட்டு என்பதாகும். இந்த அரிய புகைப்படம் புதுடெல்லி தேசிய அருங்காட்சியகத்தில் உள்ளது.

-தீபக்.

# 8

விடிந்தால் எதுவும் நடக்கலாம் என்ற நிலையில் அவசர அவசரமாக, மிகவும் எளிமையாக விடியற்காலையில் கோவிலில் திருமணத்தை முடித்து, மணமக்களை வீட்டிற்கு அழைத்து வந்தாள் ஜெயலட்சுமி.

அங்கே...

நிர்மலாவின் குடும்பம் மொத்தமும், அடியாட்களுடன் அவள் வீட்டு வாசலில்!

மகளை திருமண கோலத்தில் பார்த்து பதறிய அப்பா கங்காதரன், ''அடிப்பாவி... என்ன காரியம் பண்ணிட்டே? என்னை தலைகுனிய வச்சிட்டியே... உன்னை'' என்று அடிக்க கையை ஓங்கினார்.

ஓங்கிய கையை தடுத்து நிறுத்தினான் சத்தியமூர்த்தி.

''நிம்மி உங்க மகளாயிருக்கலாம். ஆனா. இப்ப அவ என் மனைவி. நீங்க கை நீட்டி அடிக்கறதை பார்த்துக்கிட்டு நான் கம்மாயிருக்க மாட்டேன்.''

''என்னடா.. என்ன பண்ணுவே? அடிச்சிடுவியா? அடிக்கறதுக்கு முதல்ல உனக்கு கையிருக்குதான்னு பார்த்துக்க..'' எகிறிக் கொண்டு வந்தான் அண்ணன் அவினாஷ்.

''அண்ணா! அவர் மேல உங்க விரல் நுனிக்கூட படக்கூடாது. பட்டுச்சுன்னா, நான் சும்மாயிருக்க மாட்டேன்.''

''நிம்மி..'' அதட்டினாள் புவனேஸ்வரி. ''உங்கண்ணனைப் பார்த்தா இப்படி பேசறே?''

''அவர் கையை நீட்டறது என் புருஷன்கிட்டேம்மா!''

''அடப்பாவி.. நீ நல்லாயிருப்பியா? என் பொண்ணை ஒரேயடியா மாத்திட்டியே! எங்க பணத்துக்கு ஆசைப்பட்டு..''

''இங்கேப் பாருங்க.. நான் ஒண்ணும் உங்க பணத்துக்கு ஆசைப்பட்டு நிர்மலாவை கல்யாணம் பண்ணிக்கலே. அவளை அவளுக்காகவே நேசிச்சுதான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.''

''நம்பணுமா? எப்ப இவ எங்களை தலைகுனிய வச்சிட்டு இப்படியொரு காரியம் பண்ணினாளோ... அப்பவே இவளுக்கும், எங்களுக்கும் உள்ள தொடர்பு அறுந்துப் போச்சு. சொத்துல சல்லிக்காசுக் கூட தரமாட்டேன். எங்க வீட்டு நல்லது கெட்டதுக்கு கூட இவ வரக்கூடாது..'' என்றார் கங்காதரன்.

''உங்க பணமே எனக்கு வேணாம்ப்பா! வாழ்வோ, சாவோ.. இனி எல்லாமே எனக்கு இந்த குடும்பத்தோடு தான். பெத்த மகளோட மனசைப் புரிஞ்சுக்காம, அந்தஸ்துக்காக உங்க இஷ்டத்துக்கு மாப்பிள்ளைப் பார்த்தீங்க. அந்த மாப்பிள்ளையோட நான் நல்லவிதமா குடும்பம் நடத்த முடியுமாங்கற கவலையெல்லாம் உங்களுக்கில்லே. ஏன்னா, உங்களுக்கு கவுரவம் தான் முக்கியம். அதுக்காக என் வாழ்க்கையை பலி கொடுக்கவும் துணிஞ்சிட்டீங்க.. ஆனா, என் வாழ்க்கைக்காக நான் தானே கவலைப்பட்டாக வேண்டும்? அதான்.. நானே தேர்ந்தெடுத்துக்கிட்டேன். நீங்க போகலாம்!'' என்றாள் வீறாப்புடன்.

''இன்னும் என்னடி வேடிக்கைப் பார்த்துக்கிட்டு நிக்கறே? ஒரு ஒடுகாலி கழுதைக்கு இவ்வளவுத் திமிர் இருந்தா.. நமக்கு எவ்வளவு இருக்கணும்? நாம பெத்தது ஒண்ணே ஒண்ணுதான்னு முடிவுப் பண்ணிட்டு கிளம்பு'' மகளை வெறுப்புடன் பார்த்துவிட்டு மனைவியை இழுத்துச் சென்றார்.

புவனேஸ்வரி கண்ணீருடன் மகளை திரும்பித் திரும்பி பார்த்தபடி சென்றாள்.

என்ன இருந்தாலும் பத்துமாதம் சுமந்தவள் அல்லவா?

முதலிரவு!

தன் காதல் மனைவியை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த சத்தியமூர்த்தியின் கண்களில் திடீரென ஈரம் படர்ந்தது.

திடுக்கிட்டுப் போனாள் நிர்மலா.

''சத்யா.. என்ன இது?''

''எனக்காக, எல்லோரையும் பகைச்சுக்கிட்டியே நிம்மி. என்மேலே எவ்வளவு நேசம் இருந்திருந்தா.. இப்படி செய்திருப்பே?''

''நம்மை நேசிச்சவங்களுக்காக எதையும் விட்டுத் தரணும். அதுதானே காதல்? அப்படியில்லாமப் போனா காதலுக்கு என்ன அர்த்தம்? பொழுதுபோக்கிற்காக காதலிக்கறதாக தானே? இவரைத் தான் மணப்பேன்ங்கற உறுதியோட காதலிக்கும் போது.. எல்லாத்துக்கும் மனசை தயாரா வச்சிக்கணுமில்லையா?''

''நிம்மி.. மை டியர் நிம்மி!'' அளவுக்கடந்த வாஞ்சையுடன் அவளை இழுத்து



அணைத்துக் கொண்டான்.

திடீர் திருமணத்தால் இரண்டு நாள் லீவுப் போட்டுவிட்டு அங்கேயே இருந்த மணவாளன் அன்று சென்னை புறப்பட்டான்.

முகம் முழுக்க மகிழ்ச்சி பிரதிபலிக்க நிர்மலாவின் முன் வந்து நின்றான்.

''அண்ணி.''

''ம்...'' அவனை நிமிர்ந்து பார்க்கவே வெட்கமாக இருந்தது. அவளின் தைரியத்தைப் பாராட்டி எப்போதும் கிண்டல் செய்து கொண்டேயிருப்பான்.

''உங்களை மாதிரி எல்லாப் பெண்களும் இருந்துட்டா காதல் தோல்வியால் இளம்பெண் தற்கொலை. ரயில் முன் பாய்ந்தாள். விஷம் சாப்பிட்டாள். தூக்கில் தொங்கினாள்... அப்படிங்கற செய்திக்கே இடமில்லை.''

முகம் சிவந்துப் போகும் நிர்மலாவுக்கு.

மனைவியின் நாணத்தை ரசித்தபடி, தம்பிக்கு கண்ணடித்து 'இன்னமும் பேசு' என்று தூண்டி விடுவான் சத்தியமூர்த்தி.

''அம்மா பாருங்கம்மா இவங்களை'' என்று மாமியார் முதுகுக்கு பின்னே ஒளிந்து கொள்வாள்.

''என்னடா கிண்டலா? பொண்ணுன்னா அப்படிதான்டா இருக்கணும். உங்கண்ணன் மாதிரியா.. என்ன செய்யலாம், என்ன செய்யலாம்னு பதினஞ்சு நாளா யோசிச்சு, யோசிச்சு, தாடி வளர்த்துக்கிட்டிருக்க சொல்றே? போடா.. போய் உன் வேலைய கவனி!'' என்று விரட்டி விடுவாள்.

ஜெயலட்சுமிக்கு ரொம்ப சந்தோஷமாயிருந்தது. அந்த வீட்டில் மகிழ்ச்சி அதிகப்பட்டு பளிச்சென்றிருந்தது.

அவள் எதிர்பார்த்ததையும் விடவும் மிகவும் நல்லவளாக, அன்பாக, பணிவாக இருந்தாள நிர்மலா.

''என்னண்ணி.. ஏன் என்னை நிமிர்ந்தே பார்க்க மாட்டேங்கறீங்க..''

''அ.. அப்படியெல்லாமில்லையே'' என்று அவனைப் பார்த்தாள்.

''நான் புறப்படறேன் அண்ணி. சனி, ஞாயிறுல இங்கே வந்திடுவேன்.''

''சரி.. போய்ட்டு வாங்க!''

''அநேகமாக இனிமே வரும்போது, என்னோட நாலஞ்சு லேடீஸையும் அழைச்சிட்டு வருவேன்னு நினைக்கிறேன்.''

''லேடீஸா? ஏன்?''

''சென்னையிலே நிறைய பெண்கள் தைரியமும் தன்னம்பிக்கையுமில்லாம, வாழ்க்கையிலே தோற்றுப் போயிடறாங்க. நீங்க அவங்களுக்கு க்ளாஸ் எடுத்தா நல்லாயிருக்கும்னு நினைக்கிறேன்.'' சிரிக்காமல் சீரியஸாய் கூற.. கொல்லென்று சிரித்தான் சத்தியமூர்த்தி.

''உங்களுக்கு வேற வேலையே இல்லே..'' என்று ஒரே ஓட்டமாய் அறைக்குள் போய் நுழைந்துக் கொண்டாள்.

''சரிண்ணா நான் கிளம்பறேன். அம்மா வரட்டுமா?''

''போய் வாப்பா.''

நாட்கள் நகர்கின்றன.

ஒவ்வொரு நாளும் நிர்மலா மீதான அன்னியோன்யம் ஜெயலட்சுமிக்கு அதிகமாகிக் கொண்டே போனது. அந்தளவிற்கு அந்த குடும்பத்திற்கு எற்றாற்போல் தன்னை மாற்றிக் கொண்டாள்.

கணவன் தனக்கு ஆசையாய் வாங்கி வந்த எந்த பொருளானாலும் மாமியாருக்கும் கொடுத்த பின்பே சாப்பிடுவாள்.

விடாப்பிடியாய் மாமியாரிடம் ஒவ்வொன்றையும் கேட்டு, கேட்டு சமையலையும் கற்றுக் கொண்டாள். அதன்பின் மாமியாரை ஒரு வேலை கூட செய்ய விடுவதில்லை.

''போதும்மா.. ரெஸ்ட் எடுங்க.. அதான் நான் வந்துட்டேன் இல்லே.. நீங்க போய் டி.வி. பார்த்துக்கிட்டிருங்க.. உங்களுக்கு பிடிச்ச உயர்ந்த மனிதன் போடப்போறாங்க.. போங்க'' என்று சமையலறையிலிருந்து விரட்டியடிப்பாள்.

''ஊர் ஊரா தேடியிருந்தாக்கூட நான் இப்படியொரு மருமகளை தேர்ந்தெடுத்திருக்க மாட்டேன் சத்யா. மனசுக்கு நிறைவாயிருக்கு'' என்றாள் மகனிடம்.

ஜெயலட்சுமியும் அன்பை காட்டுவதில், கொடுப்பதில் ஏழையல்ல.

கிண்ணத்தில் இருந்த இளஞ்சூடான எண்ணெயை எடுத்து நிர்மலாவின் தலை முதல் கால் வரை தேய்த்து விடுவாள்.

''வேண்டாம்மா.. போதும் விடுங்க.. எனக்கு எண்ணெய் தேய்ச்சு குளிச்சு பழக்கமில்லை.''

''பழக்கப்படுத்திக்க.. நேத்து பார்த்தேனே உன் கண்களை? எப்படி சிவந்துப் போயிருந்தது? உடம்பு சூடு. தணிய வேண்டாமா?'' என்று வலிக்காமல் உடம்பு முழுக்க பிடித்து விட்டாள்.

இந்த காட்சியைப் பார்த்து சத்தியமூர்த்தி

ஆனந்தக்கண்ணீர் வடித்தான்.

'எத்தனை வீட்டில் இந்த மாதிரி மாமியார்- மருமகள் அன்னியோன்ய காட்சியை பார்க்க முடியும்? அதுவும் காதலித்து திருமணம் செய்த வீட்டில்? முருகா... இந்த அன்பு எப்பவும் நீடித்து நிலைத்திருக்கணும்' கடவுளிடம் மனமுருக வேண்டிக் கொண்டான்.

# 9

"என்ன மணா.. திடீர்னு சொல்லாமக் கொள்ளாம ரெண்டு நாள் லீவுப் போட்டுட்டீங்க?" சக ஊழியை மாதுரி மணவாளனைப் பார்த்ததும் விசாரித்தாள்.

அழகிய இளம் பெண்ணான அவள் மீது மணவாளனுக்கு காதல் உண்டு. ஒரு தலைக்காதல். சந்தர்ப்பம் வரும் போது வெளிப்படுத்திக்கொள்ளலாம் என்று கூறவில்லை. ஏனென்றால் அவனுள் ஒரு லட்சியம் உண்டு.

ஆபீஸில் எக்ஸாம் எழுதி பிரமோஷன் வாங்கிய பிறகே காதல், கல்யாணம் என்பதில் உறுதியாக இருந்தான். அதுவரை மனசுக்குள்ளேயே அவளுடன் கைகோர்த்து பீச் மணலில் நடந்தான். முதுகோடு ஒட்டிக்கொண்டு பைக்கில் ரெஸ்டாரெண்ட் போனார்கள்.

"ஹலோ... மணா உங்களைத்தான் கேட்கிறேன்" என்றாள் மறுபடி.

"ஓ... ஸாரி.. கவனிக்கலே.. வெரிகுட்மார்னிங்!"

"போச்சுடா... நான் இன்னும் விஷ் பண்ணவே இல்லையே."

"ஹி...ஹி.."

"ஐயோ... என்னாச்சு உங்களுக்கு? வழியறீங்க. திடீர்னு ஏன் லீவுப்போட்டீங்கன்னு கேட்டா...?"

"அது பெரிய விஷயம் மாதுரி.. திடீர்னு எங்கண்ணனுக்கு மேரேஜ் நடந்திடுச்சு.." என்று சற்று விளக்கமாய் நடந்ததைக் கூறினான்.

"பரவாயில்லையே! மூலையிலே முடங்கி கண்ணைக் கசக்கிட்டிருக்காம தைரியமா ஒரு முடிவெடுத்த உங்கண்ணியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்" என்றாள் மனப்பூர்வமாக.

## மடோனாவின் மறுபக்கம்

அமெரிக்காவின் புயல் வேக பாடகி மடோனா. இவரின் பேட்டை எக்ஸ்பிரஸ் உலக நாடுகளில் புரண்டோடுகிறது. பூவை புயலாக் பிரத்யேக பாடகி இவர்.

ஆஜானுபாகுவாக தோற்றமளிக் மடோனாவுக்கு 44 வயதாகிறது. இவ மறுபக்கம் பெரும்பாலானோரு தெரிந்திருக்க வாய்ப்பில் பேட்டைராபில் பட்டை கிளப் மடோனா, தற்போது கராத்தே கலைக்

ச்சை கட்டி வருகிறார்.

ஆம், மடோனா ரகசியமாக ராத்தே பயில்கிறார். இவரின் குஸ்தி ரு ஷீகான் சவுதாமினி. பாப் மேடையில் தொண்டை கிழிய பாடும் வர் தற்போதும் அதே சத்தத்துடன் ராத்தே பயின்று ருகிறார். பினாக் பஸ்ட் உடைகளை றக்கணிக்கும் டோனா, மைக்குறை டையுடனே யிற்சி எடுத்து ருகிறார்.

-நீலகண்டன்.

"இதை அப்படியே எங்கண்ணிக்கிட்டே சொல்லிட அடுத்தவங்களை பாராட்ட நிறுத்திடாம, அதையே ஃபாலோப் பண்ணு

"என் மனசுக்கு ஏத்தமாதிரி ஒரு கிடைச்சார்னா.. கண்டிப்பா ஃபாலோ பண்ணுவேன்!"

"அப்ப இதுவரை அப்படி ஆணையும் நீங்க சந்திச்சதில்லையா?"

"ஏன் இல்லாம? அவருக்கும் என்ன பிடிச்சிருக்கு. வாயைத்திறந்து சொன்னாதா சரியான கல்லுளிமங்கன்" என்றாள் குறும் அவனைப்பார்த்து.

"ஆம்பளைய குறைசொல்லாதீங்க. நீங்க முதல்ல சொல்லலாமில்லையா" என்றான்.

"ம்ஹூஉம்... இந்த விஷயத்திலே மட் ஜெண்ட்ஸ் ஃபர்ஸ்ட்!"

இந்த கண்ணாமூச்சி விளையாட்டு ஒரு வருடமாகவே நடந்து வருகிறது.

ஆனாலும் மணவாளன் மனதிற்குள் சந்தேகம் இருக்கவே செய்தது.

'ஒருவேளை... மாதுரி யாரையாவது காதலித்தால்?'

அந்த தயக்கம் வேறு அவன் வா கட்டிப்போட்டது.

"அண்ணி... அண்ணி... அண்ணி வீட்டிற்குள் நுழைந்ததும்தான் தாம ஒவ்வொரு இடமாய் சென்று நிர்மலா



கடினான்.

கூடத்தில், மயலறையில், க்கையறையில், ஊஉம்... எங்குமில்லை.

"எங்கேம்மா அண்ணி?"

"உன்னைப் பார்த்ததும் ஓடிப்போய் ஒளிஞ்சுக்கிட்டா"

"எங்கே?" ரகசியமாய் கேட்டான்.

ஜெயலட்சுமியும் சைகையாலேயே கொல்லைப்புறத்தை காட்டினாள்.

அடிமேல் அடியெடுத்து வைத்து கொல்லைப்புறம் சென்றான்.

பச்சைப்பசேல் என்றிருந்தது.

கொய்யா, மாதுளை, எலுமிச்சை, மாமரம் என்று காய்த்துக்கிடக்க.. ஓரமாய் மல்லிகையும், கனகாம்பரமும் மொட்டுகளை சுமந்திருக்க, வரப்ரோரம் மருதாணி செடியும், பிள்ளாண்ட்டும் படர்ந்திருந்தன. இனைற்று பற்றைப் பற்றியபடி தெரித்த... மருதாணியில் சிவந்த கையைப் பார்த்துவிட்டு... அசைப்படாமல் நடந்தான்.

இவன் வருகிறானா என்று மெல்ல வலப்பக்கம் எட்டிப்பார்த்தாள் நிர்மலா. மணவாளனோ இடப்பக்கம் வந்து நின்றான்.

அவனைக் காணாமல் 'அப்பாடா..' என்று மூச்சு விட்ட நிர்மலா திரும்பியவள்... அதிர்ச்சியில் கண்களை விரித்தாள்.

எதிரே மணவாளன்.

"என்னண்ணி... ஏன் என்னைக் கண்டு ஓடி ஒளியறீங்க? அப்ப என்னவோ தப்பு நடந்திருக்கு."

அவனைத்தாண்டி ஓட முற்பட்டவளை நகர விடாமல் தடுத்தான்.

"சொல்லிட்டுப்போங்க... ஆணா, பெண்ணா?"

"என்னது ஆணா, பெண்ணா?"

"உங்க வயித்திலே..."



"ஐயோ... என்ன நீங்க? அம்மா பாருங்கம்மா இவரை?" அவனைத் தள்ளிவிட்டு ஓடினாள்.

"டேய் விட்றா... வந்ததும் வராததுமா அவளைக் கிண்டல் பண்ணிக்கிட்டு. ஆமா, இன்னைக்கு புதன்கிழமைதானே? லீவுக்கூட இல்லையே. அப்புறம் எப்படி வந்தே?"

"அண்ணி கன்சீவாகியிருக்காங்கன்னு அண்ணன் போன் பண்ணி சொன்னதும், என்னால அங்கே இருக்க முடியலேம்மா! இந்தப் பூனையும் பால் குடிக்குமாங்கற மாதிரி இருந்துக்கிட்டு இப்படி ஒரு காரியம் பண்ணியிருக்காங்களே... அவங்களை உடனே பார்க்கணும் போல இருந்துச்சு.. அதான் லீவுப்போட்டுட்டு ஓடி வந்துட்டேன். என்னாச்சு அண்ணி... ஏன் இப்படிப் பண்ணீங்க?"

"ஐயோ... அம்மா!" வெட்கத்தில் புழுபோல் நெளிந்தவள், ஜெயலட்சுமியின் தோளில் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

"டேய்... பாவம் விட்டுர்றா!"

"டேய் மணா.. என்னடா ஓரேயடியா என் நிம்மியை கிண்டல் பண்ணிட்டிருக்கே? அப்படியென்ன ஊர்ல யாரும் பண்ணாத தப்பைப் பண்ணிட்டா?" தூண்டி விட்டான் சத்தியமூர்த்தி.

"சாதாரண தப்பா? ஒன்னுந்தெரியாத எங்கண்ணனை அப்பாவாக்கிட்டாங்களே!"

"இருக்கட்டுமே!"

"அம்மாவைப் பாருங்க... எவ்வளவு இளமையா இருக்காங்க? அவங்களைப் போய் பாட்டியாக்கிட்டாங்களே... என்ன கொடுமையிது?"

"டேய்... உன் நையாண்டிக்கு ஒரு அளவே இல்லையா?"

"நீங்க சும்மாயிருங்கம்மா... விட்டா வசவசன்னு வீடு முழுக்க பெத்துப் போட்டுவாங்க!"

"ஆமான்டா... வருஷத்துக்கு ஒன்னு பெத்துக்க தான் போகிறோம். உன்னால என்னடா பண்ண முடியும்?"

"அடக்கடவுளே...அப்ப அண்ணிய எப்பவும் வயித்துல மூட்டையோட தான் பார்க்கணுமா?"

"என்னங்க... நீங்களும் கூட சேர்ந்துக்கிட்டு..." கணவனைப் பார்த்து சிணுங்கினாள்.

"சரி... சரி... அதை விடுங்க. எப்பேர்ப்பட்ட ஸ்வீட் நியூஸ் இது? எனக்கு ஸ்வீட் எதுவும் இல்லையா?"

"உனக்கில்லாததா? கொஞ்சம் பொறு. அருமையா பால் பாயசம் செய்து தர்றேன்."

"அதை மெதுவா செய்யுங்க. அதுக்கு முன்னால இதை சாப்பிடுங்க" என்றவன் கவரைப்பிரித்து பெரிய ஸ்வீட் பாக்ஸை எடுத்தான்.

நிர்மலாவிடம் நீட்டினான்.

"கங்க்ராஜுலேஷன்ஸ் அண்ணி"

"தாங்க்யூ" என்றபடி வாங்கிக் கொண்டாள்.

"அப்புறம்... அண்ணி, இதிலே டாக்டரோட அட்வைஸ்படி சில ஹெல்த் பவுடர் வாங்கி வந்திருக்கேன். பால்ல கலந்து குடிக்கணுமாம். குழந்தை ஹெல்த்தியா பிறக்குமாம். இது மெட்ராஸ்ல மட்டும் தான் கிடைக்கும். காலியானதும் சொல்லுங்க... வாங்கிட்டு வர்றேன்."

அவன் பேசிக் கொண்டே போக, நிர்மலா அவன் அன்பில் நெகிழ்ந்து... கண்கள் கசிந்தன.

"அ..ண்...ணி... என்னயிது?" என்றான் அதிர்வாய்.

"ஒ...ஒன்னுமேயில்லே... ரொம்ப சந்தோஷமாயிருக்கு. எல்லாரும் போட்டி போட்டுக்கிட்டு என் மேல அன்பை கொட்டறீங்களே... அதை... அதை தான் என்னால..."

"அப்ப நம்ம வீட்டுக்கு 'அன்பு இல்லம்'னு பேர் வச்சிடுவோமா அண்ணி?"

அழுகையை நிறுத்தி சட்டென சிரித்தாள் நிர்மலா.

"ஹவுஸ் ஓனர் எந்த அப்ஜெக்ஷனும் சொல்லலேன்னா தாராளமா வச்சிடலாம் மணா" என்றான் சத்தியமூர்த்தி.

அடுத்த கணம்...

அங்கே எழுந்த சிரிப்பலை அடங்க வெகு நேரமாயிற்று.

## 10

தலைசுற்றலும், வாந்தியும் நிற்காமல் அவஸ்தைப்பட்டாள்.

ஒரு பருக்கைக்கூட உள்ளே இறங்க மறுத்தது.

மனைவியின் தலையை கோதிவிட்டபடி அருகில் அமர்ந்திருந்தான் சத்தியமூர்த்தி.

"சத்யா.. வாப்பா.. சாப்பிடுவே!"

சத்யா மனைவியைப் பார்த்துவிட்டு அம்மாவின் பின்னே சென்றான்.

தட்டு எடுத்து வைக்க முயன்றவளை தடுத்தான்.

"வேண்டாம்மா.. நான் சாப்பிடலே.."

"ஏம்ப்பா?" நெற்றி சுருங்கின.

"பாவம்.. நிம்மி எதுவும் சாப்பிடலே. சாப்பிட்டாலும் எதுவும் நிக்கலே.. அவ பட்டினி கிடக்கும் போது நான் மட்டும் சாப்பிடறது சரியில்லேம்மா. என் குழந்தையை அவ சுமந்துக்கிட்டு இருக்கா. கஷ்டம் அவளுக்கு மட்டுமே சொந்தமா? கொஞ்சமாவது நானும் அனுபவிச்சாதான் எனக்கு திருப்தி. ப்ளீஸ்மா.. எனக்கு வேண்டாம்."

ஜெயலட்சுமி நெகிழ்ந்து போனாள்.

"சத்யா.. நீ சாப்பிடலேங்கறதுக்காக வருத்தப்படறதா.. இல்லே, உன்னையே நம்பி வந்தவ சாப்பிட முடியாம கஷ்டப்படறாங்கறதுக்காக உன்னை நீயே வருத்திக்க நினைக்கற பாசத்தை நினைச்சு சந்தோஷப்படறதான்னு புரியலேப்பா. உன்னை நான் வற்புறுத்த மாட்டேன்." எழுந்துக் கொண்டாள்.

"ஒரு நிமிஷம்மா.. நான் சாப்பிடலேங்கறது நிம்மிக்கு தெரிய வேண்டாம். கொல்லைப்புறத்துல ஒரு பத்து நிமிஷம் காத்து வாங்கிட்டு வந்திடறேன்."

"நான் அவகிட்டே உண்மைய போட்டு உடைச்சிட மாட்டேன். போதுமா?" சிரித்தபடி போய் விட்டான்.



சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தையை ஈன்றெடுத்தாள் நிர்மலா. அவளுக்கு குழந்தை பிறந்த செய்தியை அறிந்தும் அவள் வீட்டினரின் மனம் இளகவில்லை. யாரும் வந்து பார்க்கவில்லை. அதற்காக நிர்மலா வருத்தப்படவுமில்லை.

குழந்தைக்கு நரேஷ் என்று பெயரிட்டனர். வாழ்க்கை சந்தோஷமாக ஓடிக் கொண்டிருந்தது.

அடுத்து ஜோதி பிறந்தாள்.

சத்தியமூர்த்தியின் கடையில் இதுவரை போதுமான அளவில் லாபம் வந்து கொண்டுதானிருந்தது. அதனால், வாழ்க்கை வண்டியை ஓட்டுவதற்கும், இதர மருத்துவ செலவுகளுக்கும் அவன் சிரமப்படவில்லை.

ஆனால், இப்போது அவன் கடைக்குப் போட்டியாக பக்கத்திலேயே இன்னொரு கடை முளைத்து விட்டது. அதுவும் பெரியகடை.. ஏஸியெல்லாம் போட்டு அமர்க்களப் படுத்தியிருந்தார்கள். விசாரித்துப் பார்த்ததில் அந்த கடையின் பினாமி நிர்மலாவின் தந்தை கங்காதரன் தான் என்று தெரியவர மனம் நொந்துப் போனான். ஆனால், வீட்டில் யாரிடமும் அதைப் பற்றி மூச்சு விடவில்லை.

எப்போதுமே மக்களுக்கு புதியது என்றாலே ஒரு மோகம் தானே? அதனால் சத்தியமூர்த்தியின் கடை டல்லடித்தது. பாதிக்கூட விற்பனையாகவில்லை. இதே இடத்தில் இருந்தால் முன்னேற முடியாது என்று புரிந்து போக.. வேறு இடத்தில் கடை வைக்க இடம் தேடினான்.

மணவாளன் அலுவலகத்தில் தேர்வு எழுதி பாஸாகிறான். பதவி உயர்வும் கிடைக்கிறது.

'இனி எந்தத் தடையும் இல்லை. அம்மா வேறு 'உனக்கு வயதாகிறது. திருமணம் செய்து வைக்கப் போகிறேன். பெண் பார்க்க ஆரம்பித்து விட்டேன்' என்று மிரட்டிக் கொண்டிருக்கிறாள். தாமதிப்பதில் அர்த்தமில்லை. மாதுரியிடம் என் மனதில் இருப்பதை சொல்லி விடவேண்டும்' என்று நினைத்தான் மணவாளன்.

ஆனால், நேரம் பார்த்து இருபது நாள் லீவுப் போட்டுவிட்டு போய் விட்டாள் மாதுரி. நார்த் இந்தியா டூராம். குடும்பத்தோடு போகிறார்களாம். அசுவாரஸ்யமாகி விட்டது மணவாளனுக்கு.

'இதென்ன? என் காதல் மேட்டர் சிந்துபாத் கதைபோல் இழுத்துக் கொண்டே போகிறதே! இதே ரீதியில் போனால்.. நான் கிழவனாகி விடுவேன். அவள் திருமணமாகி குழந்தைகள் பிறந்து பேரன் பேத்தியே பார்த்து விடுவாள்!' நினைத்த மாத்திரத்தில் அந்த நிலையிலும் சிரிப்பு வந்தது.

"அப்பாடா" என்று நிம்மதியாய் மூச்சு விட்டான் சத்தியமூர்த்தி.

ஒருவழியாய் கடை வைக்க இடம் கிடைத்து விட்டது. சிட்டியை விட்டு சற்றே ஒதுக்குப்புறமான இடமாயிருந்தாலும் மார்க்கெட் அருகில் இருந்தது கடை. ஒரு கிலோமீட்டர்சுற்று வட்டாரத்தில் அதுபோன்று கடை எதுவுமில்லை என்பது ஆறுதலான விஷயம். அப்போதே அட்வான்ஸ் கொடுத்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.

"புஸ்ஸ்.." என்ற சத்தத்துடன் அவன் பயணித்துக் கொண்டிருந்த ஸ்கூட்டர் டயர் பஞ்சராகி விட்டிருந்தது.

"அடடா" என்றபடி இறங்கி ஆராய்ந்தான்.

டயர் காற்றை இழந்து சப்பையாகி இருந்தது.

சுற்றிலும் பார்த்தான்.

புறநகர் ஏரியா அது. எப்போதோ ஒரு பஸ் வந்து போகும். அருகில் வீடுகளோ, கடைகளோ எதுமில்லை. அதற்கு இன்னும் இரண்டு கிலோமீட்டர் போக வேண்டும்.

வேறு வழியின்றி சலிப்புடன் ஸ்கூட்டரை தள்ளிக் கொண்டு நடந்தான்.

ஐந்து நிமிடம் நடந்திருக்க மாட்டான்.

தூரத்தில் ஒரு லாரி வந்துக் கொண்டிருந்தது. இவன் கவனித்து, அவசர அவசரமாய் ஓரமாய் தள்ளிக் கொண்டு ஓட முற்பட... ஆனால், அசுர வேகத்தில் தாறுமாறாய் ஓடி வந்த லாரி நேரே இவன் மீது மோதி.. அவனை உயரே தூக்கிப் போட்டு பந்தாடியது. கீழே ஒரு பெரிய பாறாங்கல் மீது விழுந்து ரத்த சகதியானான்.

மயக்கத்தில் ஆட்பட்டிருந்தாள் நிர்மலா.

ஜெயலட்சுமி தவித்துப் போனாள்.

'இவளை கவனிப்பதா? சத்யாவுக்காக கவலைப்படுவதா என்று?'

மணவாளன் நரேஷையும், ஜோதியையும்

ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று வந்தான், கையில் சில உணவுப் பொட்டலங்களோடு.

சத்தியமூர்த்தி விபத்தில் அடிபட்டு, ஹாஸ்பிடலில் சேர்த்து ஒரு வாரம் ஓடிவிட்டது.

இன்னும் நினைவுத் திரும்பவில்லை.

பலத்த அடி! உடம்பில் ஒரு இடம் பாக்கியில்லாமல் அடி. ஏகப்பட்ட ரத்தம் போய்விட்டது. போன் வந்ததும் உடனே ஓடி வந்தான் மணவாளன். அவன் தான் அண்ணனுக்கு ரத்தம் கொடுத்தான். சிகிச்சைக்கென்று ஒரு பெரிய தொகையும் கொடுத்தான். அது இரண்டே நாளில் கரைந்துப் போனது.

''அண்ணி..''

''.....''

''அண்ணி சாப்பிடுங்க அண்ணி. எதுவுமே சாப்பிடாம இருந்தா உடம்பு என்னத்துக்காகும்?''

''வேணாம்!'' அரைமயக்கத்தில் மறுத்தாள்.

''அண்ணனுக்கு ஒண்ணும் ஆகாது அண்ணி. அபாயக்கட்டத்தை தாண்டிட்டார்னு டாக்டர் சொல்லிட்டார். இன்னைக்குள்ளே நினைவுத் திரும்பிடும்னு நம்பிக்கையா சொல்றாங்க. உங்களை இப்படி துவண்டு போய் அண்ணன் பார்த்தார்னா, வருத்தப்பட மாட்டாரா? நமக்கு ரொம்ப முடியலே போலிருக்குன்னு பயப்பட மாட்டாரா? நீங்க தெம்பா இருந்தா தானே அண்ணனை கவனிச்சுக்க முடியும்? சாப்பிடுங்க அண்ணி. நீங்க சாப்பிடலேன்னு அம்மாவும் சாப்பிடாம இருக்காங்க.''

கண்களைத் திறந்தாள் நிர்மலா.

''நீங்க ஏம்மா சாப்பிடலே?''

''நீ சாப்பிடும்மா.: எப்படியாகிட்டே? சத்யாவுக்கு ஒண்ணும் ஆகாது. கடவுள் அந்தளவுக்கு மோசமானவனில்லே. சாப்பிடும்மா..''

''முடியலேம்மா.. அவர் இப்படி இருக்கிறப்ப.. எப்படி முடியும்? அவர் எந்திரிக்கட்டும். வா... நிம்மின்னு என்னை கூப்பிடட்டும்.. அப்புறம் சாப்பிடறேன்.''

அவள் சொல்லி முடிக்கவில்லை.

நர்ஸ் மூச்சிரைக்க ஓடி வந்தாள்.

''அம்மா.. அவருக்கு நினைவு திரும்பிடுச்சு.. டாக்டர் உங்களை வரச் சொல்றார்.''

''கடவுளே..'' சந்தோஷத்துடன் அனைவரும் அந்த அறைக்குள் நுழைந்தனர்.

கட்டிலில் எழுந்து உட்கார்ந்திருந்தான் சத்தியமூர்த்தி.

''என்னங்க.. எப்படி இருக்கீங்க?'' அவனைப் பார்த்ததும் அழுது விட்டாள் நிர்மலா.

எல்லோரையும் ஒருமுறை சுற்றிப் பார்த்தவன்...

''ஹை... நிம்மி எப்படி அழறாப் பாரேன்... ஹா.. ஹா..'' அவன் பேசிய விதமும், வெளிப்பட்ட சிரிப்பும் எதையோ உணர்த்த...

அரண்டுப் போயினர் அனைவரும்.

## 11

''நரேஷ்...''

''என்னம்மா?'' என்று வந்து நின்றான் மூன்று வயது நரேஷ்.

''இந்த பாலை அப்பாக்கிட்டே கொடுத்திட்டு வர்றியா?''

''ஐயோ...'' முகம் வெளிறிப் போனது.

''என்னடா?''

''அந்த பைத்தியம்கிட்டேயா? நான் மாட்டேன்!''

இரு கைகளையும் பயத்தில் உதறி மறுத்தான்.

''பைத்தியமா? யாரடா பைத்தியம்னு சொன்னே?'' இழுத்து வைத்து அடித்தாள்.

''அம்மா... அடிக்காதேம்மா... வலிக்குதும்மா...''

''சொல்லுவியா? இனியொருமுறை அப்படி சொல்லுவியா?''

''அடிக்காதேம்மா...: சொல்ல மாட்டேம்மா... பாட்டி... பாட்டி...'' கிடைத்த இடைவெளியில் அவளிடமிருந்து தப்பித்து, படுத்துக் கொண்டிருந்த பாட்டியிடம் ஓடினான்.

இரண்டு நாட்களாய் காய்ச்சல் அவளுக்கு. நரேஷின் குரல் கேட்டு கண்விழித்தாள்.

ஓடி வந்து அவள் மடியில் விழுந்தான்.

''என்னடா கண்ணா... ஏன் அழறே?''

''அம்மா என்னை அடிக்கிறாங்க பாட்டி!''

''ஏம்மா... சின்னப்பிள்ளையைப் போட்டு அடிக்கிறே? எப்படி அழறான் பாரு!''

''இவனா சின்னப் பிள்ளை? அவன் என்ன பேசினான் தெரியுமா?''

''என்னடா சொன்னே?''

அம்மாவை பயத்துடன் நிமிர்ந்து பார்த்துவிட்டு பாட்டியிடம் ஒண்டிக் கொண்டான் நரேஷ்.

''எப்படி சொல்லுவான்? உன்னை...'' மறுபடி அடிக்க கையை ஓங்கினாள்.

''பயப்படற பிள்ளைய அடிக்காதேம்மா. அப்புறம் பயம் விட்டுப் போய்டும். தைரியமா தப்பு செய்யத் தோணும். என்ன சொன்னான்... நீயே சொல்லு?''

''பாலைக் கொண்டு போய் அப்பாக்கிட்டே கொடுத்திட்டு வாடான்னா... 'ஐயோ அந்த பைத்தியத்துக்கிட்டேயா? நான் மாட்டேன்'னு பயப்படறான்... இவனை சும்மா விடலாமா... சொல்லுங்க?''

அம்மா எங்கே மறுபடி அடிக்கப் போகிறாளோ என்கிற பயத்தில் பெரிதாய் குரலெடுத்து அழ ஆரம்பித்தான் நரேஷ்.

அவன் அழுவதைப் பார்த்து பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருந்த ஒரு வயது ஜோதி வீறிட்டு அழுதாள்.

''நிர்மலா... நீ கொஞ்சம் பொறுமையா இரும்மா. நரேஷ்... நீ போய் கொல்லைப் புறத்திலே விளையாடு. கிணறு பக்கமெல்லாம் போகக் கூடாது... சரியா?''

'சரி' எனத், தலையாட்டி விட்டு ஓடிப் போய் விட்டான்... தப்பித்தால் போதுமென்று.

நிர்மலா ஜோதியை தூக்கி மார்போடு அணைத்துக் கொள்ள, சற்று நேரத்தில் அழுகையை நிறுத்திவிட்டது.

''குழந்தையைப் போட்டு அடிக்கலாமா நிர்மலா?''

''அவரைப்போய் அவன்...''

''சரி... அதுக்காக? மறுத்தாலும், மறுக்கலேன்னாலும் என் பிள்ளை இப்ப அந்த நிலைமையிலேதானே இருக்கிறான்? பெரியவங்களே கிட்டே நெருங்க பயப்படும் போது... மூணு வயசுப் பிள்ளை... பயப்படாதா?''

''என்னால இதையெல்லாம் தாங்கிக்க



## இசையில் தவழும் இரட்டை வயலின்

இங்கிலாந்தின் இரட்டை வயலின், மும்பையில் இன்று மோகனம் இசைக்க தொடங்கிவிட்டது. சங்கீத மேதை சங்கர் மெகா வயலினில் அனாயாசமாக மெல்லிசை மீட்டுகிறார். இவருடன் ஸ்வரங்களுக்கு ஜதி சேர்க்கும் 'குட்டி மேஸ்ட்ரோ' ஜிக்ரா, ஒரு டீன்-ஏஜ் மங்கை.

சாக்ஸபோன் வடிவில் காட்சியளிக்கும் மெகா வயலின், 10-க்கும் மேற்பட்ட தந்திகளை உடையது. இதனை முறைப்படி பயிலுவதற்காக லண்டன் சென்று திரும்பியவர் ஜிக்ரா. மெகா வயலினில் இவரின் மெல்லிசை சாதகம், சாஸ்திரிய சங்கமம்தான். இனிக்கும் வயதில் திளைக்கும் ஜிக்ரா சங்கீத கடலில் ஆர்ப்பரித்து வருகிறார்.

சங்கர்- ஜிக்ரா ஜோடியின் இரட்டை வயலின் நம் கீர்த்தனையில் தொடங்கி வெஸ்டர்ன் போக் இசையில் கரை கடக்கிறது. மேற்கத்திய நாடுகளின் மெகா வயலின், இந்தியாவில் அரங்கேறுவது இதுவே முதல் முறையாகும்.

-சாந்திமாரி.

முடியலேம்மா. ஏன் நமக்கு இப்படியெல்லாம் நடக்குது?''

''அழாதேம்மா... நாளை விடியலில் உயிர் பெறுவோம்ங்கற நம்பிக்கையிலே தான் சூரியன் அஸ்தமிக்குது. நமக்கும் விடியாம போகாது. கல்மிஷமில்லாத அன்பான உள்ளங்கள் வாழுற இடம் இது! கடவுள் நம்மளை இப்படியே விட்டுட மாட்டான். கை கொடுப்பான். கண்டிப்பா கரையேத்துவான். நம்பிக்கையோட இரு-அந்தப் பாலை இப்படிக் கொடு. நான் கொடுத்திட்டு வர்றேன்!''

''வேணாம்மா! நீங்க படுங்க... நான் பார்த்துக்கறேன்''

குழந்தையை அவனிடம் கொடுத்து விட்டு சத்தியமூர்த்தி இருந்த அறைக்குள் சென்றாள்.

அந்த அறைக்குள் சென்றதுமே தொண்டையை எதுவோ இறுகப் பற்றி அழுத்தியது போல் துக்கம் அடைத்துக் கொண்டது.

சத்தியமூர்த்திக்கு எல்லாமே நேர்த்தியாக, சுத்தமாக இருக்க வேண்டும். வைத்த பொருள் வைத்த இடத்திலேயே இருக்க வேண்டும். தரையில் மண் தட்டுப்படக்கூடாது.

அப்படிப்பட்டவன், இருந்த அறை கந்தல் கோலமாய் இருந்தது. பொருட்கள் தாறுமாறாய் சிதறி கிடந்தது. ஜன்னல் திரைச்சீலைகள் கிழிக்கப்பட்டு நார் நாராய் தொங்கின. சத்யாவுக்கு கோபம் வந்தால் முதலில் கிழிப்பது துணிகளை தான். தான் உடுத்தி இருக்கும் உடைகளையும் விட்டு வைப்பதில்லை. கையில் கிடைக்கும் பொருட்களை கண்மண் தெரியாமல் எடுத்து வீசுவான். பலமுறை நிர்மலாவுக்கு காயங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஏழெட்டு முறை திரைச்சீலைகளை மாற்றிப் பார்த்தாயிற்று. அவனின் போக்கு மாறுவதாய் தெரியவில்லை. அதனால்... திரைச்சீலைகளை இப்போது மாற்றுவதில்லை.

அவனுக்கு எல்லோரையும் அடையாளம் தெரிகிறது. பேர் சொல்லியே கூப்பிடுவான். ஆனால், அவன் செய்கைகள் ஐந்து வயது சிறுவனின் மனநிலையைக் கொண்டிருந்தது.

தலையில் பலமாக அடிபட்டதால், அதிர்ச்சியில் மனநிலை பாதிக்கப்பட்டு விட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர். தொடர்ந்து மாத்திரை, மருந்துகள் கொடுத்து வந்தால், குணமடைய வாய்ப்புண்டு என்றனர். அந்த மாத்திரைகளை அருகில் கொண்டு வந்தாலே... அலறுவான்.

''பார்த்தாலே வாந்தி வருது... வேணாம் போ!'' என்று சுற்றி சுற்றி ஓடுவான்.

அதனாலேயே சில சமயம் பாலில் கலந்து கொடுத்து விடுவாள்.

அவன் ஒருமுறை பாலில் மாத்திரைகளை கலப்பதை பார்த்து விட்டான். அதனாலேயே பாலைக் கண்டாலே அலறுவான்.

சத்தியமூர்த்திக்கு நரேஷ் என்றால் கொள்ளைப் பிரியம்.

''நரேஷ் வாடா விளையாடலாம்... வாடா'' என்று கெஞ்சுவான், அந்த முப்பது வயது குழந்தை.

ஆரம்பத்தில் நரேஷ் அப்பாவுடன் விளையாடவே செய்தான். ஆனால் நாளடைவில் அவனின் போக்கில் தெரிந்த மாற்றங்கள், அலறுவது, தூக்கி எறிவதுக் கண்டு பயந்து... நெருங்க மறுத்தான். ஆனால், நரேஷ் எது சொன்னாலும் சத்யா கேட்டுக் கொள்வான். கொடுப்பதை சாப்பிடுவான். அதற்காக தான் மாத்திரை கலந்த பாலை அவனிடம் கொடுத்தனுப்ப நினைத்தாள்.

சத்தியமூர்த்தி இவளுக்கு முதுகை காட்டியபடி ஜன்னல் கம்பிகளை பிடித்தபடி லேசாக முதுகை வளைத்தபடி நின்றிருந்தான். இடுப்பில் ஓங்கி இவன் செய்கி... சேட்டைகளால் நிற்பதில்லை. ஷார்ட்ஸ்தான் மாட்டி இருந்தான்.

''சத்யா...'' என்றழைத்தாள்.

மெல்லத் திரும்பினான்.

திடுக்கிட்டாள் நிர்மலா.

விக்கி... விக்கி... அழுது கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி.

''சத்யா... என்னப்பா... ஏன் அழறீங்க?''

''ச்சீ... கிட்டே வராதே!''

''ச...த்...யா!''

''ஏன் நரேஷை போட்டு அடிச்சே?''

''.....''

''அவன் என் ஃப்ரண்டுன்னு உனக்கு தெரியாதா?''

''ஃப்ரண்டா? கடவுளே...! அவன் உங்க பிள்ளை சத்யா!'' நொந்துப் போனாள்.

பனிரெண்டிருக்கும் அவனின் முகம் கறுத்து. விபத்தில் அடிபட்ட காயம் ஏற்படுத்திய தழும்புகளும் சேர்த்து விகாரமாக்கியிருந்தன.

''சொல்லு... ஏன் அடிச்சே? அவன் எப்படி அழுதான் தெரியுமா? எனக்கு அழுகை வருது. போ.. போய்டு என் முன்னாடி வராதே!''

''என்னையா போக சொல்றீங்க? நான் உங்க நிம்மி சத்யா!''

''நிம்மியில்லே... அம்மி... போ... எனக்கு உன்னைப் பிடிக்கலே''

''சரி... போய்டறேன்... பாலை குடிச்சிடுங்க... போய்ட்றேன்''

''சொன்னா கேக்கமாட்டே?'' சட்டென அவள் கையிலிருந்த பால் தம்ளரை பிடுங்கி அவள் முகத்தில் வீசி எறிந்தான்.

கனமான தம்ளர் நெற்றியில் பட்டு குபுக்கென்று ரத்தம் வெளிப்பட, பாலும் ரத்தமும் கலந்து வழிந்தது.

பழகிப் போனதால் 'ஆ' வென அலறாமல் நெற்றியை பற்றிக் கொண்டாள்.

ரத்தத்தை பார்த்ததும் உதடு பிதுக்கி ஓலமிட்டு அழுதான்.

''உன்னை அடிச்சிட்டேனே... ரத்தம் வருதே... ஐயோ... எனக்கு பயமாயிருக்கே.''

''என்னங்க... என்னங்க... அழாதீங்க... எனக்கு ஒண்ணுமில்லே''

''நீ போ... உன்னைப் பார்த்தாலே பயமாயிருக்கு... போய்டு...'' என்று இன்னும் அழ ஆரம்பிக்க, அதற்கு மேல் பொறுக்க முடியாமல் நிர்மலாவும் கதறினாள்.

''கடவுளே... இதென்ன சோதனை எனக்கு?''

## 12

ஜெயலட்சுமி குளித்து முடித்து பாத்ரூமிலிருந்து வெளிப்பட்டாள். சமையலறையில் பிஸியாக இருந்தாள் நிர்மலா. சத்தியமூர்த்திக்காக கேழ்வரகு பாயசம் தயாரித்து இறக்கி ஆற வைத்தாள்.

''ரெடியாய்டுச்சாம்மா?'' என்று கேட்டபடி, சமையலறைக்குள் நுழைந்தாள் ஜெயலட்சுமி.

''இதோ...'' என்று கிண்ணத்தில் ஸ்பூன் போட்டு எடுத்துத் தந்தாள்.

நிர்மலாவைக் கண்டாலே உஷ்ணமாகி விடுகிறான் சத்தியமூர்த்தி. அவள் கையால் எதையும் சாப்பிடுவதில்லை. ஜெயலட்சுமி தான் எல்லாமே! மணவாளன் லீவில் வரும் போது அவன் கவனித்துக் கொள்வான்.

நிர்மலா உள்ளுக்குள் மருகினாள்.

சத்தியமூர்த்திக்காக தன் சொந்த பந்தங்களை பகைத்து உதறிவிட்டு வந்தாள். இன்று அவளை பகையாக நினைக்கிறான் காதல் கணவன். என்னக் கொடுமையிது?

''அம்மா... மதிய சமையலுக்கு காய்கறியில்லே... நான் மார்க்கெட்டுக்கு போய் வந்திடறேன்'' என்று பிளாஸ்டிக் கூடையை கையில் எடுத்துக் கொண்டாள் நிர்மலா.

வாசலுக்குக் கூட போயிருக்க மாட்டாள்.

''நிர்மலா...'' என்று கத்தினாள் மாமியார்.

''என்னம்மா?''

''சத்யா எங்கே?''

''ரூமுக்குள்ளே தான் இருக்கிறார்.''

''இல்லையே...''

''இல்லையா?'' துணுக்குற்றவளாய் ஓடிவந்துப் பார்த்தாள்.

இல்லை தான். அறை காலியாக இருந்தது.

வீடு முழுக்கத் தேடினர்.

இல்லை.

''இங்கே தானேம்மா இருந்தார். எங்கே போயிருப்பார்?''

''நீ தானேம்மா இங்கே இருந்தே! நான் குளிச்சுக்கிட்டு இருந்தேன். எனக்கு என்னத் தெரியும்?''

இப்படித்தான் கொஞ்சம் ஏமாந்தால் போதும். நைசாக நழுவி ஓடிவிடுகிறான். பக்கத்து, தெரு வீடுகளுக்குச் சென்று குழந்தைகளை தூக்கிக் கொண்டு ஓடிவிடுகிறானாம். தேடி இழுத்து வருவதற்குள் கண்விழி பிதுங்கி விடுகிறது. தெருவிலும் ஏகப்பட்ட புகார்கள். அதனாலேயே அறைக்குள் விட்டு தாழ் போட்டு விடுவாள். ஆனால் கதவு சரியில்லை. மேல் தாழ்ப்பாள் இல்லாததால் இழுத்ததும், எளிதாக கதவை திறந்து விட முடிகிறது. இருபத்தி நாலு மணிநேரமும் அவனை கண்காணித்துக் கொண்டிருக்க முடியுமா?

நரேஷை எல்.கே.ஜி.யில் சேர்த்து விட்டிருந்ததால் ஒருமுறை அவன் ஸ்கூலுக்கே சென்று தேடி இருக்கிறான். நாளுக்கு நாள் அவனுடைய அட்டகாசம் அதிகப் பட்டதேயொழிய குறையவில்லை.

இருவரும் பதற்றத்துடன் வெளியில் வந்தனர். அப்போது தெருவாசிகள் ஆறேழுபேர் சத்தியமூர்த்தியை இழுத்து வந்துக் கொண்டிருந்தனர்.

''சத்யா எங்கே போய்ட்டீங்க?'' அவனை நோக்கி ஓடினாள் நிர்மலா.

''சத்யா... ஏன்டா இப்படிப் பண்றே?'' பரிதவிப்புடன் கேட்டாள் அம்மா.



''உங்க கொஞ்சலை எல்லாம் வீட்டுக்குள்ளே போய் வச்சுக்குங்க. இந்த ஆளால பெரிய நியூசென்ஸா போச்சு. தெருவிலே குழந்தைங்களால ஃப்ரியா விளையாட முடியலே. உங்க பிள்ளை வந்து பயமுறுத்தறான். பைத்தியம் முத்திப் போச்சு. பெத்ததால அவன் எது செய்தாலும் நீங்க பொறுத்துக்கலாம். நாங்களும் பொறுத்துக்கணும்னு என்ன தலையெழுத்து? எங்களாலேயே தைரியமா நடமாட முடியலே. ஒழுங்கா மெண்ட்டல் ஹாஸ்பிடல்ல சேர்க்கிற வழியைப் பாருங்க. இல்லேன்னா போலீஸ்லே கம்ப்ளைன்ட் பண்ணுவோம்!'' என்றார் ஒருவர்.

''தயவு பண்ணி அப்படியெல்லாம் அவசரப்பட்டு எதுவும் பண்ணிடாதீங்க. அவருக்கு ஒன்னுமில்லே சரியாப் போய்டும்... இனிமே இப்படி நடக்காது!''

கைகூப்பி கெஞ்சினாள் நிர்மலா.

நெற்றியில் அடித்துக் கொண்டாள் ஒரு பெண்மணி.

''எல்லாம் தலையெழுத்து. கங்காதரனுக்குப் பொண்ணா பிறந்து... இப்படி ஒரு வாழ்க்கை வாய்க்கணுமா உனக்கு? உன் முகத்துக்காகத்தான் பொறுத்துப் போகிறோம். உன் புருஷனை... சும்மா உள்ளே விட்டு பூட்டி வச்சா ஆகாது. சங்கிலிப் போட்டு கட்டுங்க'' என்றாள்.



சற்று நேரத்தில வந்தவர்கள் கலைந்துச் சென்றனர்.

உள்ளேச் சென்ற ஜெயலட்சுமி வாய்விட்டு அழ ஆரம்பித்தாள்.

''நான் என்ன பாவம் பண்ணினேன்? என் பிள்ளையை இப்படி பழிவாங்கிட்டான் கடவுள்? என் பிள்ளை தெருவிலே ராஜா மாதிரி இறங்கி நடப்பானே? கரண்ட் பிரச்சினையா? தண்ணீர் பிரச்சினையா? சாக்கடை அடைச்சிருக்சா? என் பிள்ளை தானே உடனே கம்ப்ளைண்ட் பண்ணி சரிப்படுத்துவான்? இன்னைக்கு இவங்க என் பிள்ளை மேலேயே கம்ப்ளைண்ட் பண்ணி மென்ட்டல் ஹாஸ்பிடலுக்கு அனுப்பப் போறாங்களாம். என் புருஷன் செத்தப்பக்கூட நானும் சாகனும்னு நினைச்சதில்லை. ஆனா, இப்ப தோணுது. இந்தக் கொடுமையையெல்லாம் பார்த்து நெஞ்சு வெடிச்சப் போறதை விட விஷத்தை சாப்பிட்டு செத்துப் போய்டலாம்னு இருக்கு!''

சத்தியமூர்த்தியின் கண்கள் மருண்டதில் விரித்தன. உதடுகள் கோணி ஓலமிட்டு அழுதான்.

''அம்மா... அழாதேம்மா... பாரு எனக்கும் அழுகை வருது... அழாதேம்மா!''

நிர்மலாவின் இதயம் வலித்தது.

''என்னம்மா இது? எங்களுக்கெல்லாம் ஆறுதல் சொல்றவங்க நீங்களே உடைஞ்சுப் போகலாமா?''

''பின்னே என்னப் பண்றது நிர்மலா? போன வாரம் வீட்டின் சொந்தக்காரர் வந்து சீக்கிரம் வீட்டை காலிப் பண்ணுங்கன்னு சொல்லிட்டுப் போகிறார். நம்மளை வா... வான்னு கூப்பிட்டவங்களெல்லாம் இப்ப விரோதி மாதிரி பார்க்கிறாங்க!''

''அழாதீங்கம்மா... எனக்கு நம்பிக்கையிருக்கு. என் சத்யாவுக்கு சீக்கிரமே சரியாகிடும். நீங்க நம்பிக்கையை இழக்காதீங்க. அவரைப் பாருங்கம்மா. நீங்க அழறதைப் பார்த்து அழறார். அவரை சமாதானப் படுத்துங்க!''

மருமகளின் இதமான பேச்சு அவளை ஆஸ்வாசப்படுத்தியது. கண்களை துடைத்துக் கொண்டாள். அழுதுக் கொண்டிருந்த சத்தியமூர்த்தியின் கண்ணீரைத் துடைத்து தலையைக் கோதி விட்டாள்.

''அழாதே சத்யா... அம்மா இனி அழமாட்டேன்.... அழாதே!''

''சரிம்மா!'' சட்டென அழுவதை நிறுத்தினான்.

''சாப்பிடறியா?''

''ம்... சரி!''

ஸ்பூனால் கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்து ஊட்டினாள்.

''சத்யா... நீ நல்லப்பிள்ளை தானே?''

''ஆமாம்!''

''நான் சொன்னா கேப்பேயில்லை?''

''நீ சொன்னா கேப்பேன். இதே நிக்குதே... இந்த அம்மி சொன்னா தா கேக்கமாட்டேன்!''

''நிம்மியை அப்படியெல்லா திட்டக்கூடாது. அவ ரொம்ப நல்லவ.''

''ம்ஹூம்... எனக்கு இவளை பார்த்தாலேப் பிடிக்கலே. என் ஃபரண்டை போட்டு அடிக்கிறா. அவன் பாவமில்லே அப்புறம் பால்ல யாராவது மாத்திரைய போடுவாங்களா? இந்த ஊஸு போடுது. நா தான் பார்த்திட்டேனே!''

''சரி... இதைவிடு! இனிமே வீட் விட்டு வெளியே போவியா?''

''போகமாட்டேன்!''

''நல்லப்பிள்ளை...!''

''ஆனா, வீட்லே இருக்க பிடிக்கலியே! பேசாம என்னையும் நரே படிக்கிற ஸ்கூல்ல சேர்த்து விட்டு. நானு படிக்கிறேன்.''

ஜெயலட்சுமி அழுகையை அடக் சிரமப்பட்டாள்.

''சரிப்பா... சேர்த்து விடறேன். ஆன இப்ப இல்லே. உனக்கு உடம்பு சரியில்லே குணமானதும் சேர்த்து விடறேன். உடம் சீக்கிரம் குணமாகனும்னா... நான் தர்ற மருந் மாத்திரையை எல்லாம் ஒழுங்கா சாப்பிடனும் வெளியிலே போகக் கூடாது.''

சற்றே யோசித்தவன் போனால் போகிறு என்பது போல் ''சரி'' என்றான்.

நிர்மலா எல்லாவற்றையு வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போது...

''சார் போஸ்ட்...!'' என்ற குரல் கேட்டு

வழக்கம் போல மணவாளனிடமிருந் மணியார்டர் வந்திருந்தது.

வீட்டு வாடகை, சாப்பா சத்தியமூர்த்தியின் மருத்துவ செல எல்லாவற்றிற்கும் மணவாளனை த எதிர்பார்க்க வேண்டியிருக்கிற சத்தியமூர்த்தியின் கடையிலிருந்த பொருட் சில நகைகள், சொற்ப சேமிப்பு பண

அத்தனையும் அவனுக்காகவே கரைந்துப் போய்விட்டது.

மணவாளனால் முன்புபோல் வாராவாரம் ஊருக்கு வந்துப் போக முடியவில்லை.

அதற்கும் காரணம் இல்லாமலில்லை.

## 13

வீட்டின் பொறுப்பு முழுக்க இவன் தோளில் சுமையானதால் நிதி நெருக்கடியை சமாளிக்க ஆபீஸில் ஓவர் டைம் செய்தான். வாராவாரம் ஊருக்குச் சென்று வருவதால் ஏற்படும் போக்குவரத்து செலவை கட்டுப்படுத்த மாதத்திற்கு ஓரிரு முறைதான் ஊருக்கு வந்தான்.

மணவாளனை விட சத்தியமூர்த்தி இரு மடங்கு சம்பாதித்தவன். அப்போதே சிலசமயம் வீட்டு செலவிற்கு அந்தப் பணம் போதாமல் இருந்தது. இப்போதோ வருமானம் குறைவு. செலவு மும்மடங்கு என்பதால்... பணப்பிரச்சினை நிரந்தரமாயிற்று.

நிர்மலா யோசித்தாள்.

'பாவம் மணவாளன்! இந்த வீட்டிற்காக ரொம்பவே கஷ்டப்படுகிறார். அவர் அனுப்பி வைக்கிற பணம் இவரின் மருத்துவ செலவிற்கே பத்தாமல் 'உன்னைப் பிடி, என்னைப் பிடி என்றிருக்கிறது. சாப்பாடு செலவிற்கு பிரச்சினையாய் இருக்கிறது. நானும் எந்தவகையிலாவது இந்த வீட்டிற்கு கைகொடுத்தாக வேண்டும். என் படிப்புக்கேற்ற வேலைக்குச் சென்று சம்பாதிக்க வேண்டும். இதைப்பற்றி அம்மாவிடம் பேச வேண்டும். எங்கேக் காணோம்? ஒரு மணி நேரமாக ஆளையேக் காணோமே?'

வாசலுக்கு வந்து எட்டிப்பார்த்தாள்.

தெருமுனையில் ஜெயலட்சுமி வந்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

மகனைப் பற்றிய கவலையிலேயே ஆள் பாதியாய் மெலிந்திருந்தாள்.

'குடை கூட எடுத்துச் செல்லாமல் கொளுத்துகிற வெயிலில் எங்கே போய் வருகிறார்கள்?' கரிசனமும், கோபமுமாய் அவள் வருகைக்காக காத்திருந்தாள்.

செருப்பை கழற்றி விட்டு உள்ளே வந்தாள்.

''அம்மாடி நிர்மலா.. குடிக்க கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாயேன்.''

கொண்டு வந்து தந்தாள்.

''எங்கம்மா போயிட்டு வர்றீங்க? வெயில் நெருப்பாய் தகிக்குது. குடை கூட எடுத்துக்காம போகலாமா?''

''வெயில், மழைன்னு பார்க்கிற நிதானத்திலேயா இருக்கிறோம்? நாளைக்கு சத்யாவுக்கு இஞ்செக்ஷன் போட்டாகனும். ரெண்டாயிரம் வேணுமே! இந்தாம்மா... இதைக் கொண்டு போய் பத்திரமா வைம்மா''

''ஏதும்மா பணம்? கடன் வாங்கினீங்களா?''

''கடன் தான். ஆனா யார்கிட்டேயும் கைநீட்டி வாங்கலே. பொருளைக் கொடுத்துட்டுதான் வாங்கி வந்தேன்.''

''அடகு வச்சிட்டு வாங்கி வந்தீங்களா?''

''ம்..''

''எற்கனவே எல்லா நகையும் வச்சிட்டீங்களே.. வேறென்ன வச்சீங்க?''

''அது.. அது வந்து...''

''சொல்லுங்கம்மா... என்ன வச்சீங்க?'' அவள் கையைப் பற்றிக் கேட்டாள்.

அப்போது தான் உறுதியாயிற்று.

எப்போதுமே விரலில் தட்டுப்படும் அந்த மோதிரத்தை காணோம். தன் கணவரின் நினைவுச் சின்னமாக அவர் கட்டிய தாலியை மோதிரமாய் செய்து அணிந்திருப்பாள். அதைத்தான் காணோம்.

''அம்மா.. ரிங் எங்கே?''

''.....?!''

''அப்ப.. அதைத் தான் அடகு வச்சிட்டீங்களா?''

''.....!''

''நீங்க பேசாம இருக்கிறதைப் பார்த்தா... அதை தான்...''

''ஆமா நிர்மலா. அந்த ரிங்கை தான் அடகு வச்சேன்.''

''என்ன காரியம் பண்ணிட்டீங்க? அதை ஏன்...''

கைநீட்டி தடுத்தாள் ஜெயலட்சுமி.

''இப்ப என்னாகிப்போச்சு? என் பிள்ளை குணமாகனும். அதுக்காக என் உயிரைக் கூடத் தருவேன். என் புருஷன் என் மனசுல இருக்கார். அவரோட வாரிசு இப்படி இருக்கிறப்ப.. அதையெல்லாம் பார்த்துக்கிட்டிருக்க முடியுமா? நம்ம சத்யா முன்னைவிட இப்ப எவ்வளவோ பரவாயில்லையே. முன்னே மாதிரி கத்தி ஆர்ப்பாட்டம் பண்றதில்லை. அமைதியா... ஏதையோ யோசிச்சிட்டிருக்கான்.

இது நல்ல முன்னேற்றம்னு டாக்டர் சொன்னாரே! இந்த இஞ்ஜெக்ஷனை வாரா வாரம் போட்டுக்கிட்டு வந்தோம்னா அதிகபட்சம் மூணு மாசத்திலே பழைய நிலைக்கு வந்திடுவார்னு சொல்லலே? என் பிள்ளை குணமாகணும் நிர்மலா. கம்பீரமா நடந்து வரணும். நடந்து வரணும்...'' குரல் தழுதழுக்க கண்கள் குளமாகின.

''கண்டிப்பா.. நீங்க நினைச்சதெல்லாம் நடக்கத் தான் போகுது. கலங்காதீங்க. நமக்கு இப்போதைய தேவை பணம். அது மட்டும் இருந்தா போதும்.. என் சத்யாவை முழுக்க குணமாக்கிடலாம். அம்மா, நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைக்கக்கூடாது.''

''என்னம்மா?''

''நா.. நான் வேலைக்குப் போகலாம்னு இருக்கேன்.''

''நிர்மலா.... என்னம்மா பேசறே? நீ வேலைக்குப் போகப் போறியா? முட்டாள்தனமா உளறாதே!''

''இல்லேம்மா.. நல்லா யோசிச்சுதான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன். உங்க உடம்புல இருந்த கடைசி நகையும் அடகு கடைக்குப் போய்டுச்சு. அவர் அனுப்புற பணம் போதமாட்டேங்குது. பாவம், அவரும் என்னப் பண்ணுவார்? நானும் படிச்சிருக்கேனே? டிகிரியை முழுசா முடிக்கலேன்னாலும் ப்ளஸ்டு படிப்பை வச்சே ஒரு வேலைய தேடிக்கலாம். உங்க சம்மதத்திற்காகத் தான் காத்திருக்கிறேன். தயவு பண்ணி சரின்னு சொல்லுங்க. மறுத்திடாதீங்க.''

''நீ யாரு? கங்காதரனோட பொண்ணு. நீ வேலைக்குப் போனா அவருக்கு கவுரவ குறைச்சல் இல்லையா?''

''புரிஞ்சுத்தான் பேசறீங்களா? அவர் எனக்கு அப்பாவே இல்லேன்னு மறந்து பல வருஷமாயாச்சு. என் அம்மா நீங்க. சத்யா என் புருஷன். இது தான் என் வீடு, குடும்பம், என்னால கவுரவத்திற்கு இழுக்கு வருதுன்னா.. அது நம்ம குடும்பத்துக்கு வந்திடக் கூடாதுன்னு தான் பார்ப்பேனேயொழிய மத்தவங்களை பத்தி எனக்கு கவலையில்லே.''

''என்னமோம்மா.. எனக்கு இதிலே உடன்பாடில்லே. ஆனா, நீ பிடிவாதமா

## இங்கிலாந்து இளவரசிக்கு கிடைத்த தண்டனை!

இங்கிலாந்து அரச குடும்பத்[...] சேர்ந்தவர்கள் ஏதாவது சிக்கலில் மா[...] கொள்வது வழக்கமாகவே இருந்து வருகி[...] இப்போது புதிதாக சிக்கலில் சிக்கி இருப்[...] இங்கிலாந்து ரா[...] எலிசபெத்தின் மகள் ஆனி[...] ஆனி ஏற்கன[...] திருமணம் ஆன[...] கணவரான கடற்படை[...] அதிகாரி டிம்லாரன்ச[...]

[...]வசித்து வரும் ஆனிக்கு செல்ல நாயும் உண்டு. அந்த நாய்தான் ஆனியை சிக்கலில் சிக்க வைத்துவிட்டது. அந்த நாய் இங்கிலாந்தில் வசித்து வரும் ஆசிய தம்பதியை கடித்துவிட, அவர்கள் அதை எளிதில் விடவில்லை. ஆனியை கோர்ட்டு படிக்கட்டு ஏற வைத்துவிட்டனர்.

கிழக்கு பொக்ஷயர் கோர்ட்டில் இந்த வழக்கு நடந்தது. கோர்ட்டில் ஆனி, அவரது கணவர் லாரன்ஸ் இருவருக்கும் ரூ.3½ லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் நீதிபதி [...]விடவில்லை. 6 மாதம் ஜெயில் தண்டனையும் விதித்துவிட்டார். இங்கிலாந்தில் நம் நாட்டைப் போல இல்லை. ஆண்டியானாலும் அரசனானாலும் தண்டனை ஒன்றுதான். [...]னவேதான் அரச குடும்பத்தினருக்கு இந்த [...]ண்டனை.

-சுகின் மணி, சென்னை.



இருக்கிறப்ப தடுக்க[...] முடியலே.''

''இது போதும்ம[...] என்னோட சர்ட்டிஃபிகேட்[...] அந்த வீட்லே இருக்கு. கேட்[...] வாங்கணும்.''

''நீ அங்கே போ[...] போறியா நிர்மலா.''

''ஆமாம்.. என்னோ[...] சர்ட்டிஃபிகேட்ஸை வாங்கிட்டு வர போ[...] தான் போறேன்.''

''எனக்கென்னவோ சரியாப் பட[...] பயமாயிருக்கு.''

''பயப்படாதீங்கம்மா.. எனக்கு ஒண்ணு[...] ஆகாது'' என்றாள் தைரியமாய்.

கேட்டைத் திறந்து உள்ளே சென்[...] நிர்மலா. நடக்கத் தயங்கி கால்கள் பின்னின[...]

'நான்கு வருடங்கள் ஆகி விட்டதல்ல[...] இங்கு வந்து?'

எங்கிருந்தோ இரண்டு நாய்கள் க[...] கடூரமாய் குரைத்தபடி ஓடி வர.. ஒரு க[...] சகலமும் நடுங்கினாள்.

பீட்டரும், ரோஸியும் த[...] பழக்கப்பட்ட நாய்கள். இவளைப் பார்த்த[...] வாலாட்டியபடி சுற்றி, சுற்றி வந்தன.

சப்தம் கேட்டு உள்ளிருந்து வந்த இ[...] வயதொத்த பெண்ணைக் கண்டதும் புரி[...] போயிற்று. 'அதான் பணக்காரக் க[...]

[...]ண்டவமாடுகிறதோ! அவினாஷின் மனைவி'.

புரிந்தும் புரியாமல் நிர்மலாவையே [...]றுப்பார்த்தாள் அவள்.

''யார் நீங்க?''

''புவனேஸ்வரியம்மாவை பார்க்க [...]ந்திருக்கேன்.''

''அவங்க வெளியேப் போயிருக்காங்க. [...]ங்க யாருன்னு சொல்லலியே?''

''நான்.. நிர்மலா..''

''ஓ!'' முகத்தில் அதிர்ச்சி.

''ஒரு நிமிஷம் இருங்க.'' என்று அவசர அவசரமாய் உள்ளேச் சென்றாள்.

அடுத்த இரண்டாவது நிமிடம் [...]ங்காதரனோடு வெளிப்பட்டான்.

கங்காதரன் இவளைப் பார்த்து கேலியாய் [...]ரித்தார்.

''யார் நீ?''

''ஸாரி... உங்ககிட்டே சினிமாவுல வர்ற [...]ாதிரி டயலாக் பேச வரலே.''

''ஆனா, என் வீடு தேடி வந்திருக்கே? [...]ன்ன விஷயம்? பசிக்குதா? சாப்பிட்டு [...]போகலாம்னு வந்தியா? இல்லே உன்னோட [...]பைத்தியக்கார புருஷனை மென்ட்டல் [...]ாஸ்பிடல்ல சேர்க்கறதுக்கு சிபாரிசு கடிதம் [...]ாங்க வந்தியா? எதுக்காக வந்தே?''

''மிஸ்டர் கங்காதரன்.. ஒருவேளை, என் [...]லைமை அப்படி கேவலமாக ஆனால் கூட [...]ங்களைத் தேடி வரமாட்டா இந்த நிர்மலா!''

''இந்தப் பேரை வச்சதுக்கூட நாங்க தான் மிஸஸ் சத்யமூர்த்தி.''

''உங்ககிட்டே ஆர்க்யூமெண்ட் பண்றதுக்காக நான் இங்கே வரலே. என்னோட சர்ட்டிஃபிகேட்ஸ் இங்கே இருக்கு. அதை வாங்கிட்டு போகத்தான் வந்தேன்.''

''ஓஹோ.. அப்படியா? கொஞ்சம் வெயிட் பண்ணு!'' என்றவர் உள்ளேச் சென்றார்.

## 14

ஐந்து நிமிடம் சென்றது.

கையில் ஒரு ஃபைலுடன் வந்தார்.

''லுக் மிஸஸ் சத்யமூர்த்தி. உன்னை நான் தன்மான தமிழச்சியா, ரோஷக்காரியா நினைச்சிருந்தேன். ப்ச்... நீ அப்படிப்பட்டவ இல்லேன்னு நிரூபிச்சிட்டே...''

''....?''

''சொத்துல பங்கு வேணாம்... உங்க உறவே வேணாம், இனி எல்லாமே என் புருஷன்தான், மாமியார் தான்னு வீரவசனம் பேசினியே... இன்னைக்கு என் வீட்டு வாசல்ல வந்து கையேந்தி நிக்கறியே... வெக்கமாயில்லே உனக்கு?''

அவர் அப்படிக் கேட்டதும் கோபம் தலைக்கேறியது நிர்மலாவுக்கு.

''மிஸ்டர் கங்காதரன்! நீங்க என்னை தப்பாப் புரிஞ்சுக்கிட்டிருக்கீங்க. இப்ப மட்டுமில்லே, எப்பவுமே... உங்ககிட்டே வந்து கையேந்தி நிக்க மாட்டேன். உங்க வீட்டு சொத்துக்காக அலையறவயில்லே நான்! என்னோட சர்ட்டிஃபிகேட் கேட்டுதான் வந்திருக்கிறேன்.''

''அதை... அதையே தான் நானும் சொல்றேன். கையை நீட்டி நீட்டி பேசறியே... இந்த உயிரும், உடலும் நாங்க கொடுத்தது. பூமியிலே வந்து விழுந்த விநாடி முதல் உனக்கு என்னென்னத் தேவைன்னு உணர்ந்து ஊட்டி, ஊட்டி வளர்த்த உடம்பு இது. சரி... அதை விடு! எப்படி படிச்சே? நீயே உழைச்ச அந்தப்பணத்தைக் கொண்டு படிச்சியா? இந்த படிப்பு நான் கொடுத்தது. என் பணம் கொடுத்தது. இதுவும் என் சொத்துதான்.''

''.....?!''

''என்னோட சொத்துல சல்லிக்காசு மட்டுமில்லே... இதையும் தரமாட்டேன்!''

சொன்னவர் ஃபைலை திறந்து அதிலிருந்த சான்றிதழ்களை கொத்தாய் எடுத்து... பீஸ் பீஸாய் கிழித்து எறிந்தார்.

எதிர்பார்க்காத நிர்மலா ஸ்தம்பித்துப் போனாள்.

''பெத்தவங்களை வயிறெரிய வச்சிட்டு எந்த பிள்ளையும் நல்லா வாழ்ந்ததா சரித்திரமே இல்லை. புருஷன் பைத்தியக்காரனா திரியறான். கூடிய சீக்கிரம் நீ பிச்சையெடுத்துக்கிட்டு அலைவே! அதை என் கண்ணால பார்க்கத்தானேப் போறேன்? பிருந்தா நீ உள்ளே வாம்மா!'' மகளை கொடூரமாய் வாழ்த்தி விட்டு மருமகளோடு உள்ளே சென்று கதவை சார்த்திக்கொண்டார்.

துண்டு துண்டாய் சிதறிக்கிடந்த சான்றிதழ்களை வெப்பமான கண்ணீருடன் பார்த்தாள்.

நாய்கள் அவளைச் சுற்றி சுற்றி வந்து காலை நக்கின. அவைகளின் தலையை தடவிக் கொடுத்தாள்.

''உங்ககிட்டே இருக்கிற மனுஷத்தன்மை அந்த பணக்காரன்கிட்டே இல்லாமப் போச்சே?''

**கா**லையில் எழும்போதே நல்ல காய்ச்சல் நிர்மலாவுக்கு.

''என்னம்மா' உடம்பு இப்படி கொதிக்குதே! சீக்கிரம் கிளம்பு ஹாஸ்பிடலுக்கு போய் வரலாம்.''

''சமைக்கணும், அவருக்கு டிபன் தரணும், நரேஷை ஸ்கூலுக்கு அனுப்பணும்.''

''நான் அதையெல்லாம் பார்த்துக்கறேன். நீ முதல்ல புடவையை மாத்திக்க.''

ஜெயலட்சுமி மின்னலாய் செயல்பட்டாள்.

இரண்டு வெங்காயத்தை நறுக்கிப்போட்டு உப்புமா கிளறினாள். நரேஷை குளிப்பாட்டி யூனிஃபார்ம் மாட்டி ரிக்ஷாவில் ஏற்றி அனுப்பினாள்.

சத்தியமூர்த்தியின் உடம்பை துடைத்து உடைமாற்றி, டிபன் ஊட்டி, அமர வைத்தாள்.

இப்போதெல்லாம் அவனிடம் எந்த சலனமும் இல்லை. பெயர் சொல்லி கூப்பிட்டால் திரும்பிப்பார்ப்பான். எந்த பதிலும் தரமாட்டான். சதா யோசனையிலேயே இருந்தான். இதனால் அவனால், மற்றவர்களுக்கு முன்பு போல் அவஸ்தை இல்லை.

ஜோதி தூளியில் உறங்கிக் கொண்டிருந்தாள். எப்படியும் அவன் எழுந்திருக்க பத்து மணிக்கு மேலாகிவிடும்.

நிர்மலா உடைமாற்றி தயாராகி விட்டாள்.

''கிளம்பு!''

''நீங்க எதுக்கும்மா..., நான் போய்ட்டு வந்திடறேன். பக்கத்திலேதானே ஹாஸ்பிடல் இருக்கு?''

''உன்னைத் தனியா அனுப்பறதா? அதெல்லாம் முடியாது.''

''வீட்லே யாருமில்லே. அவரைத் தனியா விட்டுட்டு எப்படிம்மா?''

''சத்யா முன்னே மாதிரியில்லே. அவன் எங்கேயும் போய்டமாட்டான். ஜோதி கூட நல்லா தூங்கறா. இங்கேயே இருக்கட்டும். கை குடைச்சலா இருக்கு. அவளை தூக்கி வச்சுக்கிட்டிருந்தா கஷ்டமாயிடும். நீயும் தூக்கி வச்சுக்க முடியாது. உன் காய்ச்சல் அவளுக்கு ஒட்டிக்கும்.''

''அம்மா... நான்...''

''நீ எதுவும் சொல்ல வேணாம். பேசிட்டிருக்கிற நேரம் போய் திரும்பிடலாம். கிளம்பு.'' அவளை துரிதப்படுத்தினாள்.

மாமியாரின் பிடிவாதம் அவள் அறிந்தது தானே? அதற்கு மேல் பேசாமல் புறப்பட்டாள்.

வாசல் கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பி விட்டனர்.

**ம**ரத்திலிருந்து எம்பி மதில் சுவர் மீது குதித்த அணிலை கண்டு, அமர்ந்திருந்த காக்கா பயந்து பறந்துப் போனது. ஜன்னல் வழியே தெரிந்த இந்த காட்சியை கண்கள் பார்த்தது. ஆனால், சிந்தையைத் தொடவில்லை. சத்தியமூர்த்தி அந்த காட்சியை வெறிக்கப்பார்த்தான்.

''வீல்...வீல்... ங்கா...ங்கா...'' ஜோதி அழ ஆரம்பித்தாள்.

சத்தியமூர்த்தி அசையவில்லை.

இருக்க... இருக்க... அழுகை சத்தம் அதிகமாகிக்கொண்டேப் போனது.

கிட்டத்தட்ட பத்து நிமிடம் கடந்த பிறகே அந்த அழுகை சத்தம் அவன் மௌனத்தை கலைத்தது.

மெல்லத் திரும்பிப் பார்த்தான்.

அறைக்கதவு சார்த்தியிருந்தது.

எழுந்தான்... நடந்தான்... திறந்தான்.

கைவைத்ததும் திறந்துக் கொண்டது.

ஜோதி படுத்திருந்த தூளி இப்படியும் அப்படியுமாய் குலுங்கியது. கையையும் காலையும் உதைத்து அழுதுக்கொண்டிருந்தாள்.



அவளையே சிறிது நேரம் பார்த்தவனின் ...கள் கொஞ்சம், கொஞ்சமாய் விரிந்தன.

காரணம்... ஜோதியின் மேல் ஒரு பாம்பு ...சையாமல் இறுக அவளை வளைத்தபடி ...த்திருந்தது.

ஒரு கணம் அவனுக்கு ஒன்றும் ...யவில்லை.

'அடுத்து... நான் என்ன செய்ய ...ண்டும்?' அவன் கேள்விக்கு மூளை ...டியாக பதில் தர மறுத்தது.

குழப்பத்துடன் பாம்பை பற்றினான்.

அது வளைந்து, நெளிந்து அவன் கையை ...ியது.

கை தன்னிச்சையாக உதறியது.

தொப்பென்று கீழே விழுந்த பாம்பு, ...ம்ப தூளியில் ஏற முயல...: ஜோதியை ...கிக்கொண்டான் சத்தியமூர்த்தி. இப்போது ...ம்பு பின்னோக்கி சடாரென வளைந்து ஓட ...ம்பிக்க.. அதன் பின்னேயே ஜோதியை ...கிக்கொண்டு ஓட ஆரம்பித்தான்.

பாம்பு கொல்லைப்புற கதவு வழியே ...ங்க... இவனும் துரத்தினான். அது ...ற்றோரமாய் ஊர்ந்து எதி மதில் சுவரின் ...ப்பக்கமாய் போய்விட.... இவனும் சுவர் குதித்தான்.

குதித்தவன் சுற்று முற்றும் பார்த்தான்.

பாம்பைக் காணோம்.

இங்குமங்கும் பார்த்தபடி குழந்தையுடன் ...ன்று கொண்டேயிருந்தான்.

**ஹா**ஸ்பிடல் போய் வீடு திரும்பிய ...மலாவும், ஜெயலட்சுமியும் ...ந்தையையும், சத்தியமூர்த்தியையும் ...ணாமல் திகைத்தனர்.

"அம்மா... அவரையும், குழந்தையையும் ...ணோமே... எங்கேம்மா...?''

''எ..எனக்கும் ஒண்ணும் புரியலே... வா ...ளியிலே விசாரிப்போம்...!'' பரபரத்தாள்.

தெருவில் யாருக்கும் தெரியவில்லை. ...ளைப் பார்க்கவில்லை என்றனர்.

கொல்லைப்புற மதில் சுவர் அடுத்த ...ருவை ஒட்டி இருந்ததால்... அந்த தெருவை ...ந்த பெண்ணொருத்தி தான்... அவன் ...ந்தையுடன் எதையோ தேடிக் கொண்டு ...ன்றதாகக் கூறினாள்.

இதயம் வாய்வழியே வந்து விடுமோ ...பது போல் இதயம் துடித்தது இருவருக்கும்.

எங்கெங்கோ தேடிப்பார்த்தனர். ...டக்கவில்லை.

கடைசியாக போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்துவிட்டு, அழக்கூட தெம்பின்றி வீட்டில் மூலைக்கொருவராக அமர்ந்து விட்டனர்.

நள்ளிரவு பனிரெண்டு மணி இருக்கும். காலிங்பெல் அலறியது.

## 15

**க**தவைத் திறந்தாள் நிர்மலா.

போலீஸ்காரர் நின்றிருந்தார்.

''இங்கே நிர்மலாங்கறது...?''

"நான்தாங்க!''

''இன்ஸ்பெக்டர் உங்களை ஸ்டேஷனுக்கு வரச் சொன்னார்.''

''ஏதாவது தகவல் கிடைச்சதுங்களா?''

''ஒரு குழந்தை கிடைச்சிருக்கு. அது உங்க குழந்தையான்னு வந்துப் பாருங்க.''

''இதோ.... உடனே வர்றோம்ங்க... அம்மா...'' என்றபடி ஜெயலட்சுமியிடம் ஓடினாள்.

**அ**ந்தக் குழந்தை ஜோதி தான்!

கண்டதும் வாரி அணைத்துக் கொண்டாள் நிர்மலா.

''ஜோதி... என் கண்ணே...''

''சார்... குழந்தை மட்டும் தான் கிடைச்சாளா? என் மகன்?'' பரிதவிப்புடன் கேட்டாள் ஜெயலட்சுமி.

''இல்லேம்மா... இந்த குழந்தை தனியா ரோடுல அழுதுக்கிட்டிருந்ததா சொல்லி நந்தம்பாக்கத்துல யாரோ தூக்கிட்டு வந்து அந்த ஏரியா போலீஸ் ஸ்டேஷன்ல ஒப்படைச்சிருக்காங்க. தவிர, இந்த குழந்தை கண்டெடுக்கப்பட்டதா சொல்ற இடத்திலேர்ந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு விபத்து நடந்திருக்கு. லாரியோ, காரோ வேறெந்த வாகனமோ தெரியலே... அதுல ஒரு வாலிபர் அடிபட்டு இறந்திருக்கார். முகம் சிதைஞ்சு போயிருக்கு. உடம்பெல்லாம் நசுங்கி போயிருக்கு.''

''எ... என்ன சொல்றீங்க இன்ஸ்பெக்டர்?'' இருவரும் அதிர்ந்துப் போயினர்.

''அது சத்யமூர்த்தியாய் இருக்கலாம்,

இல்லாமலும் இருக்கலாம். பாடி ஹாஸ்பிடல்ல தான் இருக்கு. நீங்க வந்து அடையாளம் காட்டுனா...''

அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே... வெட்டித் தள்ளிய வாழை மரமாய் மயங்கி விழுந்தாள் நிர்மலா.

''கடவுளே... இதென்ன சோதனை எங்களுக்கு? உனக்கு இரக்கமே இல்லையா? நிர்மலா... இங்கே பாரும்மா... அது நம்ம சத்யாவா இருக்காது... எந்திரிம்மா... கண்ணை முழிச்சிப் பாரும்மா''

**எ**வ்வளவோ கூறியும் மார்ச்சுவரிக்குள் வந்து அடையாளம் காட்ட மறுத்து விட்டாள் நிர்மலா.

''அது அவரில்லே... எனக்குத் தெரியும்... அவர் என்னை விட்டுப் போகமாட்டார்... நான் யாரையும் பார்க்க மாட்டேன்...'' பிடிவாதமாயிருந்தாள்.

ஜெயலட்சுமி மட்டும் தான் உள்ளேச் சென்றாள்.

கப்பென வயிற்றைப் புரட்டிப் போட்டது வாடை.. உடல் நடுங்கியது.

'கடவுளே... சத்யாவாக இருக்கக் கூடாது. எனக்காக கூட வேண்டாம். என் பிள்ளையே கதியென்று வந்த அந்தப் பெண்ணுக்காக இரக்கம் காட்டு...'

ஒரு லாக்கை விடுவித்து இழுக்க... சர்ரென்று அலுமினிய பிளேட் இறங்க... கொடூரமாய் இருந்தது அந்தக் காட்சி.

ரத்த சகதியாய்... சதைக்கூளமாய்... இதுதான் வயிறு, இதுதான் தொடை என்று யூகிக்க முடியாத அளவிற்கு சக்கையாய் நசுங்கிப் போய்...

முகமென்று சொன்ன இடத்தில் எல்லாம் இடம் மாறி கொழ கொழவென்று அகோரமாய்...

அவன் தான் சத்தியமூர்த்தி என்று சொல்ல... சுருள் சுருளான தலைமுடி மட்டும் தான் சிதையாமல் இருந்தது.

சுமந்த வயிறு சுருக்கிட்டு இழுக்க...

''ஐயோ... சத்யா... மோசம் போய்ட்டோமே...!'' அவள் அலறிய அலறலில் அந்த இடமே கிடுகிடுத்தது.

**ம**ணவாளனுக்கு அந்த வீட்டைப் பார்க்கும் போதே நெஞ்சு கப்பென அடைத்துக் கொள்கிறது.

'எப்படி இருந்த வீடு? எவ்வளவு சந்தோஷமாய் சிரிப்பும், கும்மாளமுமாக வீ…
நிறைந்தும் போய்... அத்தனையும் எங்…
போனது? அண்ணனுக்கு இப்படியொ…
மோசமான துர்மரணம் வரும் என்று நினைத்…
பார்க்கவில்லையே!'

ஒருவர் முகத்தை மற்றவர் எதிர்ட்டா…
போதும், கண்களில் அணை உடைந்து…
போகிறது.

அம்மா துவண்டுப் போ…
அமர்ந்திருந்தாள்.

நிர்மலா சுருண்டு படுத்துக் கிடந்தாள்.

நரேஷ், ஜோதியை மடியில் வைத்து…
கொண்டு அவளுடன் விளையாடி…
கொண்டிருந்தான்.

அப்பா இறந்த துக்கத்தின் நிழல் கூ…
படியாத பிஞ்சுகள். அவர்கள் அருகில் செ…

…ழந்தை பிசைந்தது.

''அண்ணி... எனக்கே
…றுதல் தேவைப்படற இந்த
…த்திலே நான் உங்களுக்கு
…றுதல் சொல்றது மனசு
…க்கமாதான். மத்தபடி
…ண்ணனோட இழப்பு
…ப்புதான். அதை எதனாலும்,
… வார்த்தைகளாலும்
…கட்டிட முடியாது.
…னாலும், குழந்தைகளைப்
…ருங்க. இனி, அவங்களுக்கு
…மா, அப்பா எல்லாமே
…தானே? அவங்க முகத்தைப்
…த்தாவது உங்களை நீங்க
…த்திக்க வேண்டாமா? அம்மா

## கார்த்திகை தீபம்

கார்த்திகை மாதத்தில் ந…
இல்லந்தோறும் வாசலில் தீபம் ஏற்…
வைத்திருப்போம் அல்லவா? ந…
முன்னோர்கள் ஆரம்பித்து வைத்த இ…
வழக்கத்திற்கு விஞ்ஞான பூர்வமா…
காரணம் உண்டு.

கார்த்திகை மாதத்தை ஒட்டி…
பருவம் மழைப்பருவம். இந்த நேரத்…
சிறிய பூச்சிகள் பல உருவாகும். இவை

வீட்டினுள் நுழையாது
…க்கவே வாசலில் தீபம்
…றி வைக்கிறோம்.
…னால் அந்த பூச்சிகள்
…த்தை சுற்றி
…ட்டமிட்டபடியே
…றுவிடும். இதைப்போன்ற
…ரணம்தான்
…க்கார்த்திகை அன்று சொக்கப்பனை
…ளுத்து கொளுத்துவதும் என்பது
…ப்பிடத்தக்கது.

-திலீபன்.

தலையைக் கோதிவிட்டான்.

''என்ன சித்தப்பா?'' என்று நிமிர்…
பார்த்தான் நரேஷ்.

''நல்லா படிக்கணும்... அப்ப…
சித்தப்பா நீ கேக்கறதையெல்லாம் வாங்…
தருவேன்... என்ன?''

''சரி சித்தப்பா... நான் நல்…
படிக்கிறேன்.''

''வெரிகுட்...!''

அங்கிருந்து எழுந்து நிர்மலாவி…
சென்றான்.

''அண்ணி...''

''.....''

''அண்ணி...''

''ம்...'' என்றபடி முகத்தை மட்…
நிமிர்த்தினாள்.

அப்பழுக்கற்ற நிலவைப் போ…
வெறுமையாய் இருந்தது. பார்க்க

…களைப் பார்த்து தான்' ரொம்ப
…தனைப்படறாங்க அண்ணி. மனசை
…லாக்கிட்டு, நீங்க மத்தவங்களுக்கு ஆறுதல்
…ல்லுங்க. அப்புறம் அண்ணி, நீங்க
…த்துக்காக கவலைப்பட வேண்டாம். நான்
…க்கிறேன். தைரியமாக இருங்க. என்
…ணன் குழந்தைகளையும் வளர்த்து
…ாக்கறது என்னோடப் பொறுப்பு. எந்த
…வி தேவைப்பட்டாலும் தயங்காம,
…மையோட கேளுங்க.''

அவனை நிமிர்ந்துப் பார்த்து தலை
…த்திக் கொண்டாள். கண்ணீர் முத்துக்கள்
…ரயில் விழுந்து சிதறியது.

பெருமூச்சுடன் எழுந்துக் கொண்டான்.

''அம்மா... நான் புறப்படறேன்மா!
…ணியைப் பார்த்துக்குங்க. சாப்பிட
…வுங்க... குழந்தைகளைப் பார்த்துக்குங்க.''

''சரிப்பா... பார்த்துப் போப்பா...''



**நா**ட்கள் விரைந்தன. ஒன்றரை வருடம் கடந்தன.

நிர்மலாவும் ஜெயலட்சுமியும் மனதிற்குள் துக்கத்தை புதைத்துக் கொண்டு வாழ வந்தனர்.

ஒரு நாள்...

''அம்மா... நான் நாளையிலேர்ந்து வேலைக்குப் போகப் போறேன்!''

''வேலைக்கா? என்னம்மா சொல்றே?''

''எவ்வளவு நாளைக்கு தான் சும்மாவே உட்கார்ந்திருக்க முடியும்? பிள்ளைகளை வளர்த்து ஆளாக்க வேண்டாமா?''

''அதுக்கு தான் மைத்துனன் மாசா மாசம் பணம் அனுப்பறானே நிர்மலா.''

''பாவம்மா அவர்! தன் அண்ணன் குடும்பத்துக்காக தன்னையே ரொம்ப வருத்திக்கிறார். அவருக்கும் வயசாகுது. கல்யாணம் பண்ண வேணாமா? அவருக்குன்னு ஒரு குடும்பம் வேணாமா? அப்ப... அவரிட்டேர்ந்து மாசாமாசம் பணத்தை எதிர்பார்க்க முடியுமா? அது தப்பில்லையா? உங்களையும் குழந்தைகளையும் காப்பாத்தற மிகப்பெரிய பொறுப்பை சத்யா என்கிட்டே ஒப்படைச்சிட்டுப் போயிருக்கிறார். என்னைத் தடுக்காதீங்கம்மா. நம்ம தெருவிலே குடியிருக்கிற வேலாயுதத்தோட தம்பி எக்ஸ்போர்ட் கம்பெனி வச்சிருக்கிறாராம். என்னை பத்தி சொல்லியிருக்கிறாராம். சூபர்வைசர் வேலை போட்டுத் தர்றேன்னாராம். சர்டிபிகேட்ஸ் எதுவும் தேவையில்லேன்னுட்டார். நாளையிலேர்ந்து போகலாம்னு இருக்கிறேன். நம்ம வீட்டு நிலைமை, பிள்ளைகளோட எதிர்காலம், உங்க சின்னப் பிள்ளையோட கல்யாணம் எல்லாத்தையும் யோசிச்சிப் பாருங்க நீங்க மறுக்க மாட்டீங்க...'' என்றாள் நிர்மலா.

வாயடைப்பதுப் போல் பேசிய பிறகு மறுக்க முடியவில்லை. நிர்மலா வேலைக்கு செல்ல ஆரம்பித்தாள். முதலில் தடுமாறினாலும் போகப் போக வேலையில் ஒன்றிப் போனாள்.

ஒரு நாள்...

மேனேஜர் குரு, ''நிர்மலா, இன்னைக்கு

கொஞ்சம் வேலையிருக்கு. ரெண்டு மணி நேரம் ஓவர் டைம் பண்ணனும்'' என்றார்.

''சார்... என்னால...''

''முடியாதுன்னு சொல்லக்கூடாது. கண்டிப்பாக இருந்தாகணும்.''

''ச...சரி சார்!'' என்றாள் அரைமனதுடன்.

## 16

வீட்டிற்குள் நுழைந்த நிர்மலா ஓடிச் சென்று ஜெயலட்சுமியின் தோளில் முகம் புதைத்து கதறி அழ ஆரம்பித்தாள்.

ஒன்றும்புரியாத ஜெயலட்சுமி பயந்து விட்டாள்.

''என்ன நிர்மலா... என்னாச்சு? ஏம்மா அழறே? வயிறு கலங்குது... சொல்லும்மா...''

''அம்மா... அம்மா...''

''சொல்லுடா...''

''நான் செத்துப் போய்டறேன்ம்மா...''

''ச்சீ... பைத்தியம். என்ன பேச்சு பேசறே?''

''இந்த உலகம் ரொம்ப மோசம்மா... மனுஷங்க அதைவிட மோசம். என்னை வேதனைப்படுத்தறதுக்காகவே கடவுள் என்னை படைச்சிருக்கான்''

''வீட்டுக்கு வீடு வாசப்படி. பிரச்சினைகளேயில்லாத மனுஷனேயில்லை. சொல்லு... என்னாச்சு?''

''நான் வேலை செய்யற இடத்துல மேனேஜர், இன்னைக்கு ஓவர் டைம் செய்தாகணும்னு என்னை மட்டும் இருக்க வச்சு...''

''இருக்க வச்சு?''

''என்கிட்டே தப்பா நடந்துக்கப் பார்த்தான்...''

''ஐயோ..'' அலறிவிட்டாள்.

''அசிங்க அசிங்கமா பேசறான்ம்மா! ரெண்டு குழந்தை பெத்தவ மாதிரியே இல்லை. பாவம் சின்ன வயசிலேயே புருஷனை இழந்துட்டு, பணத்துக்கும் கஷ்டப்படறே! நான் பணம் தர்றேன்... உனக்கும் ஒரு ஆம்பளை உடம்பு வேணுமில்லையா? அந்த பசிக்கும் நான் தீனிப் போடறேன். அப்படி இப்படின்னு பேசறான்ம்மா. த்தூன்னு காறித்துப்பி உன் பணமும் வேணாம். வேலையும் வேணாம். நீ நினைக்கிற ஆள் நானில்லேன்னு சொல்லிட் வந்துட்டேன். கஷ்டமாயிருக்கும்மா. குடும்பத்தை காப்பாத்த வேலைக்குப் போன தப்பா நடந்துக்கப் பார்க்கிறாங்களே... நா என்னம்மா பண்ணுவேன்?''

இன்னமும் அவள் உடல் நடுங்கி கொண்டு தான் இருந்தது. அவளை அணைத் முதுகை வருடி ஆஸ்வாசப்படுத்தினாள்.

அந்த மேனேஜரை நசுக்கி பிழி வேண்டும் போல் எழுந்த ஆத்திரத்தை அடக்கி இதற்கு தீர்வென்ன என்று யோசித்தாள்.

வெகுநேரம் யோசனைக்குப் பின் ஒ முடிவுக்கு வந்தாள்.

''நிர்மலா...''

''என்னம்மா?''

''கண்ணைப்பறிக்கிற அழகையு இளமையும் வச்சுக்கிட்டு எந்த விதவையு ஆண்களால் பிரச்சினையில்லாம வாழ்ந்தி முடியாது. இனி உன்னால எந்த வேலைக்கு போக முடியாது. அதற்கான தைரிய உன்கிட்டே இல்லை.''

''அப்ப எப்படிம்மா குடும்பத்த காப்பாத்தறது?''

''அதுக்கு ஒரே ஒரு வழி தான் இருக்கு.''

''என்ன வழி?''

''நீ மறுமணம் செஞ்சுக்கணும்.''

''எ...என்ன?''

''ஆமாம்...''

''இல்லை. நான் மாட்டேன்... அப் பேசாதீங்க.''

காதைப் பொத்திக் கொண்டாள்.

''இது காதைப் பொத்திக் விஷயமில்லே நிர்மலா. உன்னோட வ எப்படிப்பட்டதுன்னு எனக்கு தான் தெரியு என் புருஷனும் என்னை இ விதவையாக்கிட்டு தான் போனார். ஆ அவரோட பணம் இருந்ததால ரெ பிள்ளைகளை வளர்த்து ஆளாக்க முடிஞ்ச தவிர, பிறந்த வீட்டு மனுஷங்க ஆதரிச்சாங்க. ஆனா, உனக்கு என்னைத் த மணவாளனைத் தவிர பணபலமும் இல் மனுஷங்க ஆதரவுமில்லே. மறுமண தப்பில்லே நிர்மலா. அதுவும் சத்யாவை பெத்த நானே சொல்லும் போது எப் தப்பாகும்? பிறக்கறது சாகறதுக்காகயில் புருஷனை பறி கொடுத்த நான் செத் போகலியே? உனக்கு ஒரு பாதுகாப்பு வேணு பிள்ளைகளுக்கு ஒரு அப்பா வேணும். உன் உடுத்த பணம் வேணும். நீயே சொன்னியே



மணவாளனுக்கு கல்யாணமாகிட்டா... அவனுக்கு மனைவியா வர்றவ... சத்யா குடும்பத்துக்கு உதவிப் பண்றதை தப்பா எடுத்துக்குவாள்னு? எல்லாத்தையும் யோசிச்சு தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன்.''

நிர்மலா வேசில் அவள் கூற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. அவளை வழிக்குக் கொண்டு வர ஒரு நாள் முழுக்க பிரயத்தனப்பட்டாள்.

''சரி... நீங்க சொல்றபடியே வர்றேன். இந்த காலத்துல ஆம்பளைங்க, தான் எப்படியிருந்தாலும் தனக்கு வரப்போறவ ஆண்வாடையே பட்டிருக்கக் கூடாதுன்னு நினைப்பாங்க. ஆனா, நான் ரெண்டு குழந்தைகளுக்கு தாய்! நல்ல உள்ளத்தோட என்னை ஏத்துக்க எந்த ஆண் முன் வருவான்?''

''மணவாளன்!''

''அ...ம்...மா!'' மிக மிக அதிர்ந்துப் போனாள். ''புரிஞ்சு தான் பேசறீங்களா?''

''நல்லா யோசிச்சு, நிதானமாதான் பேசறேன்.''

''அண்ணிங்கறவ தாய்க்கு சமம்... ஊர்லே நடக்காததையா நான் பேசிட்டேன்? ஆண்களுக்கு மனைவியும் தாய்தான்! அண்ணிங்கறவ தாய்க்கு சமம்தான்... இல்லேங்கலே. அதே மாதிரி அக்காவை கட்டிக்கிற மாமன், மச்சினிக்கு அப்பா மாதிரி தானே? அப்புறம் ஏன், அக்கா இறந்துட்டாலோ, குழந்தை பாக்கியம் இல்லேன்னாலோ, மாமனுக்கு மச்சினிய கல்யாணம் பண்ணி வைக்கிறாங்க?''

''அதெல்லாம் நமக்கு தேவையில்லாதது. நான் அவரை எப்பவும் ஒரு மரியாதையான, உயர்வான இடத்திலே வச்சுதான் பார்த்திருக்கிறேன்...''

''அது தப்பில்லேம்மா... இங்கே பார்! உன் எதிர்காலத்தையும், குழந்தைங்களோட எதிர்காலத்தையும் நினைச்சுப் பார். நான் சொல்றதிலே தப்பில்லேன்னுப் புரியும். நான் இருக்கிற வரைக்கும் தான் உனக்கு பாதுகாப்பு! அதுக்குப் பிறகு? சத்யாவோட பொண்டாட்டியையும், குழந்தைகளையும் வேண்டாட விடமாட்டேன். நீ சம்மதிக்கலேன்னா... அந்தக் கவலையிலேயே சீக்கிரம் போய் சேர்ந்திடுவேன்... உன் அம்மா உன்னோட நன்மைக்காக தான் செய்வேன்டா... நம்பு! இப்ப கஷ்டமாக தான் இருக்கும். போக போக சரியாப் போய்டும். நான் மணவாளனை வரவழைச்சு பேசப் போகிறேன்!'' என்றாள் தீர்மானமாக.



இருதலை கொள்ளி எறும்பாய் தவித்தாள் நிர்மலா.

இடம்... கோவில் மண்டபம்!

''அம்மா... முட்டாள்தனமாப் பேசாதீங்க?'' கத்தினான் மணவாளன்.

''அவசரப்படாதே... நிதானமா யோசிச்சுப் பார்! எனக்குப் பிறகு அவளுக்கு யாரிருக்கா? வேலைக்குப் போனா வெறிபிடிச்ச நாய்ங்க கடிச்சு குதற தயாரா இருக்கு. ரெண்டு குழந்தைங்களை வச்சுக்கிட்டு எப்படி கரையேற முடியும்?''

''ஏம்மா வேலைக்குப் போகணும்? அதான் மாசா மாசம் நான் பணம் அனுப்பறேனே?''

''எவ்வளவு நாளைக்கு அனுப்புவே? உனக்குன்னுப் பொண்டாட்டி வந்துட்டா அவ சும்மாயிருப்பாளா? பணம் தர சம்மதிப்பாளா? உனக்கும் நிர்மலாவுக்கும் முடிச்சுப் போட்டு பேசமாட்டா?''

''அதுக்காக?''

''உன் அண்ணன் குழந்தைங்க மேலே நீ காட்டற பாசமெல்லாம் பொய்யா?''

''அதுக்கும், இதுக்கும் முடிச்சுப் போடாதீங்க''

''நிர்மலா பாவம்ப்பா! சத்யாவுக்காக எல்லாத்தையும் உதறிட்டு, எல்லாத்தையும் இழந்திட்டு நிக்கறா! அவளோட அப்பா சாபம் கொடுத்த மாதிரி பிச்சையெடுக்கிற நிலைமைக்கு போகணுமா? நம்மளை நம்பி வந்தப் பொண்ணை நாமதானேப்பா வாழ வைக்கணும்?''

கண்முன்னே மாதுரி வந்துப் போனாள். இதயத்தை வாளால் வெட்டி கூறுப்போடுவது போல் வலித்தது.

''பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம்னு வாழ்ந்து முடிக்கிறதுல என்ன இருக்கு? வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் வேணாமா?''

''......?!''

''நீ சம்மதிக்கலேன்னா... என்னை உயிரோடயே பார்க்கமாட்டே''

''அம்மா!''

''உன்னை கெஞ்சிக் கேட்டுக்கறேன்... நிர்மலாவுக்கு வாழ்க்கைக் கொடு!'' கை கூப்பினாள்.

''ஐயோ எம்மா... என்னை சங்கடப்படுத்தறே?'' என்றவன் பொங்கிய வேதனையை அடக்கிக் கொண்டு, ''சரி''

என்றான்.

ஜெயலட்சுமியின் முகம் சந்தோஷத்தில் பிரகாசமானது.

மாதுரி மணவாளனையே நெஞ்சடைக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'காலத்தே பயிர் செய்யாத காதலுக்கும் மரியாதை இல்லாமல் போய் விட்டதே! மனசுக்குள்ளேயே புதைத்து மக்கி மண்ணாகி போய் விட்டதல்லவா?'

மாதுரி தன் உள்ளத்து ஏமாற்றங்களை எச்சிலோடு சேர்த்து விழுங்கிக் கொண்டாள்.

அவனைப் பார்த்து சிரித்தாள்.

''உங்களை எப்படிப் பாராட்டறதுன்னே தெரியலே மணவாளன்! யூ ஆர் ரியல்லி கிரேட்! உங்க அண்ணன் மனைவிக்கு மறு வாழ்க்கைத் தர முன் வந்தது சாதாரண விஷயமில்லே. அதுக்கெல்லாம் ஒரு மனசு வேணும். அந்த நல்ல மனசு உங்கக்கிட்டே இருக்கு. இப்படிப்பட்ட நல்ல ஆணை கணவனா அடையதான் எல்லாப் பெண்களும் ஆசைப்படுவாங்க. உண்மைய சொல்லணும்னா... உங்களை மிஸ் பண்ணிட்டேனோன்னு இப்ப ஃபீல் பண்றேன்!''

மணவாளன் பரிதவிப்புடன் அவளைப் பார்த்தான்.

சில காதல்கள் பரிமாறிக் கொள்ளப்படாததாலேயே பட்டுப் போகின்றன.

## 17

ஊரிலிருந்து குடும்பத்தை சென்னைக்கு வரவழைத்து கொண்டான்.

ஜெயலட்சுமியின் விருப்பப்படியே திருமணமும் நல்லபடி நடந்து முடிந்தது.

பழையவைகளை அசைபோட்ட பார்த்தால் கண்கள் ஈரமாகியது நிர்மலாவுக்கு.

நாட்கள் வேகமாக நகர்ந்தன.

மணவாளன்- நிர்மலாவின் இடையே ஏதோ ஒரு மாய வலை, தயக்கத்துடன் பின்னப்பட்டிருந்ததால் சாதாரணமாகக் கூட பேசிக் கொள்வதில்லை.

ஆனால், குழந்தைகளிடம் கொஞ்சகிற நேரத்தில் கொஞ்சி, கண்டிக்கிற நேரத்தில் கண்டிக்கும் ஒரு பொறுப்புள்ள தந்தையாய் இருந்தான். இருவரையும் நல்ல ஸ்கூலில் சேர்த்து விட்டிருந்தான். மாலையில் நேரம் கிடைக்கும் போது அவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தான்.

மாற்றங்கள் மனித வாழ்க்கையில் அவசியமாய் ஏற்படுகிற நியதி.

குழந்தைகளிடம் அவன் காட்டுகிற அன்பும், பரிவும் அவளை ஈர்த்தது. சத்யாவே பாடம் சொல்லிக் கொடுப்பதுப்போல் உணர்ந்தாள்.

மணவாளனும் அலுவலகத்திலிருந்து திரும்பும்போது மல்லிகைப்பூவை அவளுக்காக வாங்கி வருவான். அதென்னவோ இவளைக்கண்டதும் பாழாய்ப்போன தயக்கம் வந்து காரியத்தை கெடுத்து விடும்.

''அம்மா... இதை சாமிப்படத்துக்கு வாங்கி வந்தேன்'' என்று அம்மாவிடம் கொடுத்து விட்டு நகர்ந்து விடுவான்.

'ஓஹோ... இப்படிப் போகிறதா கதை! நானாக சொன்னால் மண்டையில் ஏறாதாம்! விட்டுத்தான் பிடிக்க வேண்டும்!' இருவரையுமே அவள் கவனித்துக்கொண்டு தான் வந்தாள்.

ஒருநாள்!

ஆபீஸ் முடிந்து வருகையில் மணவாளனின் பைக்கின் மீது கார் மோதி.. பலத்த அடி என்று தகவல் வர... அலறியடித்துக் கொண்டு ஹாஸ்பிடலுக்கு ஓடினர் இருவரும்.

'இதென்னடி கொடுமை? என் பிள்ளைகளுக்கு தேடித் தேடி வருது' கடவுளே... மறுபடியும் இரக்கமில்லாமல் நடந்துக்கொள்ளாதே! என் மகனுக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது!'

நிர்மலாவோ அதைவிட அதிகமாய் நடுங்கினாள்.

''அம்மா அவருக்கொன்னும் ஆகிடாதே எனக்கு பயமாய் இருக்கும்மா! காயங்கள், இழப்புகள், பிரிவுகள்... யாருக்கு தான் இல்லை? ஆனா, எனக்கு மட்டும் ஏம்மா மறுபடியும், மறுபடியும்?''

''இல்லேடி... ஒன்னும் ஆகிடாது... நீ நம்பிக்கையை இழந்திடாதே...''

மணவாளனின் உடம்பில் ஏதேதோ கருவிகள் பொருத்தப்பட்டு மூக்கில் மாஸ்க் பொருத்தியிருந்தார்கள். அந்தக் காட்சியை பார்க்கும் போது சத்தியமூர்த்தி அடிபட்டு படுத்திருந்த ஞாபகம் தான் வந்தது.

அவனைப் பார்க்க பார்க்க மனசு முழுக்க பயம் விரவியது.

''எனக்கென்னவோ பயமாயிருக்கும்மா. இவரையும் இழந்திடுவேனோன்னு பயமாயிருக்கு. நான் ஒரு பாவிம்மா. எனக்கு வாழ்க்கை கொடுத்த இந்த தெய்வத்துக்கு ஒரு நாளும் நான் சந்தோஷத்தைக் கொடுத்ததில்லே. அன்பா ரெண்டு வார்த்தை பேசினதில்லே. என்னால அவருக்கு கஷ்டம்தான்ம்மா...'' தன் ஆதங்கத்தை கொட்டியவளை அந்த சூழ்நிலையிலும் பெருசந்தோஷத்துடன் பார்த்தாள்.

'முருகா... என் மருமகளோட மனசு மாறிடுச்சு. என் பிள்ளைக்கு உயிர் கொடுத்து ரெண்டு பேரையும் சந்தோஷமா வாழவை!'

அவள் கோரிக்கைக்கு தலைவணங்கி கடவுள் அடுத்த இரண்டாவது நாள் மணவாளனை கண்விழிக்க வைத்தான்.

தாங்க முடியாத சந்தோஷத்துடன் அவன் கைகளைப் பற்றி கண்ணீர் வடித்தாள் நிர்மலா.

''கண் திறந்திட்டீங்களா? அம்மா உங்க பிள்ளை பிழைச்சிட்டார்ம்மா.. கடவுள் நம்மளை கைவிடலேம்மா... கைவிடலே...''

தன் நிழலைக் கண்டாலே தயங்கி ஒதுங்கும் நிர்மலாவின் கண்ணீர் மணவாளனை ஆச்சர்யப் படுத்தியது. கையை மெல்ல உயர்த்தி அவள் தலையைக் கோதிவிட்டான்.

நிர்மலா அவனை ஏறிட்டாள்.

இதுவரை தென்படாத அன்பையும், அந்நியோன்யத்தையும் கண்டாள்.

மனதில் இனம் புரியாத நிம்மதி பரவியது.

அவர்கள் நடுவில் இருந்த மாயத்திரை விலகியது.

அதற்கடுத்து வந்த நாட்கள் வசந்தநாட்கள். ஜெயலட்சுமி நிம்மதியாய் மூச்சு விட்டாள். இதற்காகத்தானே அவள் இத்தனை நாட்களும் காத்திருந்தாள்?

மணவாளன் மனைவியை கண்ணின் இமைபோல காத்தான். அவர்களின் இனிய தாம்பத்யத்திற்கு பரிசாய் சாந்தினி பிறந்தாள்.

நாட்கள் நகர்ந்தன. விளையாட்டுப்போல் பதினேழு வருடங்கள் ஓடி மறைந்தன.

ஒரு நாள் ஜெயலட்சுமி இவர்களை விட்டு நிரந்தரமாய் கண்களை மூடி விட்டாள். குழந்தைகள் வளர்ந்துப் பெரியவர்களாயினர்.

## ஸ்பேனர் பிடிக்கும் புதுமைப் பெண்கள்

அடுப்படியே கதியென்று அடைபட்டுக் கிடந்த பெண்கள் இன்று கனரக தொழிலிலும் கால்பதிக்க தொடங்கி விட்டனர். பெங்களூரின் லயோலா நிறுவனம் இதற்கு அஸ்திவாரம் போட்டு உள்ளது. டீன்-ஏஜ் பெண்களுக்கு இங்கு டூ-வீலர் மெக்கானிசம் கற்றுத் தரப்படுகிறது.

கரண்டி பிடிக்கும் பெண்கள் இன்று ஸ்பேனர் பிடிக்கவும் பழகிவிட்டனர். இவர்களின் எந்திர சிகிச்சையில் ரிப்பேர் வண்டிகள் கூட சீக்கிரமே வாகனமாக மாறிவிடுகிறது. லயோலாவில் சேர கல்வித்தகுதி தேவை இல்லை.

அரசு சார்பற்ற 'விமோசனா' தொண்டு நிறுவனம் இதனை நடத்தி வருகிறது. கொடிய வறுமைக்கு படிப்பை பறிகொடுத்த பெண்கள் இங்கு ஏராளம். லயோலாவில் தொழிற்கல்வி தவிர அடிப்படை கல்வியறிவும் போதிக்கப் படுகிறது.

-நிலா.



சின்னவள் சாந்தினி மீது நரேஷுக்கும், ஜோதிக்கும் கொள்ளை ஆசை!

நரேஷ் இப்போது என்ஜினீயரிங் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். ஜோதி இப்போதுதான் பி.எஸ்ஸி. முடித்தாள். சாந்தினி ப்ளஸ்டூ படித்துக் கொண்டிருந்தாள்.

ஜோதி அப்பாவையே சுற்றி சுற்றி வந்தாள்.

''அப்பா ப்ளீஸ்ப்பா... ரெண்டு வருஷம் தானே? படிக்க முடிச்சிடறேனே...''

''அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். படிச்சிட்டு நீ என்ன வேலைக்கா போகப்போறே?''

''இல்லை!''

''அப்புறமென்ன? அடிப்படை அறிவு வரணும்ங்கறதுக்காகத்தான் உன்னை படிக்க வைச்சேன். ஒரு டிகிரியேப் போதும். அருமையா ஒரு வரன் வந்திருக்கு. வர்ற லன்டே உன்னை பெண் பார்க்க வர்றாங்க. அடம் பிடிக்காம சொல்றதைக் கேள்'' என்றார் மணவாளன்.

''என்ன... உங்க அருமைப் பொண்ணு என்னச் சொல்றா?'' மணவாளனுக்கு அவனுக்கு பிடித்த மசாலா டீயை கொடுத்தபடி கேட்டாள் நிர்மலா.

''அம்மா நீயே சொல்லும்மா! நான் மேற்கொண்டு எம்.எஸ்ஸி. படிக்க ஆசைப்படறேன். அப்பா வேண்டாங்கறார். உடனே எனக்கு கல்யாணம் பண்ணி மாமியார் வீட்டுக்கு விரட்டியடிக்கணும்ங்கறார்'' சிணுங்கினாள் ஜோதி.

''ஆமா நிர்மலா! நம்ம ஜோதிக்கு அருமையான வரன் ஒண்ணு வந்திருக்கு. வீட்டுக்கு ஒரே பிள்ளை. தனியா ஷிப்பிங் கம்பெனி வச்சிருக்கான். ஜோதிய எங்கேயோ ஒரு ஃபங்ஷன்ல பார்த்திருக்கான். ரொம்ப பிடிச்சுப் போயிடுச்சாம். அவங்க வீட்லே சொல்லி, தரகர் மூலமா என்னை வந்து கேட்டாங்க. நானும் பையனைப் பத்தி வெளியிலே விசாரிச்சேன். சொக்கத்தங்கம். இப்படிப்பட்ட வரன் இவ படிப்பை முடிச்சப்பிறகு ரெண்டு வருஷம் கழிச்சு மறுபடி கிடைக்கறது கஷ்டம்மா! அதான் இப்பவே கல்யாணத்தை முடிச்சிடலாம்னு பார்க்கிறேன். நீ என்ன சொல்றே நிர்மலா?''

''நீங்க எது செய்தாலும் அது சரியா இருக்கும்ங்க. அவளுக்கென்னத் தெரியும் சின்னப் பொண்ணு! நீங்க ஏற்பாடுப் பண்ணுங்க'' என்றாள்.

''உன்கிட்டேப் போய் சொன்னேனே... ஜாடிக்கேத்த மூடின்னு தெரியாம'' என்றாள் செல்லக் கோபத்துடன் ஜோதி.

''இந்த மூஞ்சியைப் பார்த்துக்கூட ஒருத்தன் மயங்கியிருக்கான்னா பெரிய விஷயம் தான். பேசாம கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போயியா, அதை விட்டுட்டு...'' தங்கையை கேலிப் பண்ணினான் நரேஷ்.

''என் பொண்ணுக்கு என்னடா குறைச்சல்? ஜோதி தேவதைடா... இங்கே பார் ஜோதி... அப்பா உன்னோட நல்லதுக்கு தானேடா செய்யறேன்?''

''ஜோதிக்கா... கல்யாணம் பண்ணிக்கக்காக! எனக்கு யாரையாவது அத்தான்னு கூப்பிட ஆசையாயிருக்கு!'' கெஞ்சுவதுப்போல் கேட்டாள் சாந்தினி.

''இவ ஒருத்தி... நீ அத்தான்னு கூப்பிடறதுக்காக கல்யாணம் பண்ணிக்கவா?''

''ஜோதி... நீ அடம்பிடிக்கறதைப் பார்த்தா எனக்கு சந்தேகமாயிருக்கு... நீ யாரையாவது காதலிக்கிறியா என்ன?''

''அப்பா!'' என்றலறினாள்.

''இதுலே அலர்றதுக்கு என்ன இருக்கு. அந்த மாதிரி அஃபேர் இருந்தா பயப்படாம சொல்லு... உன் அப்பா காதலுக்கு எதிரியில்லே.''

''ஐயோ... என்னை தப்பா நினைச்சிட்டீங்க. நான் உங்கப் பொண்ணுப்பா. படிக்கற காலத்துல படிக்கறதை மட்டும் தான் ஒழுங்கா செய்தேன். எனக்கு மேற்கொண்டு படிக்கணும்னு ஆசை. அதனாலதான் இப்ப கல்யாணம் வேண்டாம்னு சொன்னேன்!''

''இப்ப என்ன? நீ மேலே படிக்கணும் அவ்வளவு தானே? மாப்பிள்ளைகிட்டே சொல்றேன். அவர் படிக்க வைப்பார். தபால் கூட படிக்கலாமே! நம்ம வாழ்க்கையில் சந்தர்ப்பங்கள் எப்பவோ ஒரு முறை தான் வரும். அதை பயன்படுத்திக்கறதுல தான் புத்திசாலித்தனம் இருக்கு. நல்ல பையன் உன்னை எந்தக் குறையுமில்லாம பார்த்துக்குவான். நம்மளைவிட வசதியான இடம்.''

''சரின்னு சொல்லு ஜோதி! இந்த வீட்லே சீக்கிரமே ஒரு நல்ல காரியம் நடக்கணும். நடந்தா கை விட்டுப்போனதெல்லாம் வீடு தேடி திரும்ப வரும்னு ஜோஸியர் சொன்னார்!'' மகளிடம் கெஞ்சினாள் நிர்மலா.

''சரிப்பா...'' என்றாள் ஜோதி.

ஜோதியின் கன்னத்தில் செல்லமாய் தட்டி விட்டு எழுந்துக்கொண்டார் மணவாளன்.

''நான் ஆபீஸ்க்குப் புறப்படறேன் நிர்மலா! சுவ்னிங் தரகரை பார்த்துட்டு நான் வருவேன். லேட்டாகும். பயந்துப்போய் வாசலுக்கும் ஹாலுக்குமாக அலையாதே'' அவளை கிண்டலடித்து விட்டு ஹாலின் வலப்பக்கம் சென்றார்.

அங்கு ஜெயலட்சுமியின் புகைப்படமும், த்தியமூர்த்தியின் புகைப்படமும் ட்டப்பட்டு மாலை போடப்பட்டிருந்தது.

ஒரு நிமிடம் அந்த படங்களின் முன் நின்று கை கூப்பி வணங்கி விட்டு... வெளியேப் புறப்பட்டார்.

# 18

சங்காபுரம்.

அரசாங்க பொது மருத்துவமனை!

ஐம்பது வயது மதிக்கத்தக்க அந்த பெரியவர் கை கூப்பி வணங்கினார்.

''இத்தனை வருஷமா, பொறுமையோட, ம்பிக்கையோட என்னை பாதுகாத்து, ரிருள்ள மனுஷனா மறுபிறவி கொடுத்த உங்க ல்லாரையும் நான் மறக்கமாட்டேன்.''

ணர்ச்சி வசப்பட்டதில் அவர் கைகள் டுங்கின.

வயதில் மூத்த டாக்டர் புன்னகையுடன் அவர் தோளில் தட்டிக் கொடுத்தார்.

''எங்களாலேயும் உங்களை மறக்க டியாது மிஸ்டர் சத்யமூர்த்தி. இந்த ஹாஸ்பிடலைப் பொறுத்தவரை நீங்க ஹீரோ ான். இப்படியொரு பேஷண்டை எங்க ஹாஸ்பிடல் சந்திச்சது இது தான் முதல் முறை. ட்டத்தட்ட இருபது வருஷமா கோமாவுல ருந்து... பிழைச்செழுந்திருக்கீங்க. இதுல ரட்டிப்பு சந்தோஷம் என்னான்னா... நீங்க ஒரு னநோயாளியாகவும் இருந்திருக்கீங்க. இப்ப மூக்க குணமாகி எழுந்திருக்கீங்க. உங்களுக்கு ந்த உதவி தேவைப்பட்டாலும் என்னைத் தேடி ாங்க. செய்ய காத்திருக்கிறேன்.''

''ரொம்ப நன்றி டாக்டர்!''

''இந்தாங்க... இது என்னோட ன்பளிப்பு. உறவுகளை தேடிப்போறீங்க. ணை செலவுக்கு பயன்படும்!''

பேச வாய் வராது கண்ணீர் மல்க கைகூப்பினார் சத்தியமூர்த்தி.

பஸ் சேலத்தை நோக்கி சென்றுக் கொண்டிருந்தது. மூச்சை 'ஹா'வென உள்ளிழுத்து காற்றை சுவாசித்தார். சிறையிலிருந்து விடுதலையான உணர்வு!

'இருபது வருடங்கள்! அப்பப்பா... என் வாழ்நாளில் பாதி ஆயுளை சவமாய் கழித்திருக்கிறேன். என் நிம்மி என்னைக் காணாது எப்படியெல்லாம் துடித்தாளோ? தவித்தாளோ? அம்மா பாவம்! என் மேல் ரொம்ப பாசமாய் இருந்தாள். இப்போது இன்னும் நரைத்து, வயதான குடுகுடு கிழவியாய் இருப்பாள். ஏன், இப்போது நான் மட்டும் எப்படியிருக்கிறேனாம்? ஐம்பது வயது. ஆனால், பார்க்க அறுபது, அறுபத்தைந்து வயதானவன் போல் இல்லையா?

நரேஷ்? ஜோதி? பெரிதாய் வளர்ந்து விட்டிருப்பார்கள். என்னைப் பார்த்தால் அடையாளம் கண்டுக் கொள்வார்களா? சே.. சாமியார் மாதிரி வளர்த்திருக்கிற தாடியுடன் போகிறேனே? எப்படி கண்டுபிடிப்பார்கள்? இருக்கட்டும்... இருக்கட்டும்... இதை வைத்தே கொஞ்ச நேரம் அவர்களை ஏமாற்றலாம். அதன் பிறகு நான் யார் எனத் தெரிந்து படுகிற சந்தோஷத்தை அனுபவிப்பதே தனி இன்பம் தான்.

மணவாளன்! அவனுக்கும் கல்யாணமாகி, குழந்தைகள் குடும்பம் என்று செட்டிலாகி இருப்பான்.

ஜோதி... கடைசியாய் வீட்டை விட்டு நான் சென்ற போது ஜோதியுடன் தானே சென்றேன்? எனக்கு விபத்து ஏற்பட்ட போது அவளும் கூடவே இருந்தாளே! ஒருவேளை... அவளுக்கும்... ஐயோ... கற்பனை செய்யக்கூட முடியவில்லையே! கடவுளே... அவளுக்கு எதுவும் ஆயிருக்கக்கூடாது. அவள் உயிருடன் இருக்க வேண்டும். கண்களை மூடி கடவுளை இறைஞ்சியவனுள்ளே மறுபடி அந்தக் காட்சி வந்து சென்றது.

இவன் ஜோதியை அணைத்தபடி எதையோ தேடி செல்கிறான். எதை தேடி என்று சரியாய் புரியவில்லை. வெகு தூரம் வந்து விடுகிறான். இவன் வயதொத்த இளைஞன் ஒருவன் இவனைப் பார்த்ததும் திடுக்கிட்டு, ''ஏய்... நீ பைத்தியம் தானே? இந்தக் குழந்தையை எங்கேர்ந்து திருடிக்கிட்டு வர்றே?'' என்று கேட்கிறான்.



சத்தியமூர்த்திக்கு பதில் கூறத்
தெரியவில்லை. மலங்க, மலங்க
விழிக்கிறான்.

அவன் மறுபடி மிரட்டுகிறான். ஒரு
கட்டத்தில் சத்தியமூர்த்தியிடமிருந்து குழந்தையை
பிடுங்குகிறான். சத்தியமூர்த்திக்கும், அந்த
குழந்தை நம் சொந்தம் என்ற உணர்வு மேலோங்க
அவனிடமிருந்து பிடுங்க... சற்று தூரத்தில்
வெறித்தனமாய் வந்துக் கொண்டிருந்த சரக்கு லாரி,
கடைசி நேரத்தில் பிரேக் போட்டும் பயனின்றி
அவர்கள் மீது மோத... பலத்த காயத்துடன் தான்
தூக்கி எறியப்பட்டது வரை தான்
நினைவிருக்கிறது. அப்போதே கோமாவிற்கு
போய் விட்டான்.

டிரைவரும், கிளீனரும் இவனை மட்டும்
தூக்கி லாரிக்குள் போட்டுக் கொண்டது அரை
மயக்கத்தில் புரிந்தது.

ஜோதி அதிர்ஷ்டவசமாக தூக்கி எறியப்பட்டு
ரோட்டோரமாய் குவிக்கப்பட்டிருந்த மணலில்
விழுந்து காயமின்றி தப்பியதோ, அந்த இளைஞன்
நசுங்கி, இறந்துப்போனதோ தெரியவில்லை.
இவனைக்கூட லாரியில் அள்ளிப்போட்டு
கொண்டு, ஈரோடு பக்கமாய் ரோட்டோரம்
போட்டுவிட்டுப் போய் விட்டதன் காரணம்
இவன் பிழைத்தெழுந்து, விபத்திற்கு காரணம்
இந்த லாரி தான் என்று காட்டிக்கொடுத்து
விடுவானோ என்கிற பயத்தால் தான்.

ரோட்டோரம் கிடந்தவனை போலீஸ் தான்
அரசு மருத்துவமனையில் சேர்த்தது.

'என் வாழ்நாட்களில் பாதி வீணாகிப்போய்
விட்டது. ஹ்ஹூம்...'

பஸ்ஸை விட்டு இறங்கி நடந்தவன்
பிரம்மித்துப் போனான்.

ஊர் தலைகீழாய் மாறியிருந்தது. குடிசை
வீடுகளும் ஓடுவீடுகளும், மாடி வீடுகளா
காம்ப்ளக்ஸாய் மாறியிருந்தது.


இவன் குடியிருந்த வீடு சுத்தமாய் காணோம்.
அந்த இடத்தில் ஒரு பெரிய காம்ப்ளக்ஸ்தான்
இருந்தது. கிட்டத்தட்ட தெருவின் பாதி வீடுகளை
காணோம், பெரியவர்கள் நிறையப் பேர் இப்போ
உயிரோடில்லை. இருப்பவர்களுக்கு இவனை
அடையாளம் தெரியவில்லை. ஒரு பெண்மணி
மட்டும், "ஜெயலட்சுமி குடும்பமா? பெரி
பையன் இறந்ததும், சின்னப் பையனோ
ஊருக்குப் போய்ட்டாங்களே" என்றாள்.

ஏமாற்றத்துடன் சென்னைக்கு பஸ் ஏறினா

மணவாளன் பணிபுரிந்த அலுவலக
அவருக்குத் தெரியும்.

அவனைப்பற்றி விசாரித்த போ





சத்தியமூர்த்தியை ஏற இறங்கப் பார்த்தார் சக ஊழியர் ஒருவர்.

''நீங்க யாரு? மணவாளனுக்கு என்ன வேணும்?''

'பரிதாபமான தோற்றத்திலுள்ள நான் அவனுடைய அண்ணன் என்று சொன்னால் நம்ப மாட்டார்கள். தவிர, இது தம்பிக்கு தான் அசிங்கம்.'

''நான் அவரோட தூரத்து உறவுங்க!''

''இன்னைக்கு சார் லீவாச்சே! அவரோட பொண்ணுக்கு இன்னைக்கு கல்யாணம்!''

சந்தோஷத்தில் உடல் சிலிர்த்தது.

'மணவாளனின் மகளுக்குத் திருமணமா? ஒரு நல்ல சுபமுகூர்த்த நேரத்தில் நான் என் குடும்பத்தை சந்திக்கப்போகிறேனா?'

''ஐயா... கல்யாணம் ' எங்கே நடக்குதுன்னு சொன்னீங்கனா ரொம்பப் புண்ணியம் உங்களுக்கு!''

''அவர் வீட்டுக்கு அடுத்த தெருவிலேயே கல்யாண மண்டபம்... ஓ... வீடு தெரியாதுல்லே? சைதாப்பேட்டையிலே...'' அவர் சொல்ல.. மனதில் குறித்து நன்றி சொல்லிப்புறப்பட்டான் அவசரமாக.

நெஞ்சு படபடத்தது. இதயம் சடுகுடு விளையாடியது.

'இதோ... சில நிமிஷங்களில், என் நிம்மியை, வசந்தத்தை, தவறவிட்ட என் வாழ்க்கையை கைப்பற்றப்போகிறேன்!'

ஆட்டோவில் அந்த தெரு முனையில் இறங்கிக் கொண்டார்.

இடப்பக்கமாய் ஒரு வீட்டின் முன் ஒலிபெருக்கியில் பாடல் அலறிக் கொண்டிருக்க, தோரணங்களாலும், சீரியல் பல்புகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த வீடு தான் மணவாளன் வீடு என்பது தெளிவாக.. விரைந்து நடந்தார்.

வீடு திறந்து தான் இருந்தது.

சொல்லில் வடிக்க முடியாத உணர்வுடன் வீட்டினுள் கால் வைத்தார்.

வீட்டிற்குள் ஒரு சிலர் தான் இங்குமங்கும் பரபரப்புடன் அலைந்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருத்தர் முகம் கூட பரிச்சயமானதாய் இல்லை. ஆதங்கத்துடன் தேடினார்.

'எல்லோரும் மண்டபத்திற்கு போய் விட்டார்கள் போலும்!'

திரும்ப வாசலை நோக்கிச் 'செல்ல எத்தனித்தவனின் கண்கள் அந்த போட்டோவைப் பார்த்துவிட்டன.

ஜெயலட்சுமியின் போட்டோவிற்கு மாலை அணிவிக்கப்பட்டிருந்தது.

''அ..ம்..மா.. அம்மா... போய்ட்டியாம்மா? மகன் திரும்பி வந்திருக்கிறதை பார்க்காமலேயே போய் சேர்ந்திட்டியாம்மா? உயிரோடிருந்தும் உனக்கு கொள்ளிப்போட முடியாத பாவியாகி விட்...'' சட்டென அழுகை நிற்க.. இன்னும் அதிர்ந்தான்,

காரணம்...

இவன் போட்டோவிற்கு மாலை போடப்பட்டிருந்தது தான்!

'அப்படியானால்... அப்படியானால்... நான் இறந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்களா?' மனசு வலித்தது.

ஆனால், அடுத்தபடியாக இன்னொரு அதிர்ச்சியும் அவனுக்கு காத்திருந்தது.

சற்றுத்தள்ளி மணவாளனும், நிர்மலாவும் சேர்ந்து எடுத்துக் கொண்ட போட்டோ!

இதயம் வெடித்து சுக்குநூறானது.

'நி...ம்...மி... எ... என்னம்மா இது! இப்படியொரு அதிர்ச்சியை சந்திக்கவா மீண்டு வந்தேன்? என் வாழ்க்கையில் மீண்டும் வசந்த வரும் என்கிற நம்பிக்கையோடு தேடி, ஓடி வந்தேன்? ஆனால், ஆனால்...' சரம் சரமாய் கண்ணீர் வழிந்தது.

'ஒரு போட்டோவில் குடும்ப மொத்தமும் இருந்தது. நரேஷ், ஜோதியோடு மணவாளனின் சாயலில் இருந்த சாந்தினி... எல்லாமேப் புரிந்தது. ஒரே ஒரு நிம்மதி ஜோதி உயிரோடிருக்கிறாள். அந்த குழந்தை முகம் இன்னும் மாறவேயில்லை.

வலியை கிரஹித்துக் கொண்டார்.

'யாரை சொல்லி என்ன இருக்கிறது எல்லாம் நடந்து முடிந்து விட்டது. நான் இறந்து விட்டேன் என்று முடிவுக்கட்டி இந்தத்திருமணம் நடந்திருக்கிறது. என் விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி வைத்துப்பார்த்தா மணவாளனின் மகத்தான தியாகம் புரிகிறது.'

''யார் நீங்க? என்னப் பண்ணிட்டிருக்கீங்க இங்கே?'' அதட்டலான குரல் கேட்டு திடுக்கிட்டு திரும்பினார்.

சாந்தினி நின்றிருந்தாள்!

கையில் பிளாஸ்டிக் துணிப்பை! மறந்து வைத்து விட்டு வந்த புடவையை எடுத்து வரச்சொல்லி நிர்மலா வீட்டிற்கு அனுப்பியிருந்தாள். அதை எடுத்துக் கொண்டு அறைக்குள்ளிருந்து வெளிப்பட்டபோது தா அவரை பார்த்து விட்டாள்.

முகசாயலைப் பார்த்து அவள் யாரெ புரிந்துப்போனது.

''யாருன்னு கேக்கறேனே... இங்கே நின்னுக்கிட்டு என்னப் பண்றீங்க?''

''....''

''மண்டபத்துல வேலை செய்யற ஆள் தானே?''

''அ... ஆமாம்மா... விடுபட்ட சாமானை எடுத்து வரச் சொன்னாங்க...''

''எல்லாம் மண்டபத்துக்குப் போயாச்சு. அதோ, அந்த தேங்காய் மூட்டை மட்டும் தான் கொண்டு போகணும். எடுத்துக்கிட்டுப் போ!'' ஒரு கோணிப்பையை காட்டினாள்.

மூட்டையை எடுத்து தோளில் வைத்துக் கொண்டார்.

''என் பின்னாலேயே வா!'' என்றபடி வீட்டைப்பூட்டிக் கொண்டாள்.

''பாப்பா... உன் பேரென்னம்மா?''

''சாந்தினி!''

''உன் அக்காவுக்கு தான் கல்யாணமா?''

''ஆமாம்... எங்க ஜோதி அக்காவுக்கு தான் கல்யாணம். மாப்பிள்ளை பெரிய இடம். எவ்வளவு அழகாயிருக்கிறார் தெரியுமா?'' அவர் யாரென்பதை மறந்து குழந்தைத்தனமாய் பெருமையடித்துக் கொண்டே வந்தாள்.

'ஜோதி... ஜோதிக்கா? என் மகள் ஜோதிக்கா?' நெஞ்சு சந்தோஷத்தில் விம்மியது.

மண்டபத்தில் தேங்காய் மூட்டையை வைத்து விட்டு, மணவறை அருகே ஒரு தூணின் பின்னே மறைத்துக் கொண்டார்.

தேவதைப் போல் அலங்கரிக்கப்பட்டு மணமகளாய் அமர்ந்திருந்த மகளை கண்ணீர் மல்கப் பார்த்தார்.

'கம்மா சொல்லக்கூடாது. என் மகளுக்கு தேவகுமாரன் போல மாப்பிள்ளைப் பார்த்திருக்கிறான் மணவாளன்.

அதோ... அவன் தானே நரேஷ்? ஜோதியின் காதருகே குனிந்து ஏதோ கிசுகிசுக்க... என் மகள் எவ்வளவு அழகாய் வெட்கப்படுகிறாள்? நரேஷ் அசப்பில் என்னை மாதிரியே இருக்கிறான். சாந்தினி சொன்னாளே... எங்க அண்ணன் என்ஜினீயரிங் படிக்கிறார் என்று. நான் இருந்து ஆளாக்கியிருந்தால் கூட இத்தனையிற்கு செய்திருப்பேனா? என் தம்பி எங்கே?'

''முகூர்த்தத்துக்கு நேரம் நெருங்குது'' என்று ஐயர் குரல் கொடுக்க... பரபரப்பு பற்றிக் கொள்ள, உறவுக் கூட்டம் மணவறையை நிரப்பிக் கொண்டது.




வாணியம்பாடி டாக்டர் அக்பர் கவுஸரின்

**100 படுக்கைக்கொண்ட மூலிகை மருத்துவமனை**



பல்கலைக்கழகங்கள் பாராட்டுகின்றன

மருத்துவமனை கட்டிடம்

கிட்னி ஃபெயிலியருக்கு அஷ்வகந்தா-500 நல்ல மருந்து – சென்னை பல்கலைக் கழகம் பாராட்டு!
ஹார்ட் நோய்க்கு அல்கவுஸர் நல்ல மருந்து – சிங்கப்பூர் பல்கலைக்கழகம் பாராட்டு!
காசினிப் பவுடர், காசினி கேப்சூல், சர்க்கரை, மூட்டுவலி குண்டான உடல் இளைக்க நல்ல மருந்து. இதை தினசரி சாப்பிட்டால் ஊட்டச்சத்தாக மாறுகிறது – கோவை அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் பாராட்டு!
கவுஸரி – 500 போதைப் பழக்கத்தை ஒழிக்க நல்ல மருந்து – சென்னைப் பல்கலைக்கழக நற்சான்று!
காசினி – கிருமிகளை அழிக்கிறது – ஸ்ரீராமச்சந்திரா மருத்துவப் பல்கலைக்கழகம் அறிக்கை!
காசினி – ஆர்த்ரைட்டிஸ், சர்க்கரை நோய்க்கு நல்லது – டாக்டர் எம்.ஜி.ஆர் பல்கலைக்கழகம் ஆராய்ச்சி!
வயதானவர்களுக்கு காசினி சிறந்த உணவு அவர்களின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் நல்ல மருந்து – பெங்களூர் பல்கலைக்கழகம் பாராட்டு!
இவ்வளவு சிறப்புமிக்க மூலிகைகளை கண்டுபிடித்தவர் உங்கள் காசினி டாக்டர் அக்பர் கவுஸர் அவர்கள்.
குழந்தை இல்லா பிரச்சினை, ஆண்மைப் பிரச்சினைகள், பாரிச வாயு, நரம்புத்தளர்ச்சி, உடல் உறுப்பு சரியாக வளர்ச்சி அடையாமை இவைகளுக்கு ஆயிரம் ஆண்டு அரேபியர்களின் துர்கிஷ்பாத் மூலிகைக் குளியல்.
வலிகளைப் போக்க சீனர்களின் ஐந்தாயிரம் ஆண்டு அக்குபஞ்சர் சிகிச்சை.
மேலும் எல்லா நோய்களுக்கும் உலகப் புகழ்பெற்ற வாணியம்பாடி டாக்டர் அக்பர் கவுஸரின் நேரடி பார்வையில் தகுதி வாய்ந்த யுனானி மருத்துவர்கள் சிகிச்சை அளிக்கின்றார்கள். 100 படுக்கை வசதிகள் கொண்ட இந்த மருத்துவ மனையில் தங்கும் வசதி இலவசம். நேரில் வரமுடியாதவர்கள் தபால் மூலமும் மருந்துகளைப் பெற்று சிகிச்சைப் பெறலாம். மாதந்தோறும் பயர்கள் டாக்டர் அக்பர் கவுஸரின் தெய்வீக மருத்துவம். தினசரி சாப்பிடுங்கள் டாக்டர் அக்பர் கவுஸரின் காசினி பவுடர், காசினி கேப்சூல். உலகம் முழுவதும் ஏஜெண்டுகள் தேவை.
தொடர்புக்கொள்ள வேண்டிய முகவரி: டாக்டர் அக்பர் கவுஸரின் தெய்வீக மருத்துவம் 370, கஷி வீதி ரீயு டவுன், வாணியம்பாடி – 635 752. வேலூர் மாவட்டம். தொலைபேசி: 04174 - 235395, 235390

அப்போது தான் அவர்களைப் பார்த்தார். முகம் கொள்ளா சிரிப்புடன், மஞ்சள் மினு மினுக்க மகாலட்சுமி போல் நிர்மலாவும், அவள் பக்கத்தில் கனிவான முகத்துடன் மணவாளனையும்! கண்கள் பொங்கியது.

"கெட்டி மேளம்... கெட்டி மேளம்"

ஜோதியின் கழுத்தில் மூன்று முடிச்சு விழ... அட்சதை பூமழையாய் விழுந்தது.

'நல்லாயிரு... மகராசியா... பூவும் பொட்டுமாய் நீடுழி வாழணும் மகனே!' பெற்ற தகப்பன் மறைந்திருந்து அட்சதையைத் தூவினார்.

மணமக்கள் மணவாளன்-நிர்மலாவின் காலில் விழுந்து வணங்கினர்.

உணர்ச்சி வசப்பட்ட இருவருமே கண்களை துடைத்தபடி வாழ்த்தி அவர்களை தூக்கி நிறுத்தியதை... நெகிழ்ச்சியுடன் பார்த்த சத்தியமூர்த்தி... அதற்கு மேல் அங்கு நிற்பது சரியல்ல என்றுணர்ந்து... வெளியேறினார்.

'உங்களைப் பொறுத்தவரை நான் இறந்தவன். சுடுகாட்டிற்கு போன பிணம் மறுபடி வீட்டிற்கு வரக்கூடாது. நான் உயிரோடிருப்பது தெரிந்தால்... இப்போதிருக்கும் நிம்மதியும் சந்தோஷமும் தொலைந்துப்போகும். அழகிய தேன் கூடு சிதைந்து விடும்.' என்னுடைய சுயநலத்துக்காக... உங்கள் நிம்மதியை பலி கொடுக்க மாட்டேன்! இந்த முதியவனுக்கு எத்தனையோ இல்லங்கள் இருக்கிறது. அங்கு இளைப்பாறும் கூட்டுப்பறவைகளோடு பறவையாய் ஒரு கிளையில் நானும் இளைப்பாறி விட்டுப்போகிறேன்!'

நெஞ்சுக்குள் வேதனை அப்பியிருந்தாலும்... அதையெல்லாம் மீறி, எல்லோரையும் பார்த்து விட்ட நிம்மதியோடு... நடந்துச் சென்ற அவரை எதிரே நண்பர்களுடன் சிரித்துப்பேசிக் கொண்டு வந்த நரேஷால் கூட அடையாளம் காணமுடியவில்லை.

எல்லாவற்றையும் தொலைத்தவர் அல்லவா? தன் அங்க அடையாளங்களையும் தொலைத்து விட்ட பரிதாபத்துக்குரிய பிறவி.

தேடினால் கிடைப்பதில்லை. கிடைத்தாலோ நிலைப்பதில்லை. சில நெற்றிகளில் எழுதப்படும் விதியின் எழுத்து கொடூரமானதாகத்தான் இருக்கிறது.

நடந்தவர்... சற்று நின்று திரும்பி அந்த மண்டபத்தை நோக்கி கைகுவித்து வணங்கினார்.

'எல்லோரும் சந்தோஷமா... நீடுழி வாழணும்!'

அதன்பின் விறுவிறுவென நடந்தார்.

★★ (முற்றும்) ★★



## 'இரட்டை' விநாயகர்

வாரணாசியின் வினோத விநாயகர் சிலை, காண்போரை கவர்ந்திழுத்து வருகிறது. ஆம், இந்த விக்கிரகம் எடுத்திருப்பது இரட்டை அவதாரம். சிவபெருமானுக்கே உரித்தான அர்த்தநாரீசுவரம் விநாயகர் சிலையிலும் விசுவரூபம் எடுத்துள்ளது.

'ட்வின்ஸ்' விநாயகரை வெண்கல கடைசலில் வடித்தெடுத்தவர் சக்சேனா என்பவராவார். வாரணாசியில் இவருக்கு சொந்தமான ஸ்டீல் அமால்கமேஷன் தொழிற்சாலை இருக்கிறது. இரட்டை விநாயகர் வெண்கலப் பரிணாமம் பூண்டது இங்கேதான்.

ஆக்லாந்தில் வசிக்கும் ஆன்மீக தொழிலதிபர் சட்டோபாத்யா என்பவருக்காக சக்சேனா இதனை கடைந்தெடுத்து உள்ளார். இவரின் கைங்கர்யத்தில் 'டபுள்' வதன விநாயகர் சிலை தங்கம் போல தகதகக்கிறது. இரட்டை பிள்ளையார் இன்னும் சில தினங்களில் லண்டனுக்கு பறந்துவிடுவார்.

-முத்துமாரி.